
# பெயல் மணக்கும் பொழுது

ஈழப் பெண் கவிஞர்கள் கவிதைகள்



தொகுப்பு

அ. மங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயல் மணக்கும் பொழுது

## ஈழப் பெண் கவிஞர்கள் கவிதைகள்

தொகுப்பு

**அ. மங்கை**

பின்னுரைகள்

சித்திரலேகா மௌனகுரு

வ. கீதா

அ. மங்கை

**மாற்று**

புதிய வெளிகளுக்கான

புத்தகப் பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்று வெளியீடு - 1

# பெயல் மணக்கும் பொழுது
ஈழப் பெண் கவிஞர்கள் கவிதைகள்

***Peyal Manakkum Pozhudhu***

A Collection of Women's Poetry from Eezham

தொகுப்பு :
அ. மங்கை

உரிமை :
கவிஞர்களுக்கு

முதல் பதிப்பு :
சித்திரை 2038 (மே 2007)

வெளியீடு :
மாற்று
1, இந்தியன் வங்கி காலனி
வள்ளலார் தெரு, பத்மநாபா நகர்
சூளைமேடு, சென்னை-94.
செல் பேசி: 9382853646

கணினி அச்சு :
அடவி வரைகலை
சென்னை-78.
பேசி: 24742886

அச்சு :
வைகை பிரிண்டர்ஸ்
சென்னை-15

விலை :
உரூ. 130/-

ஈழப் பெண்
படைப்பாளிகள்
அனைவருக்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுத்தலின் நிமித்தம்...

**பெயல் மணக்கும் பொழுது** என்ற தலைப்பின் பின்புலத்தைச் சொல்ல வேண்டியது அவசியம். மஹாஸ்வதாதேவியின் **குருஷேத்திரத்திற்குப் பின்** என்ற சிறுகதையில் யுத்தத்தில் மாளும் காலாட்படையினரின் இளம் மனைவியர் ஐவர், இளம் விதவையும் கர்ப்பிணியுமான உத்தரையின் தோழிகளாக அரண்மனையில் வசிக்கின்றனர். அரண்மனைவாசிகளான பெண்களுக்கு மத்தியில் இந்த ஐவரும் புதியதொரு சக்தியோடு உலவுகின்றனர். ஒரு நாள், முதல் மழையின் வாசம் எழுகிறது; மண் ஆறுகிறது. இந்த ஐவரும் தமது நாடு செல்ல ஆயத்தமாகின்றனர். விவசாயம் தொடங்கும் பருவம். குவியல் குவியலாகச் சடலங்களை எரித்த சூடு கால்களைத் தீய்த்ததால், குருஷேத்திர மண்ணில் நடக்க முடியாது அரண்மனையில் தங்கிவிட்டதைக் கூறுகின்றனர். இப்போது - முதல் மழையில் மண் ஆறுகிறது. பயிர் தழைக்க வேண்டும். இதுவே பெயல் மணக்கும் பொழுது தொகுப்பின் ஆதார சுருதி.

ஈரக் கசிவை மறந்து தீய்க்கும் நெருக்கடி மிக்க மண்ணில் இருந்து கசிவுகளை உடலிலும் மனத்திலும் சொல்லிலும் செயலிலும் சுமக்கும் பெண்களின் பெயல் இது. சளியும் மூத்திரமும் சீழும் உதிரமும் பாலும் கண்ணீரும் ஒழுகும்; வழியும். மடைகடந்து பாயும்போது அதன் மணமும் நாற்றமும் (!) வீச்சமடிக்கலாம். ஆனால் அது உயிர்ப்பின் அடையாளம்.

1986 *சொல்லாத சேதிகள்* தொகுப்பில் தொடங்கிய ஈழப் பெண் கவிஞர்களின் *பயணம்*, *மறையாத மறுபாதி*, (2ஆம் பதிப்பு, 1993), *உயிர்வெளி*(1999), *வெளிப்படுதல்* (2001), *எழுதாத என் கவிதை*(2001) என்று கடந்த இருபதாண்டுகாலமாக விரிந்துள்ளது. சிவரமணி கவிதைகள் தொகுக்கப்பட்ட பின்னர், *செல்வி- சிவரமணி கவிதைகள்*, ஒளவையின் *எல்லை கடத்தல்*, ஆழியாளின் *உரக்கப்பேசு*, *துவிதம்*, சுல்பிகாவின் *உயிர்த்திருத்தல்*, மைதிலியின் *இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள்*, பெண்ணியாவின் *என் கவிதைகளுக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை*, நளாயினி தாமரைச்செல்வனின் *நங்கூரம்*, *உயிர்த் தீ*, லுணுகலை ஹஸீனா புஹாரின் *மண்ணிழந்த வேர்கள்*, மேஜர் பாரதியின் *காதோடு சொல்லி விடு* ஆகிய தொகுதிகள் என் பார்வைக்குக் கிட்டின. எனக்கு இன்னும் கிட்டாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலரஞ்சனி சர்மாவின் *மனசின்பிடிக்குள்*, *கோசல்யா கவிதைகள்*, அம்புலியின் *மீண்டும் துளிர்க்கும் ஒரு வசந்தம்*, அனாரின் கவிதைத் தொகுதி என்று பட்டியல் நீள்கிறது. ஒருபுறம் அச்சு விரிவாக்கம், ஈழத் தமிழர்களுக்கு சாத்தியமாகியுள்ள சந்தை போன்ற பொருளாயத காரணிகள் உள்ளன; மறுபுறம் தமது இருப்பின் அடையாளமாக எழுத்தை மட்டுமே தக்கவைத்துக் கொள்ளும் தத்தளிப்பின் வெளிப்பாடாகவும் இத்தொகுப்புகள் உள்ளன. இத்தொகுப்புகளின் பரவலான அறிமுகம், ஆழமான விமரிசனங்கள், இவற்றில் உருவாகத் தொடங்கியுள்ள புதிய போக்குகளை உன்னிப்பார்த்தல் போன்றவை நிகழ்ந்ததாகக் கூறமுடியவில்லை. ஈழத்திற்குள் பல இடங்களில் புலம் பெயர்ந்து வாழும் மக்கள், புகலிட வாழ்வோர் மத்தியில் இவ்வெழுத்துகள் அனைத்தும் சென்றடைவதில் சிக்கல்கள் பல உள்ளன. எல்லாத் தொகுதிகளும் தமிழகத்தில் பரவலாகக் கிடைப்பதும் வெளியிடப்படும் போது உரிய பின்புல விவரிப்போடு வெளிவருவதும் அரிதாகவே உள்ளன. இத்தனைச் சிக்கல்களை மீறி இத்தனைப்பேருடைய எழுத்துகள் கிட்டியதே மிகப்பெரிய சொத்தாகத் தோன்றுகிறது.

தமிழகத்தில் இது தொகுப்புகளின் காலம். பலரது முழுப் படைப்புகளும் முழுத் தொகுதிளாக வெளிவருகின்றன. ஈழம் குறித்த தொகுப்புகள் தமிழவன், திருநாவுக்கரசு போன்றோரால் வெளியிடப்பட்டுள்ளன. மற்றும் *இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்* (2006) என்ற பெருந்தொகுதி ஒன்று வெளிவந்துள்ளது. இவற்றிலும் பல பெண் குரல்கள் இடம்பெற்றுள்ளன. பதினொரு ஈழத்துக் கவிஞர்கள் (1984) தொகுப்பு வெளிவந்த காலத்திற்கும், இப்போதைக்குமான வேறுபாடு இதுதான். 'நிராகரிக்க முடியாத' இருப்பாக ஈழப் பெண் கவிஞர்களின் குரல்கள் பதிவாகியுள்ளன என்பதை இவை காட்டுகின்றன.

*பெயல் மணக்கும் பொழுது* தொகுப்பில் இடம்பெறும் கவிதைகள் காட்டும் உலகம் தமிழகச் சூழலில் பெண் கவிஞர்கள் வெளிப்பாடு குறித்து கிளம்பும் விவாதங்களின் தளத்தில் இருந்து முழுதும் மாறுபட்டது. பல பெண்களது அகவழிப் பயணம், வாக்குமூலங்கள், கண்டங்கள் மாறினாலும் மாறாது தொடரும் தந்தைமை ஆதிக்க மதிப்பீடுகள், நாளை நிச்சயமற்றுப் போனதால் இன்றே காதல் செய்ய வேண்டிய தவிப்பு, அத்தவிப்பிலும் 'சுயம் இழக்காமல்' இருக்க விரும்பும் உறுதி, பெயர் தெரியாத மரங்கள்/ பூக்கள் மத்தியில் நகரும் வாழ்க்கை, பெயர் தெரிந்தவை எல்லாம் மாறிப்போன கொடுமை என்று விரிகின்றன கேள்விகள்.

இத்தொகுப்பிற்காகத் தேடியலைந்தபோது எழும்பிய கேள்விகள் பல. மாலிகாவின் உதட்டோரம் சுழித்தோடும் புன்னகை கிளப்பும் கவிதைகள், பெண் கவிஞருடையது இல்லை என்பதைத் தெரிந்தபோது என்னுள் எழுந்த ஏமாற்றத்தை எப்படி ஆற்றுவது எனத் தெரியாது போனது. கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களுக்கு, இப்படி ஒரு குரல் உண்டு எனத் தெரிந்த போது. இதுபோன்ற வெளிப்பாடுகளின் தேவை, அவற்றை வெளியிடப் பெண்பெயர் தெரிவு செய்தமை போன்றவற்றை நாம் கட்டுடைக்க வேண்டியது, அவசியம் எனப்படுகிறது. ஆண்மை/ பெண்மை கட்டமைப்புகளின் பின் தொழிற்படும் ஊகங்களைப் புரிந்து கொள்ள வேண்டியதாகிறது. கோவையில் இருந்து வெளிவந்துள்ள *21ஆம் நூற்றாண்டுத் தமிழ் கவிதைகள்* ஆய்வு கட்டுரைத் தொகுப்பில் ப.தமிழரசி என்பவருடைய கட்டுரை முழுக்க முழுக்க மாலிகாவின் கவிதைகளை பெண் கவிஞரின் குரல் என்ற அடிப்படையில் எழுதப்பட்டுள்ளதைக் காணநேர்ந்தது. இன்னமும்... என்னுள் தயக்கங்கள் உள்ளன. இத்தொகுப்பில் இடம்பெறும் எவரேனும் ஆண் கவிஞர்களாக இருப்பாரோ என. முடிந்தவரை உறுதிசெய்துள்ளேன். வ.ஐ.ச. ஜெயபாலன், ஐங்கரநேசன், சித்திரலேகா, ஆழியாள், சுமதிரூபன், தெ.மதுசூதனன் ஆகியோர் இதற்கு பேருதவி செய்தனர். அவர்களது பங்களிப்பின்றி இத்தொகுப்பை நிறைவு செய்வது சிரமமாக இருந்திருக்கும்.

இத்தொகுப்பில் இடம் பெறும் சிலரை நான் நேரில் அறிவேன். பலரை நான் அறிந்ததாக உணர்கிறேன். இன்னும் பலரைச் சந்திக்க ஆவலாக உள்ளேன். இவர்களுள் ஒவ்வொருவரது ஆளுமை, சிந்தனை, அரசியல் தெரிவு ஆகியவற்றில் எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. இத்தொகுப்பில் அனைவரும் ஒரு சேர இருப்பதைக் குறித்து அக்கவிஞர்களுக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். வெவ்வேறு அரசியல் சார்பும் சிந்தனையும் கொண்டவர்கள் என்ற வகையில் அது நியாயமானதும் கூட. ஆனால், தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஈழப் பெண் கவிஞர்கள் கவிதைத் தொகுதி என்ற வகையில், அனைத்துத் தரப்பையும் இணைப்பது எனக்கு அவசியமாகப்பட்டது. அதைவிடக் கூடுதலாக வேறுபாடுகளை ஒருங்கே வைப்பது வளமான வாசிப்பிற்கு வழிகோலும் என்றும் நான் நம்புகிறேன். எனது அடிமன உந்துதலும் படைப்பாளிகளான இப்பெண்களோடு நான் நடத்தும் உரையாடலும் இதுவாகும். இதனை எனது தோழிகள் ஏற்பார்கள் என நம்புகிறேன்.

இக்கவிதைகளை நான் எடுத்த தொகுதிகள், இதழ்கள், மலர்கள் குறித்த விவரத்தை ஒவ்வொரு கவிதையோடும் இணைத்துள்ளேன். தொகுதி யாக்கத்தில் இடம்பெற வேண்டிய முக்கிய தரவுகள் அவை என்றும் கருதுகிறேன். அதன் மூலம் பெண்கள் என்ற ஒரே அடையாளத்தை மட்டுமின்றி, இப்பெண்களின் சார்புத் தன்மையும் செயல்களமும் வெளிப்படும் எனக் கருதுகிறேன். இத்தரவுகளைத் தராத காரணத்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலத்தோடு ஒப்பிடவும், விடுபட்ட/ மாற்றப்பட்ட சொற்கள்/ வரிகளைக் கண்டறியவும் வாய்ப்பின்றிப்போகிறது. அடிப்படை அச்சு அறமாக இதைக் கருதிச் செயல்பட வேண்டிய அவசியத்தை, தமிழகத்தில் இன்று வலியுறுத்த வேண்டிய தேவை உள்ளது.

இத்தொகுப்புக்காகப் பலரைத் தொடர்பு கொள்ள நேரிட்டபோது, இத்தகைய தொகுப்பு முயற்சியை குட்டிரேவதி சிலகாலம் முன்பு மேற்கொண்டது தெரியவந்தது; அ.வெண்ணிலா சாகித்திய அகாதமிக்காக தொகுத்துள்ள பெண் கவிஞர்கள் கவிதைகளில் ஈழக் கவிஞர்களும் இடம் பெற்றுள்ளனர் என்று குறிப்பிட்டதாக அறிந்தேன். இத்தொகுதியைத் தொடக்கப்புள்ளியாகக் கொண்டு விடுபட்டுப்போன கவிஞர்கள், கவிதைகள், வேறுபட்ட அணிசேர்க்கை, பலப்பல வாசிப்புகள் கொண்ட பலதொகுதிகள் வரும் என நம்புகிறேன்.

இத்தொகுப்பு முறைமை கூடியவரை அனைத்து தரப்புப் பெண் குரல்களையும் ஒருசேரப் பதிவு செய்வது என்பதாகவே உள்ளது. கவிஞர்களை அகரவரிசையில் வெளியிடுவதன் மூலம் இந்த இருபதாண்டுக் காலச் சூழலுக்குள் நிகழ்ந்துள்ள மாற்றங்கள், முரண்கள் போன்றவற்றைக் கொண்டுவர இயலாமல் போனது. இலக்கியத்தின் அழகியல் அளவுகோல், தனிப்பட்ட இரசனை மட்டங்கள் போன்றவற்றை இதுபோன்ற தொகுதிக்குள் கொண்டுவர நான் விரும்பவில்லை. வாழ்வா/சாவா என்ற போராட்டத்தில், மூச்சுவிடத் திணறும் சூழலில் வெளிவரும் இக்கவிதைகளைக் கூறுபோட்டு, கூவி விற்க நான் தயாராக இல்லை. அதற்கான மனம் என்னிடம் இல்லை.

தொகுப்பு முறைமை குறித்து இத்தனை விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணம் தமிழகத்தில் வெளிவரும் / வெளிவந்த ஈழம் தொடர்பான தொகுப்புகள் தொடர்பான எனது விமரிசன நோக்கினால் எழுந்தவை. சொல்லாத சேதிகள் யாழ்ப்பாணப் பெண்கள் ஆய்வு வட்டத்தால் வெளியிடப்பட்டது; அதனை சிலிக்குயில் மறுபிரசுரம் செய்தது மிக உயர்ந்த நோக்கத்தோடுதான். ஆனால் அதில் இருந்து தொடங்கிய யார் கவிதை, யார் பெயரில் போடப்பட்டுள்ளது என்ற விவாதம் **பறத்தல்: அதன் சுதந்திரம்** தொகுப்புக்கான விமரிசனங்கள் வந்தபோது வெளிப்பட்டன. அதைப் பற்றி சித்திரலேகா இந்நூலிற்கான பின்னுரையில் விளக்கியுள்ளார்.

அதேபோல செல்வி- சிவரமணி கவிதைகளை தாமரைச் செல்வி பதிப்பகம் வெளியிட்டபோது பதிப்பாளர், பெண்கள் ஆய்வு வட்டம் **சிவரமணி கவிதைகள்** தொகுப்பைக் குறிப்பிடுகிறார். சித்திரலேகா மௌனகுரு அவர்களுக்கு நன்றி சொல்கிறார். சித்திரலேகா சிவரமணி கவிதைகள் தொகுப்பிற்கு எழுதிய முன்னுரை இதிலும் இடம் பெற்றுள்ளது. ஆனால் நூல் வெளிவந்த பின்னரே சித்திரலேகாவிற்கு இத்தகவல் தெரியும். பெருந்தன்மையுடன் கவிதைகள் பரவலாகச் செல்வதை மட்டுமே நினைந்து அதனை அவர் ஏற்றுக் கொண்டார். இத்தொகுதிக்கான பதிப்புரிமை பதிப்பாளர் ப.திருநாவுக்கரசு அவர்களுக்கு உரியதென குறிப்பிடப் பட்டுள்ளது. அது எந்த வகை நியாயத்தில் சேரும் என எனக்குத் தெரியவில்லை. தமிழகத்தில் இதைக் குறித்து எந்தப் பேச்சும் கிளப்பப் படவில்லை என்பதை ஈழத் தமிழ் படைப்பாளிகளுக்கு- அதிலும் அகாலத்தில் மரணமடைந்த இரு தோழியர்களுக்குச்- செய்யப்படும் அநீதியாகவே எனக்குப்படுகிறது. இத்தொகுப்பு முயற்சியின் பின்னுள்ள செல்வி, சிவரமணி ஆகியோரின் கவிதை ஆளுமை மீதான மதிப்பு, அவர்களது எழுத்தை வெளிக்கொணர்தல் ஆகிய நல்லெண்ணத்தை நான் மறுதலிக்கவில்லை.

இத்தொகுப்பினால் எழுந்துள்ள இன்னொரு சிக்கல்; தமிழவன் தொகுத்துள்ள ஈழக் கவிதைகள் தொகுதி முன்னுரை முழுதும் செல்வி, சிவரமணி ஆகிய இருவரும் ஒரே நபர் என்ற புரிதல் உருவாகும்படி பெயர்கள் அச்சிடப்பட்டுள்ளன. தமிழவன் தனது வாக்குமூலமாக,

"...ஆண் கவிஞர்களோடு பெண் கவிஞர்களும் புதிய முறையில் உருவாகி வந்ததும் என்னால் சரியாக உணரப்படவில்லை" (IV) எனக் குறிப்பிடுகிறார். ஈழக் கவிஞர்களை மூன்று தலைமுறைகளாகப் பிரிக்குமவர், மஹாகவி போன்ற மூத்த தலைமுறை, இரண்டாவதாக ஜெயபாலன், சேரன் தலைமுறை, மூன்றாவதாக மிகவும் இளைஞர்களான ஆழியாள், நட்சத்திரன் செவ்விந்தியன் எனக் குறிப்பிடுகிறார். அடுத்த வரியில் பெண்களின் குரலை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊர்வசி, செல்வி, சிவரமணியின் தனி அடையாளம் பற்றிக் குறிப்பிடுகிறார். அந்தவகையில் தலைமுறைகளுக்கு அப்பால் அவர்களை நிறுத்துகிறார்! நூலின் பெயர்ப்பட்டியலில் ஔவை பெயர் விடுபட்டுள்ளது. ஆனால் அவரது கவிதைகள் நூலில் இடம் பெற்றுள்ளன. இவை தமிழவன் கவனத்தை மீறி நிகழ்ந்தவையாக இருக்கலாம். அச்சகத்தில் நிகழ்ந்த கோளாறாக இருக்கலாம். ஆனால், தொகுப்புப் பணி சிரத்தையாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுத்துறை. அதைக் குறித்த ஆழமான விவாதங்கள் கிளம்பாத வரை அச்சு எந்திரத்தின் அசுரப்பசிக்குத் தீனிபோடும் முயற்சிகளாகவே தொகுப்புகள் வந்துவிடக் கூடிய அபாயம் உள்ளது.

இவற்றோடு இத்தொகுப்பைப் பற்றி நினைக்கும் போது எனக்கு சில அச்சங்கள் ஏற்படுகின்றன. இதில் வந்துவிடக் கூடிய தவறுகள் எனது தூக்கத்தைக் குலைக்கின்றன. தயவு செய்து தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அவற்றைச் சரிசெய்வதற்கான வாய்ப்புகள் நிச்சயம் உண்டு என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரலேகா மௌனகுரு சென்னைப் பல்கலைக்கழக, தமிழ் இலக்கியத் துறை, கல்கி அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த வரும் நிகழ்ச்சியும், புதுவை பிரெஞ்சு ஆய்வு நிறுவனமும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறையும் இணைந்து நடத்தும் புலப்பெயர்வு குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கமும் அடுத்தடுத்து ஒழுங்கமைப்பு செய்யப்பட்டன. இதையொட்டி இப்படி ஒரு தொகுதி வந்தால் நலம் என்ற பேச்சு எழுந்த போது செந்தில்நாதன் அதனை வெளியிட முன்வந்தார். ஏற்கெனவே வெளிவந்த தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கலாம் என்று நினைத்து ஒத்துக்கொண்டேன். கவிஞர் இன்குலாபுடனான தோழமை எனக்கு எரிமலை, வெளிச்சம் இதழ்களை நினைவுபடுத்தியது. பிறகு புலம்பெயர் இதழ்கள், மலர்கள் என விரிந்தது. இதிலும் நான் கணினியில் வெளிவரும் ஆக்கங்களை முழுமையாகக் கணக்கில் எடுக்கவில்லை. எனது உற்சாகம், சோர்வு, மன அழுத்தங்களுக்குத் தோள் கொடுத்தவர்கள் வீ.அரசு, வ.கீதா ஆகிய இருவரும். எதிர்பார்த்த பக்கங்களுக்கு மேலாகத் தொகுதி பெருத்துப் போனதும், எதனையும் விட மனமின்றி நான் தவிர்த்தபோதும் விடாது இதனை வெளிக்கொண்டு வருவதில் முனைப்பு காட்டியதில் கீதாவுக்குப் பெரும்பங்கு உண்டு. சலிக்காமல் இக்கவிதைகளை அச்சிடுவதற்கான பல மெய்ப்புக்களைத் தந்த வே.இளங்கோவிற்கு எனது மனமார்ந்த நன்றி.

வாசுகியின் ஓவியம் அட்டைப் படத்தை அலங்கரிக்கிறது. அவரது படைப்பாளுமைமிக்க தோழமைக்கு என்றும் என் நன்றி. இத்தொகுப்பு பற்றி சித்திரலேகா, வ.கீதா மற்றும் எனது கட்டுரைகள் பின்னுரைகளாக இணைக்கப்படுகின்றன. இத்தொகுப்பை ஒட்டிக் கிளம்பும் பல விவாதத்தளங்களை அவைத் தொட்டுச் செல்கின்றன. கவிதைகளை ஒருசேரப் பார்த்தபோது கிடைத்த உற்சாகம், மலைப்பு அவற்றின் பக்க எண்ணிக்கை, ஆண்-பெண் பால் அடையாளம், போன்ற காரணங்களுக்காகச் சுருக்க வேண்டி வந்தபோது நடத்திய விவாதங்கள் ஆகியவை எனக்கும் கீதாவுக்கும் இடையே இருந்த தோழமை, அரசியல், இலக்கியப் புரிதல் போன்றவற்றை ஆழமாக்கியது.

அனைத்து இயக்கங்களைப் போலவே பெண்கள் இயக்கமும் கூட்டு உழைப்பை, பகிர்தலை முதன்மைப்படுத்துவதாகும். அந்த வகையில் இத்தொகுப்பின் கூட்டு முயற்சியில் ஈடுபட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது மனதார்ந்த நன்றி.

**அ.மங்கை**

8.03.2007

## கவிஞர்கள்

அம்புலி, அருட்கவிதா, அனார்

ஆகர்ஷியா, ஆதிரா, ஆதிலட்சுமி சிவகுமார், ஆழியாள், ஆமிரபாலி

இளநீதா

உமையாள், உலகமங்கை

ஊர்வசி

ஔவை

கல்யாணி, கோ.சி.கலைக்கதிர், கற்பகம்-யசோதரா, கனிமொழி

அ.காந்தா

கிருஷாந்தி ரட்ணராஜா,

குறவஞ்சி

கோசல்யா சொர்ணலிங்கம்

சங்கரி, தே.சங்கீதா, சத்தியா, சந்திரவதனா, சந்திரா இரவீந்திரன், சன்மார்க்கா, சமர்விழி

சிரஞ்சீவி, சிவரமணி

சுகந்தினி சுதர்சன், சுதாமதி, கே.சுதாஜினி, சுமதி ரூபன், சுல்பிகா

சூரியநிலா

செந்தணல், செவ்வதனி, செல்வி

தமிழவள், தயாமதி, தயாநிதி, தர்மினி

தாட்சாயணி, தானியா

தில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கா
தூயவள்
நவஜோதி, நளாயினி, நஜீபா
நாமகள்
நிருபா, நிரோசா, நிலா
பர்வின் (நாச்சியார் தீவு), பஹீமா ஜஹான்
பாமதி, பாமினி, மேஜர் பாரதி, பானுபாரதி
பிரதீபா தில்லைநாதன், பிரியதர்சினி
மசூறா. ஏ. மஜிட், மல்லிகா, மலைமகள், மஸாஹிரா பாயிஸ்
மீரா பாலகணேசன்
முகைசிரா முகைடீன்
மைத்ரேயி, மைதிலி
யாழ் ஆதிரை, யாழினி
யூவியா
ரங்கா, ரஞ்சினி
ரேவதி
லறீனா ஏ. ஹக்
வசந்தி-ராஜா, இ. வசந்தி, வாசுகி குணரத்தினம்
காப்டன் வானதி
விண்ணரசி, வித்யா, வினோதினி, விஜயலட்சுமி சேகர், விஜிகலா புவனேந்திரன்
றஞ்சனி
ஜமுனா
சா. ஜெயந்தி, ஜெயந்தி தளையசிங்கம்
லுணுகலை ஹஸீனா புஹார்

## தேடி அடைவாய்

பசுமைப் போர்வையிழந்து
சாம்பல் கவிந்த
மேனிய ளாயுள்ளேன்.
மாரிக் குளிரில் நனைந்திடினும்
தணல் பூத்துக் கிடக்கிறதெனதுள்ளம்.
துன்பத்துக்கும் துயரத்துக்கும் நடுவில்
உன்னை வாரியணைக்க முடியாத
தாயானேன் நான்.

ஒரு அழகிய காலையை
உனக்குக் காட்ட முடியாத
வசந்த காலத்தில்
விளையாட முடியாத
பாலைவன நாட்களையே
உனக்குப் பரிசளிக்கின்றேன்.
எந்த நேரமும் வீழ்ந்து வெடித்து
உயிர் குடிக்கும் எறிகணைக்குள்
முகில் கலைத்து வானிரையும்
எமதூதப் பறவைகளின்
வருகைகளிற் கிடையில்
துப்பாக்கி வெடியோசையின்
சத்தங்களுக்கிடையில்
எப்படி என்னால்
இனிமையை உனக்குத் தரமுடியும்.
என்னால் பரிசளிக்க முடியாத வாழ்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயே சென்றடைவாய்!
விழிகளில் சிவப்பும்
இறக்கைகளில் நெருப்பும்
உனக்குச் சொந்தமாகட்டும்.
எம்மை வேகவைத்த காலம்
உன்னால் வேகிச் சாம்பலாகட்டும்.
ஒரு புதிய வாழ்வு
உன் கரங்களிலே பிறக்கட்டும்.

*அம்புலி*

---

*எழுதாத உன் கவிதை : தமிழீழப் பெண்களின் கவிதைகள்- 2001*



# காலம் பதிலுரைக்கும்

நெஞ்சப் பாறைகளின் ஈரத்தில்
அக்குரல்கள் ஒலித்தவாறுள்ளன.
தீக்கங்குகளின் ஒளிரிடை
உக்கிப்போன முகங்கள்
எழுந்து புலம்புகின்றன.
விழிகள் அசையும் எப்பரப்பிலும்
அம்முகங்களின் வெம்பல்
விசுவரூபமெடுக்கின்றது.
உப்புக் காற்றின் ஈரத்தில்
கண்ணீர்த் துளிகள்
மோதிச் செல்ல
தணல்பூத்துக் கிடக்கும்
மயான வெளிப்பரப்பில்
ஓ! எங்கள் உறவுகள்...
யாரும் தனித்திருக்க விரும்பாத
காற்று வெளிகளில்
எப்படிக் குடியிருக்கின்றீர்?

வெண்புறாவின் இறக்கை மறைப்பில்
சூரியன் இருண்டு கிடக்க
அதன் அலகுக் கூரும்
நகங்களின் கோரமும்
நரகத்தின் பயங்கரத்தைச்
சுமந்த அதன் முகமும்
சாவிலும் கொடியதாய்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனிந்தத் தீர்ப்பளித்தார்?
சுமையிறக்கிய பின்பே
சுடுகாட்டில் இடுகின்ற மனிதரை
நிம்மதியற்றுக் கொன்று ஏன் புதைத்தார்?

குதறுண்ட எம்
குருத்துக்களே...
வல்லூறுக்கிரையாகி
வதைக்கப்பட்டிறந்த எம் வசந்தங்களே...
உம் ஓலக்குரலுக்கிரங்கா
அரக்கரை உலுக்கப்
பூகம்பம் உதிர்ப்போம்.
எம்தேச வெளியெங்கும்
சாக்குழிகள் தோண்டி- எம்
பூமிக்குரமாய்ப் புதைப்போம்
நாம் சிந்திய கண்ணீருக்கும்
செந்நீருக்கும் பதிலுரைக்க
சிங்களத்துச் சேனைகளை
இழுத்து வந்துள்ளது காலம்
வந்தவர் இனிச் சென்றிலர்.

*அம்புலி*

---

*செம்மணி - 1998*

# *சில வருடங்களின் முன்*

அன்று அதிகாலை நேரம்
மணியோ 9.15
இருவர் வந்தனர்
கட்டளை போட்டனர்
பருவமடைந்து
வீட்டினுள் இருந்த என்னை
வெளியே கலைத்தனர்
அப்போதுதான் மஞ்சளரைத்துப்
பூசி விட்டு
எனக்குப் பத்திரம் சொல்லி
அடுப்படிக்கு சென்ற
என் அருமைத் தாயை
கொடூரக்குரலில்
கட்டளை இட்டான் விடுதலை வீரன்
“வெளியே நட”
இன்னொருவன்
“வீட்டை எரி”
விடுதலை வீரர் சென்றனர்.
என் மனம் எரிந்தது
பத்து நிமிடம் தான்
வெடியோசை கேட்டது
ஊரெல்லாம் கூடித் தெருவோரம் ஓடியது.
விநாயகரின் சந்நிதி முன்
சரிந்து கிடந்தாள் என் தாய்
வெடியோசை கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருதி தோய்ந்த
என் தாயின் உடலையே
கண்டேன்
எரிகிறது
என் மனம் எரிகிறது.

திக்கற்று நிற்கிறேன்
தனிமையிலே.
தேற்றுவார்யாரும் இல்லை
எங்கு சொல்வேன்
யாரிடம் சொல்வேன்
ஏது செய்வேன்
எதுவுமே புரியவில்லை

வீடும் இல்லை தெருவுமில்லை
விடுதலையும் எமக்கு இல்லை
எரிகிறது என் மனம்
இன்னும் எரிகிறது

விடுதலை வீரனின்
போர்க்குணம் கண்டு
எரிகிறது இன்னும்
என் மனம் எரிகிறது.

*அருட்கவிதா தேவநாயகம்*

---

*வெளிப்படுதல் - 2001*

## கறல்

ஆணுக்கொரு சிலுவையும்
அறைந்து கொள்ள
ஆணிகளும் தந்து
ஆண்டுகள் பலவாச்சு..!

இன்னும்
உயிரோடுதான் இருக்கின்றோம்
வாழ்வைத் தின்று
கொண்டிருக்கிறது மரணம்

காலத்துயர் முழுதும்
கண்ணீரின் கறைகள்
கறள் பிடித்துப் போயிற்று
வாழ்க்கையின் கதைகள்!

முக்காட்டுப் பிறைகளின்
நெஞ்சினில்...
தொப்பிக்குள் சுடர்கிற
நிலவு முகங்களில்...
வேர் பிடித்திருந்த நம்பிக்கை
அத்தனைக்கும்
ஒரு நல்ல நாளில்
அவர்கள் கொள்ளி வைத்தனர்!

அழிவுகளை அகற்றுமொரு
இழிவோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுட வரலாற்றுக்கே
கரி பூசினர்.

கூடும் குலைந்தன
குஞ்சுகள் பொரித்துக்
குலாவிய திசைகளுமிருண்டன
யாவையும் இழந்தோம்.

எத்தனை வம்சங்கள்
வேர் கொண்ட மண்
அத்தனை தலைமுறையின்
தலைவிதியும்...
துப்பாக்கிகளின் நிர்ப்பந்தத்தில்
தலை கீழாயிற்று.

காலம் முழுவதற்குமாய்
அந்த நிலத்தின் மீதுதான்
எங்கள் உயிரை வைத்திருந்தோம்.

நாம் வாழ்ந்த வீடு
நம் தோட்டங்கள்
நமது சந்தோசம்...
நம் உரித்து
சகலமும் பறித்தெடுத்து
வெறுங்கையுடன் விரட்டப்பட்டதும்,

சதி செய்தவர்களென்ற
சந்தேகப் பழி சுமந்து
சதிகாரப் பழிவாங்கலுக்குப்
'பலி' யாகிப் போனதுவும்...
அதே- நிலத்தில் இருந்துதான்



ஒளி பொருந்திய
எங்கள் ஜீவிதத்தை
ஒரு ஒலிபெருக்கியின் மூலம்
இருட்டடிப்புச் செய்ததே
தமிழ் மறவர் வீரம்...?

தமிழை வரமாக நினைத்து
வாழ்ந்திருந்த நன்றிக்கு
ஆறாத சாபத்தை எமக்களித்தனர்:
வாழ்வையே
துயர்களின் வதைகூடமாக்கினர்

கூடுகளை விட்டு விரட்டி
குழிகளிலே தள்ளினர்...

அன்றவர்கள்
இரக்கமற்று குத்தியேற்றிய
கூர் முட்கள்தானே
இன்றுவரை... கூவமுடியாமல்
எம்மவர் குரல்வளையை அடைத்தது?

பனையோடு வளர்ந்த எண்ணங்களில்லை,
பசியாறிக் கிடந்த திண்ணைகளில்லை
கயிற்றூஞ்சல் ஆடிய...
சோலைகளில்லை...
சுற்றமும் சொந்தமும்...
இன்னும் நாசிக்குள் மணக்கிற...
மல்லிகை முற்றமும்
காதலும்... கனவும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டில்களில் கேட்கிற- தாய்மையின்
தாலாட்டுகளுக்குமில்லை!

வெறிச்சோடிப் போனோம் நாம்
ஐவேளை குரல் கனியும்- தனித்த
பாங்கொலியினூடே
அநீதியிழைக்கப்பட்டதெங்களின்
ரூஹ்ஹீ...

அழுது "துஆ" கேட்கும்
கண்ணீரின் ஈரங்கள் காய்வது என்று?

கிடுகுக் கூடாரங்களுக்குள்
முதுகு கூனிக்
கனவுகள் முறிந்து
நிம்மதியிழந்து வேகுமுயிர்களின்
ஈறல்... தீர்வது என்று?

*அனார்*

*எக்ஸில், ஓகஸ்ட் - 2001*

## விலகி நிற்பவள்

ஒரு நிமிடத்தையும் மீதம் வைக்காமல்
பொழுதைக் குடிப்பவனுக்காக
காலம் முழுவதையும் தேக்கி வைத்து
வாழ் நாளெல்லாம் அலைகிறேன்.

ஆற்றின் ஓரங்களில்
செத்த பாசிச் செடிகளாய்
நாறும் கழிவுகளாய்
பேச முற்பட்ட தருணங்கள்
பிந்திய நாளின் முடிவில்
கரையொதுங்குகின்றன.

அநாவசியமாகிவிட்ட
சொற் குரணல்களைப் பொறுக்கிப் போக
என் வாசலுக்கு வருகின்றன
புறாக்கள்.

பரிசளித்த எனது ரோஜாவை
எடுத்து முகரவோ
என் சமகாலக் கேள்விகளுக்கெல்லாம்
பதில் எழுதவோ

வெப்புசாரங்களுக்கும்
விரகத்திற்கும்
இன்னும்
எல்லாவற்றுக்கும் பொதுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் மண்டிச்
சிணுங்காமல் கிடக்கும்

தொலைபேசி உண்டியலில்
ஒரு முத்த ஒலித் துளியை
இட்டு நிரப்பிடவோ
நேரம் இருப்பதுமில்லை அவனுக்கு.

கண்களிடமிருந்து பறித்தெடுத்த
ஒரு பிடிக் கனா
காதுகளிடமிருந்து பறிக்கப்பட்ட
ஒரு வெளி நிறைய இசை

என்னிடமிருக்கிறது
அவனில்லாத வாழ்வு நெடுகிலும்
சுமந்தலைய.

இன்னும்
இந்த ஒரே உலகத்திலேயேதான்
இருக்கின்றன
எனக்கும் அவனுக்குமான
வெவ்வேறு உலகங்கள்.

*அனார்*

---

*பெண்கள் சந்திப்பு மலர், 2005*

## பிசசி!

திருடனின் பார்வை
வீரனின் மிடுக்கு
உள் நுழைந்தது பாம்பு

உடல் வாசனை கமழும்
அறைக் கண்ணாடியில் பாம்பின் கோடுகள்
ஆதி மந்திரமாய் உறைகிறது

கடல் திறக்கும் கள்ளச் சாவிகளென
பத்து விரல்கள்

நிலவு நனையும் உயரத்தில்
தெறிக்கின்றது மா கடல்

மரம் முழுக்க கனிகள் குலுங்கும்
உச்சாணிக் கொம்பில்
மயக்கி படமெடுத்தாடுகிறாய்

பாரம்பரியம் கொண்டாடும் பாணனின் இசை
புலன்களை ஸ்பரிசிக்கின்றது

புற்றிலிருந்து வெளியாகின்றேன்

காற்றின் அதிர்வுகளில்
பளிச்சிடுகின்ற மயக்க இழைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிகின்றன ஒவ்வொன்றாய்
குளிர்ந்து, இறுகப்பற்றி
உதடுகள் தீட்டுகிற மாயத் திசையில்
பனிப்பறவைகளின் குலாவுகை

கனவின் கத்திகள் பாய்ந்த கவிதையை
ருசிக்கிறோம் மிச்சம் வைக்காமல்

வானம் பூனைக்குட்டியாகி
கடலை நக்குகின்றது.

*அனார்*

*மூன்றாவது மனிதன், 18 செப்-அக். 2006*

# மேலும் சில இரத்தக் குறிப்புகள்

மாதம் தவறாமல் இரத்தத்தைப் பார்த்து
பழக்கப்பட்டிருந்தும்
குழந்தை விரலை அறுத்துக் கொண்டு
அலறி வருகையில்
நான் இன்னும் அதிர்ச்சியுற்றுப் பதறுகின்றேன்
இப்போதுதான் முதல் தடவையாக காண்பதுபோன்று

"இரத்தம்" கருணையை பரிதவிப்பினை
அவாவுகின்றது
இயலாமையை வெளிப்படுத்துகின்றது

வன் கலவி புரியப்பட்ட பெண்ணின் இரத்தம்
செத்தக் காட்டுப் பூச்சியின் அருவருப்பூட்டும் இரத்தமாயும்
குமுறும் அவளுயிரின் பிசுபிசுத்த நிறமாயும்
குளிர்ந்து வழியக் கூடும்

கொல்லப்பட்ட குழந்தையின்
உடலிலிருந்து கொட்டுகின்றது இரத்தம்
மிக நிசப்தமாக
மிகக் குழந்தைத் தனமாக

களத்தில்
இரத்தம் அதிகம் சிந்தியவர்கள்
அதிக இரத்தத்தை சிந்த வைத்தவர்கள்
தலைவர்களால் கௌரவிக்கப்பட்டும்
பதவி உயர்த்தப்பட்டும் உள்ளார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரவதை முகாம்களின்
இரத்தக் கறைபடிந்திருக்கும் சுவர்களில்
மன்றாடும் மனிதாத்மாவின் உணர்வுகள்
தண்டனைகளின் உக்கிரத்தில்
தெறித்துச் சிதறியிருக்கின்றன.

வன்மத்தின் இரத்த வாடை
வேட்டையின் இரத்த நெடி
வெறிபிடித்த தெருக்களில் உறையும் அதே இரத்தம்
கல்லறைகளில் கசிந்து காய்ந்திருக்கும் அதே இரத்தம்
சாவின் தடயமாய்
என்னைப் பின் தொடர்ந்து கொண்டே இருக்கிறது

*அனார்*

*ஊடறு, 2006 (இணைய இதழ்:* www.udaru.com*)*

# எனக்கு கவிதை முகம்

எல்லா மயக்கங்களுடனும்
மெல்ல
அதிர்கிறது இசை
படிக்கட்டுகளில் வழிந்தோடும் நீர்ச் சொரியலாய்

வறண்ட சுண்ணாம்புப்
பாதைகளின் மேற் கிளம்பும்
வெண் புழுதியில் மணக்கிறது
அவன் குதிரைக் குளம்பொலி

சாம்ராஜ்யங்களின்
அசைக்க முடியா கற்றூண்களை
பிடுங்கி ஒரு கையிலும்
போர்களை வெற்றி கொண்ட
வாள் மறு கையிலுமாய்
அதோ வருகிறான் மாவீரன்

இரு புறமும் பசு மரங்கள் மூடியிருக்க
மூடுபனி தழுவி நிற்கும்
சிறுத்து ஒடுங்கிய பாதையில்
என் கனவின் உள் புகுந்து
தாவுகின்றன இரண்டு முயல்கள்

விடிந்தும் விடியாத
இக் காலைக் குளிரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகை வெடித்த பூக்களின் காதுகளுக்குள்
"கோள்" மூட்டுகின்றது
பெயர் தெரியா ஒரு காட்டுப் பூச்சி

அதனாலென்ன
எனக்குத் தெரியும்
அவன் வாள் உறைக்குள்
கனவை நிரப்புவது எப்படியென்று

எனக்குத் தெரியும்
மகத்துவம் மிகுந்த இசை
தீர்வதேயில்லை

நான் பாடல்
எனக்கு கவிதை முகம்

***அனார்***

*தலித், பிப் 2007*

# இன்னும் வலுவாய்

"எத்தகு நம்பிக்கையைச்
சுமந்து நிற்கிறோம்
நேற்று
நம்பிக்கை செத்து
வேரறுத்த
நண்பியின் நினைவுப் புண்கள்
ஆறுமுன்னரே
நம்புகிறோம் - வாழ்வு பற்றி
அமைதி நிறைந்ததாக
எளிமையானதாக
சுதந்திரமானதாக
சுவையானதாக
அவையும் பொய்த்துப்போக
அடி தங்காய்...
முறிவு கொள்ளாதே
மேலும் மேலும் நம்பு
வாழ்வு பற்றி
உன் இருப்பு பற்றி
அதன் அர்த்தம் பற்றி
இன்னும் வலுவாய்"

***ஆகர்ஷியா***

*இன்னுமொரு காலடி, தமிழர் நலன்புரி சங்கம் மலர் - 1998*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு அசையவில்லை
மழை காலக் குளிரில்
உறைந்து போயிற்று மரங்கள்.

விரிக்கப்பட்ட புத்தகத்தில்
இதழ்கள் சரசரப்புடன் அசைகின்றன.
குளிர்ந்த பக்கங்களின்
கருப்புக் கோடுகளை
உற்று நோக்குகிறேன்
வழக்கத்திற்கு மாறாய்
நடுநிசி வரை
எண்ணெய் உறிஞ்சுகிறது விளக்கு.

ஒருநாள் எப்படியாவது
தெரிந்து கொள்வாய்
புத்தகத்தின் பக்கங்களில்
தீட்டப்பட்ட
உன் ஞாபகங்கள்
குரூரச் சித்திரவதைகளால்
தொங்கிப் போன
கரிய கோடுகளென எழுத்துக்கள்.

நாளை நாம்
சந்திக்காது போகலாம்.



தூரத்தில் ஊளையிடுகிறதொரு விமானம்
தடித்த அங்கியின் கீழாகத்
துடித்துக் கொண்டிருக்கின்ற
உன் இதயம் பற்றி நான்
அறிவேன்

மாலையில்
எங்காவது உணவுவிடுதியில்
உன் தட்டிலிடப்படும்
இறைச்சித் துண்டங்களை
என் பொருட்டு நீ வெறுக்க
நேரிடலாம்.

ஏதும் சொல்வதற்கில்லை.
தொலைவில் உறுமலிடுகின்ற
விமானத்தைத் தவிர
நிசப்தமானது இந்த இரவு!

நீ சாவதானமாய்
நடந்து செல்வாய்
உப்போடையோரம்
புதிதாய்ப் பூத்தது மயானம்.

நடுக் கூடத்தில்
துண்டமாகினாள்
என் தோழி

மாலைத் தேனீரின் சுவையை
நீ ஆழ்ந்து ரசிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனே
என்னை நினைத்திருக்க
ஆயிரங்காரணங்களிருப்பது போல
உன்னை நினையாதிருக்கப்
பல்லாயிரங் காரணங்களாய்
என் வாழ்க்கை!

*ஆகர்ஷியா*

---

*தலித், பிப்: 2007*



**"இருள்"**
எனக்குப் பிடித்துப் போய் விட்டது
அதுவும் கும்மிருட்டு.

ஒரு சிறிய வெளிச்சம் கூடவேண்டாம்
யாரும் அடையாளம் கொள்ளத்
தேவையில்லை.

நான்
மரம் மண் கல்லு என அசையாமல்
இருக்கிறேன்
இருள்
பிடித்துத்தான் போய்விட்டது

நான் எழுதிய கவிதைகள் கூடத்
தெரியவில்லை
எல்லாம் கறுப்பாய்

ஏன் கவிதை...?
எதற்கும் வித்தியாசம் வேண்டாம்

எல்லாம் ஒன்று
அல்லது
எல்லாமே எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மனிதனாய் மிருகமாய் கடவுளாய் (?)
கரி இருட்டில்

"விடிதல்"
தேவை இல்லாதது
துப்பாக்கி குண்டு கொலை குழி என
குறி வைத்த சொல் இது
எனக்கு வேண்டாம்

இருள் சுகமானது
அதுவும் கும்மிருட்டு.

*ஆதிரா*

*இருள்வெளி - 1998 இலக்கியச் சந்திப்பு, 10ஆவது ஆண்டையொட்டி வந்த பின் நவீனத்துவ இலக்கியப் படைப்புகளின் தொகுதி*



நாங்கள்
புழுவாய் புல்லாய் நாய் நரியென
எல்லா மாதிரியும் மாறி மாறி
வேஷம் தரித்து முடித்தாகியாச்சு

நிலைமை மாற்றமில்லை

ஒவ்வொரு சங்காரத்தின் முடிவிலும்
அவர்கள் வென்றார்கள்

எம்மீது ஏறிய ஒவ்வொரு வேல்களிலும்
அவர்களின் வெற்றி

நாங்கள் மட்டும் தோத்தபடிக்கு...

அடுத்துவரும் போர்நிறுத்த இடைவெளியில்...

அல்லது
ஒரு பேச்சு வார்த்தையில்...
வழமை போலவே
அவர்கள் வெல்வார்கள்
கூடவே எதிரியும் வெல்வான்

நாங்கள்...
வேடங்கள் தரித்து இன்னொரு சங்காரத்திற்கு
தயாராய் இருக்கிறோம்

இன்னும் இன்னுமாய் தோற்பதற்கு.

*ஆதிரா*

*இருள்வெளி - 1998 இலக்கியச் சந்திப்பு, 10ஆவது ஆண்டையொட்டி வந்த பின் நவீனத்துவ இலக்கியப் படைப்புகளின் தொகுதி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மாவிலிருந்து எழுகிறது பேரலை

என் ஆன்மாவிலிருந்து
எழுகின்றது பேரலை
இதை எப்படி நீ செவிமடுப்பாய்?
எனக்குள் இருக்கும் உனது விம்பம்
எழுகின்றது
பத்திரிகைச் செய்தி
வானொலி அறிவிப்புக்கள்
எதிலுமே நீ இல்லை!
உன்னுடைய
அன்பு
புன்னகை
புரிந்துணர்வு
எல்லாவற்றையும் சுமந்தபடி
திசைகளெங்கும் திரிந்தேன்!
மண்-
காற்று-
நீர்-
நெருப்பு-எது உன்னை விழுங்கியது?
தெரியவில்லை!
நான் அழுதேன்
இதயத் தசைகள் நைந்துபோகிறவரை
தாடை எலும்பு கரைந்து போகிறவரை
அழுதேன்!
நீ செத்துப் போயிருக்கவேண்டும் என்று
பிரார்த்தித்தேன்!
நீ செத்துப் போவதை விரும்பினேன்!
தற்செயலாய் வெட்டிய மலக்குழியுள் நீ!
(அது நீயாகத்தான் இருக்கவேண்டும்)
மண்டை ஓடு-
கை எலும்பு-
கைவளையல்-
உன்னை அடையாளமுறும்
அடையாளங்களாக!
அண்டவெளியில் அலைந்து திரிந்த
உன் இறுதிநேர அலறல்
என்னை வந்தடைந்துவிட்டது!
என் ஆன்மாவிலிருந்து
எழுகிறது பேரலை!

*ஆதிலட்சுமி சிவகுமார்*

---

*எரிமலை, அக். 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாம்பல் நகரம் : சில கவிதைகள்

நகரின் வடிவவியல் புதிரானது
சந்துக்கள், குறுக்குத்தெருக்கள், முடுக்குகள்
மரணம் அலைவதற்கென
வடிவமைக்கப்பட்டிருக்கின்றன
மரணம் அலைகிறது

மரணம் மட்டுமே அறிந்திருக்கிறது
என் நகரின் புதிர்மிகு வடிவவியலை
அலைந்து திரிதலின் நுட்பத்தை.

செங்கனவின் இழைகள் அலைந்துலைகையில்
குறிப்புகளை எடுத்துக் கொள்கிறது மரணம்

மரணம் அறிந்திருக்கிறது
எச்சந்தில் கனவுகள் தனித்துத் திரியுமென
எப்பொழுதில் கனவுகள் துண்டாய்ச் சிதறுமென

மரணம் வடிவமைத்த என் நகரின் வடிவவியல்
மிகப்புதிரானது - உண்மையிலேயே

வாடி உதிர்ந்த கனவுகளே
மீதமிருக்கின்றன என் நகரத்தில்

இளங்காலையின் மூட்டப்பனியெனக்
கலங்கிச் சிதைந்த நகரின் காட்சினூடே
பிணைந்து நெளியும் நிராசையும் வலியும்

தெருக்களின் ஓரமெங்கும்
மலர்ந்திருக்கிறது பயம் - குருதி நிறத்தில்

எந்த ஒரு கணத்திலும்
அச்சமற்ற பொழுதுகள் நேர்ந்ததில்லை எமக்கு

எலும்பின் வீச்சமடிக்கும் மலர்களைச்
சூடியிருப்பவளே நில்

அப் பூவில்
தாய்க் குருதியின் வாசனை வீசுகிறதாவெனப்
பார்க்க வேண்டும் நான்

பகிரப்படாத அன்னையரின் துயரத்தை
வாடி உதிர்ந்த பூக்களில் பார்க்கும் கணம்
மரணமெனும் புராதன ஆடையை அணிய விரும்புவேன்
இன்னொருதரம்.

சிதைவதொன்றும் புதிய விடயமில்லை.

ஆனால் மரணத்தை எழுதியபடி
அதன் கண்களை உற்று நோக்கியபடி
சிதைவதெப்படி?

இது ஓர் பிரச்சனை

அதிகாரத்தின் ஆண்குறி
அதன் வாய் பிளந்து துப்பும் குண்டுகள்
சிதைத்த நம் எல்லோரதும் குருதிக்கறைகளை
தேய்த்துக் கழுவுவார்கள் நாளை

கனவுகளின் நிறந்தெரியுமோ கழுவிய நீரில்

அரூபங்களாய் அலையும் கனவுகள் சேர்த்து
ஊளையிட்டுக்கொள்ளட்டும் இந்த நிலம்

ஒரே ஒரு ஆதங்கம் தான்
எஞ்சியிருக்கிறது எம்மிடம்

உதிக்கும் சூரியனின் கிரணங்கள்
நிலத்துக்கடியில் வருமா தெரியவில்லை.

*ஆமிரபாலி*

*மூன்றாவது மனிதன், டிச.06 - ஜன.07*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் எதிரே
வந்த இராணுவ வண்டி
விலத்திப் போகையில்,
பஞ்சு மிட்டாயைக் கைமாற்றி
வலது விரற் பிஞ்சுகளால்
கையை எக்கி,
உயர வீசி ஆட்டுகிறாள்
ஓர் சிறுமி.

இனிய வான்கடிதப்
பதிலாக
அதனுள் நின்ற
அவர்களில் பலரும்
அவ்வாறே கைகாட்ட,
வியப்பில் ஒரு நொடி
உறைந்த இரத்தம்
அவசரமாய் ஓடியது
உரத்துக் கேட்டபடிஃ
"என் நாட்டில் போரா,
யார் சொன்னது?

*ஆழியாள்*

---

*உரக்கப்பேசு - 2000*

## மன்னம் பேரிகள்

காலப் பொழுதுகள் பலவற்றில்
வீதி வேலி ஓரங்களில்
நாற்சந்திச் சந்தைகளில்
பிரயாணங்கள் பலவற்றில் கண்டிருக்கிறேன்.

நாய் கரடி ஓநாய்
கழுகு பூனை எருதாய்ப்
பல வடிவங்கள் அதற்குண்டு.

தந்திக் கம்பத்தருகே
கால் தூக்கியபடிக்கு
என்னை உற்றுக் கிடக்கும்
அம்மிருகம் துயின்று
நாட்கள் பலவாகியிருக்கும்.

அதன் கண்கள்
நான் அறியாததோர்
மிருகத்தின் கண்களைப் பறைசாற்றிற்று.
அவற்றின் பாலைத் தாகம்
அறியாப் பாஷையை
எனக்குள் உணர்த்திற்று.

அழகி மன்னம்பேரிக்கும்
அவள் கோணேஸ்வரிக்கும்
புரிந்த வன்மொழியாகத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது இருக்கும் என
அவதியாய் எட்டிக் கடந்து போனேன்.

அன்றைய அலைச்சலும்
மனக்குமைச்சலும் கூடிய
தூக்கத்தின் இடையில் - நானும்
அவள்களுக்குப் புரிந்த
அதே அதே ஆழத்திணிக்கப்பட்ட
பாஷையை புரிந்து கொண்டேன்.

அருகே கணவன்
மூச்சு ஆறிக்கிடக்கிறான்.

*ஆழியாள்*

*மன்னம்பேரி(22) 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியில் பங்கு கொண்டவள். பெண்கள் அணிக்குத் தலைமை தாங்கியவர். 1971, ஏப் 16 இல் படையினரால் கைது செய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.*

*கோணேஸ்வரி(33) அம்பாறை சென்ட்ரல் கேம்ப் 1ஆம் காலனியைச் சேர்ந்தவர். 1997, மே 17 இரவு இவரது வீட்டுக்குச் சென்ற படையினர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியபின் அவளின் யோனியில் கிரெனெட் வைத்து வெடிக்கச் செய்து சிதறடித்துச் சென்றனர்.*

---

*உரக்கப்பேசு - 2000*

# சின்னப் பாலம்

போர்க்கால அமைதி
எனது கிராமத்தின்
எஞ்சிய ஊர்மனைகளில்
வெட்ட வெளீரெனக் கிடந்த வயல் வெளிகளில்
சிற்றாறுகள் பின்னி வைத்த
வண்டல் மண் கரைகளில்
சின்னப்பாலத்தின் வெறிச்சோடலில்
ஐந்துவிரல் கொண்டு அறைந்து கிடந்தது.

சின்னப்பாலத்தடிக்கு
நித்தம் செட்டை அடித்து வந்தன
வழக்கத்திலும் கொழுத்த
ஒற்றைக்கால் கொக்குகளும், சுழியோடும் நீர்க் கோழிகளும்.
அவற்றிலும் அதிகமாய்
விளைந்து கிடந்தன
ஊறி அழுகிய பிணங்களின்
வாசனை முகர்ந்து, சுவை அறிந்த
ஜப்பான் குறளிகளும், குறட்டை பெட்டியான் மீன்களும்.

கபறக்கொய்யாக்களோ
எவ்வித நிர்ச்சலனமுமின்றி
நீரிற் பொசிந்தூறிய மனிதக் கபாலங்களை
ஆளுக்கு ஐந்து ஆறாய்ப்
பங்கிட்டுக் கொண்டன - சண்டை சச்சரவின்றி
சமாதானத்துடனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படும்போது
அவை பின்னிற்பதில்லை
தம் நாவால் மனிதக் கட்குழிகளை நீவிக்
கறுத்த விழிகளைத்
திராட்சைகளாய் உறிஞ்ச.

சின்னப்பாலத்தடி
தன்னைக் கடந்து போனவர்களை
நினைவில் பதித்துக் கொண்டாலும்,
ஊறி வெடிப்புற்றுச் சிதிலமாய்த் தொங்கும் தசைகளை
ஒட்டவைத்து
அடையாளம் காண்பதற்குள்
தலை கிறுகிறுத்துப் போய்விடும் அதற்கு.

அக் கிறுகிறுப்பிலே அதுவோ தினமும்
"என்னை மட்டும் தனிக்க விட்டு
இந்த மனிதர் எங்கு போயினர்
எங்கு போயினர்"
எனப் பெருங்குரலெடுத்துக்
கதறத் தொடங்குகையில்,

எப்போதும் போல,
ஊர்மனைச் சுவர்களில்
பிளவுண்ட கீறல்கள் வெடிப்புற்றுத் தொடர்ந்தன.



சிற்றாறுகள் அன்றைய வண்டலைக்
கரைகளில் கொட்டிக் களையாறின.
வயல்வெளிகளில் காற்றின் ஓலத்துடன்
இரவு வந்து தரையிறங்க
கபறக்கொய்யாக்கள்

உண்டகளை தீர அரைக்கண் மயக்கத்தில்
கோயில் தெப்பங்களாய் மிதந்தன.

*ஆழியாள்*

*துவிதம்-2006*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாளம்

பிறந்த வீட்டில்
கறுப்பி

அண்டை நாட்டில்
சிலோன் அகதிப் பொண்ணு

இலங்கை மத்தியில்
"தெமள"

வடக்கில்
கிழக்கச்சி

மீன்பாடும் கிழக்கில்
நானோர் மலைக்காரி

மலையில்
மூதூர்க்காரியாக்கும்

ஆதிக் குடிகளிடம்
திருடப்பட்ட தீவாயிருக்கும்
என் புகுந்த நாட்டில்
அப்பாடா!
பழையபடி நான் கறுப்பியானேன்

*ஆழியாள்*

---

*துவிதம் - 2006*

## கி.பி. 2003 இல் தைகிரீஸ்

என் மடியில்
வாட்டிய இரு பாண் துண்டுகளுடன்
அமர்ந்திருந்தது ஒரு கோப்பை.
ஆசுவாசமாய் அருகே
தன் ஆவியைப் பறக்க விட்டபடி
சிறு கோப்பிக்கிண்ணம்.

விடிகாலைச் செய்திகள்
தொலை நிழலாய்
சுருள் அவிழ
தூரத்துப் பார்வையில்
தைகிரீஸ் நதிக்கரையைப்
பார்த்திருந்தேன்.

இருண்முகிலாய்ப் பிரண்டெழும்
புகைமூட்டத்துள்
உலகத்துக் கடவுளரெலாம்(?)
ஒற்றுமையாய் வந்தாற் போல
சோதிப் பெரும் பிரகாசத்தில்
ஊனக்கண் கெடப் பார்த்திருந்தேன்.

அசரீரிகளின் ஒலித்தெறிப்பில்
செவிப்பறைகள் அதிர்ந்து நோக
மேலும் பார்த்துக் காத்திருந்தேன்.
கிட்டவே இப்போது மிகக் கிட்டவே
தெரிகிறது தைகிரீஸ் நதிக்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு காலகாலமாய்க்,
காலம் தன்னில் கதைகளை கிறுக்கிச்
சென்ற கைகளை
உயர்த்தி மேலே பிடித்திருந்தது
மெசப்பத்தேமியா.

அதில்
பதாகையேதும் தெரியவுமில்லை,
இருக்கவுமில்லை.

சுருங்கிய வெறுங்கைகளே
வெம்பி அல்லாடிச் சொல்லப்
போதுமானதாய் இருந்தன
வேண்டாம் போர் என்று.

கண்கள்
கரும் பிணம் மிதக்கும்
சிறு குட்டைகளாய்
கலங்கிக் குழம்பித்
தெளிவுற முயல

காலியாய்க் கிடந்தன
கோப்பையும்
கிண்ணமும்.

*ஆழியாள்*

---

*துவிதம் - 2006*

# இருதேசமாய் பிறந்தாயிற்று

தவளை நடவடிக்கை
முதன் முதலாய்
நான் ஒரு இராணுவத்தினனைச் சுட்டேன்
அவனை அதில் நான் கொன்றேன்
அவன் செத்தே போனான்.

ஒரு வேளை
அவன் அடுத்த வாரம் விடுமுறையில்
செல்வதாக இருந்திருக்கலாம்.

அவனது முதலாவது சம்பளமும்
இதுவாகத்தான் இருக்கலாம்.

தன் முதல் சம்பளத்தில் தங்கைக்கு
சட்டையும் கழுத்து மாலையும் வாங்குவதாக
அவன் எண்ணியுமிருந்திருக்கலாம்.

ஒரு நேரம் வாங்கியும் வைத்திருப்பானோ!?

என் சின்னண்ணாவும்
நான் நெடுங்காலமாய் அப்பாவிடம் கேட்ட
அந்தச் சட்டையும் காற்சங்கிலியும்
வாங்கி வந்தானாம்.

யாழ்தேவியில், ஏறியவன்
என்னிடம் வரவே இல்லை.
ஒரு போதும் வந்ததே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குத் தெரிந்திருந்தது
அவன் என்னிடம் ஒருபோதும் இனி
வரான் என்று,
ஒரு வேளை இவனுக்கும் அது தெரிந்திருக்கலாம்.

*இளநீதா*

*வெளிச்சம் பவள இதழ் - 2001.*

# அம்மாவிற்கு

பதுங்கு குழியும் கூடப்
பாதுகாப்பற்றதே
எமது இன்றைய வாழ்வு.

அஸ்தமித்த சூரியன்
அரங்கிற்கு வருமுன்பே
குண்டு கொட்டிச்
செல்லும் கொலை விமானங்கள்.

நாசிக்குப் பழக்கமான
கந்தகக் காற்றும்
காதுக்கு நெருக்கமான
கனத்த ஒலியும்
காலைப் பொழுதுகள் எமக்கு.

இந்நிலையில்
அம்மா
படிப்பு சாதியுடைய
அந்தஸ்து கௌரவமுடைய
குடும்பத்தினைத் தேடி அலைகிறாள்,
ஓர் மாப்பிள்ளை வாங்குதற்காய்.

அண்ணாவும் தம்பியும்
கூடவே அக்காவும்
அடிமைநிலை தீர்க்க
அக்கறையோடு புறப்பட்டு
விடுதலை பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கமேயின்றி
இயந்திரத்தால்
பேசிக்கொண்டதும்

அடுத்தடுத்து ஏற்பட்ட
அநியாய இழப்புக்கள்
உன்னை இந்த
மனித சந்தைக்குத் தள்ளியதா?

அல்லது,
நீ சுமந்து வந்த

எமது சமூகத்தின்
அழுக்குகள் அத்தனையும்
நானும் சுமக்கவேண்டும்
என்ற எதிர்பார்ப்பா?

அம்மா!
மனிதனை மனிதனாக
பார்க்க முதலில்
பழகிக்கொள்வோம்.

நாளைய இருப்பு பற்றிய
நம்பிக்கையற்ற நடமாடும்
உயிர்ப் பிணங்கள் நாம்.
உயிர் தப்ப வேண்டுமானால்
ஊரைவிட்டு ஓடுவோம்.
ஆனால் விலை கொடுத்து
வாங்கியவனுடன் மட்டும்
ஓட நான் தயாராயில்லை.

*உமையாள்*

*மறையாத மறுபாதி, 2ஆம் பதிப்பு - 1993*

## வேள்வியில் வேகும் பிஞ்சு

ஒவ்வொரு காலையும்
ஒவ்வொரு மாலையும்
உனது கால்கள்
நடைபோடும்
மஞ்சள் பாலத்தடியும்
புதுக்குடியிருப்பு நகரமும்;

புதுக்குடியிருப்பு நகரமும்
மஞ்சள் பாலத்தடியும்
தினம் தினம்
உனது நடை தூரம்.

செம்மண் வீதியில்
செம் மஞ்சள் ஆடையும்,
கலைந்த
செம்பட்டைப் பின்னலும்,
அதன் நுனியில்
சிவப்புத் துண்டும்
இதுவே உனது நிரந்தர சீருடை.

அன்று
கடையொன்றின் முன்நின்று
சுரண்டிய உந்தன்
பிஞ்சுக் கரங்கள்
நீண்டது என்முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியே வடிவான
பால் வடியும்
உன் முகத்தில்
சின்னதேயான
புன்னகைக் கீற்று,
எதுவுமே அறியாத
பிஞ்சு உனக்கு
ஏன் இந்த நிலை?
யாரால் இந்த நிலை?

சின்னவளே!
பொறுத்திரு
மீண்டும் ஊர் போவோம்.

*உலகமங்கை*

*வெளிச்சம் பவள இதழ்- 2001*

# வேலி

நட்சத்திரப் பூக்களை எண்ண முடியாமல்
மேலே கவிந்தபடி கூரை.
ஒட்டடைகள் படிந்து
கறுப்பாய் போனது.

கம்பி போட்ட சாளரம் கூட
உயரமாய்
ஆனாலும் திறந்தபடி.
அதனூடே காற்று
எப்பொழுதும், மிகவும் இரகசியமாய்
உன்னிடம் என்னை
அழைக்கின்ற காற்று.

என்னைச் சூழவும் சுவர்கள்தான்.
'நச்... நச்' என்று
ஓயாமல் கத்திக் கொண்டிருக்கிற
பல்லிகள் ஊர்கிற
சுவர்கள். அவையும்
ஒட்டடைகள் படிந்து
எப்போதோ கறுத்துப் போனவை.

உனக்காக நான்
தனிமையில் தோய்ந்தவளாய்
இங்கே காத்திருக்கிறேன்.
பழைய பஞ்சாங்கங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக,
நம்பிக்கை தருவதாய்
ஒருசொல்லைத் தேடிப் பார்த்தபடி.

எப்போதுதான் என்னால்
நீ வசிக்கின்ற அந்தத்
திறந்த வெளிக்கு வரமுடியும்?
உன் இருப்பிடம்
இங்கிருந்து வெகு தொலைவோ?
உன்னிடமிருந்து
இரண்டு சிட்டுக் குருவிகளை
இங்கே அனுப்பேன்!
அல்லது
இரண்டு வண்ணத்துப்
பூச்சிகளையாவது...

***ஊர்வசி***

*சொல்லாத சேதிகள் - 1986*

# இடையில் ஒரு நாள்

எப்பொழுதாவது ஒரு மாலையில்
அது நடக்கலாம்.

ஒரு மதகுரு;
அல்லது முக்காடு அணிந்து ஒரு மாது
ஒரு தாடி மீசைப் பிச்சைக்காரன்
இப்படி,
இன்னம் வேறு யாராவது
என் வீட்டு வாசலில்
கதவைத் தட்டலாம்...

நான் அவர்களைச்
சட்டென அடையாளம்
கண்டுகொள்கின்றேன்...

அந்த இரவு முழுவதும்
நீ என்னருகில் இருப்பாய்...
வாய் திறந்து பேச விரும்பாத
மௌனம்
இடையே கவிந்துள்ளது.
உனக்கு மிகவும் பரிச்சயமான
துப்பாக்கியை, துண்டுப் பிரசுரங்களை,
அடர்ந்த காட்டை
இன்னும் எதையெதை யெல்லாமோ
மறந்து போய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது உடலும், மனமும்
எனக்குள் அடைக்கலமாகும்.

விடியலில்,
கருக்கல் கலைகிற பொழுதில்
எனக்குக் கிடைத்த
தற்காலிக அமைதியில்
நான் உறங்கும்போது,
ஒரு முரட்டுத்தனமான
கதவுத் தட்டலுக்குச் செவிகள்
விழிக்கும்.

ராணுவக் கும்பல்; அல்லது
பொலிஸ் படை
பிறகு
கூந்தல் அவிழ்ந்து விழுகின்ற வரையில்
விசாரணை
என்னருகே; அம்மாவும்
கூட்டிலிருந்து தவறி விழுந்துவிட்ட
ஒரு அணில் குஞ்சைப்போல...

நீ போய்விட்டாய்
நாள் தொடர்கிறது...

*ஊர்வசி*

*அமைதி குலைந்த நாட்கள்: புதுசு கவிதைகள் - 2003*

## விஜிதரன் நினைவாக

இச்சையின்றிக் கைகள் அசைந்து
கால்களை உதைத்து
வீரிட்டபடி நீ மலர்கையில்
உன்னை பற்றிய அம்மாவின்
கனவுகள்
எப்படி இருந்திருக்கும்...?

இன்று இப்படியாயிற்று
இது எம்மண்:
இறுதியில் உன்னை அவர்கள்
கொன்று விட்டனர்
காரணம்...?
காரணம் கேட்டுக்
காணாமல் போக யார்தான் தயார்?

வாழ்தலுக்கான
உரிமைகள் மறுக்கப்பட்டு
குருதியுறைந்த உடலுடன்
ஆழப் புதைந்தது
உனது உடல் மட்டுமல்ல
உனதும் எனதும்
எம்போன்ற பலரதும்
உணர்வுகளும் கூடத்தான்.

உனது கதவு தட்டப்பட்ட
அந்த இரவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயமும் நம்பிக்கைகளும் கூட
ஆழப் புதைந்தன.
நீ காணமல் போனாய்

மீண்டும் ஒரு இரவு
உயிர்ப்படங்கி
சில்லிட்டது பூமி
உனது வாய்
உனது கண்
மூடியது மண்;
இருள்.

மெல்லத் தயங்கிய படி
அசைகிறது உலகம்
மௌனமாய்
இருண்டு கிடக்கிறது வானம்.

*ஔவை*

*எல்லை கடத்தல் - 2000*

## ராஜினி உன்னிடமென்ன குற்றம் கண்டனர்?

காற்று
உன் மரணச் சேதியை
காதில் அறைந்தது.
வீதியோரம் உறைந்து கிடந்த
உனது குருதி
மனிதம் மரணித்ததை
மௌனமாகச் சொன்னது.

நாம் என்ன செய்வோம்?
வாயை இழந்தோம்
கரங்களை இழந்தோம்
வெறும் வயிற்றுடன் மட்டும்
வாழ்ந்து தொலைக்கிறோம்.

தோழி;
சின்னச் சிட்டைப் போல
பறந்து திரிந்தாய்
நாம் பாடித்திரிந்த வீதியிலேயே
தன்னந் தனியாளாய்
அனாதையைப் போல
மரணித்தாயா?
உன்னிடமென்ன குற்றம் கண்டனர்?
மனதில் இரும்பும்
மூளையில் துவக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மனிதர்கள் - இவர்கள்.
வேறு என்னதான் நடக்க முடியும்?

பெண்ணொன்று நீ முடங்கி இருக்கவில்லை
உண்டு உறங்கி வாழ்வை வெறுக்கவில்லை
எமது கரங்களை இறுகப் பற்றி
ஒளியைக்காட்ட விழைந்து நின்றாய்

துவக்கும் இரும்பும்
ஆளும் தேசத்தில்
எமக்கேன் புலன்கள்
எல்லாம் அடங்கட்டும்.

உன்னைச் சுட்டு
எலும்பை எடுத்துப்
பாதையில் வீசினர்
பாதைகள் மூடப்படுமென...
சாம்பலை எடுத்து காற்றில் எறிந்தனர்
காற்றும் மௌனமாய் இருக்கட்டுமென.

மௌனத்துக்கு அப்பாலும் வாழ்வுண்டு
மரணத்தை மீறியும் போராட்டம் உண்டு...
புரிந்து கொள்வார்களா?

*ஔவை*

*எல்லை கடத்தல் - 2000*

## எல்லை கடத்தல்

சூரியன் மறைந்த பிறகு
காலமெல்லாம்
எனது வீட்டு முன்றலினை
பச்சையாய்க் குடை விரித்துக்
குளிர்வித்த புளிய மரம்
கரும் பூதமாகி நெஞ்சினுள் பாயும்.

கண்ணீரில் கரைகையிலே
காலால் உதைத்து
வேடிக்கை பார்க்கும்.
விழி நிமிர்த்தி
அண்ணாந்து பார்க்கையிலே
நிலவாலே தோள் தடவி
மனம் ஆற்றும் நீள் வானம்
இருண்டு பற்களால்
கழுத்தை நெரிக்கும்.
வீழ்ந்து
புரண்டு அழுத போதெல்லாம்
தன் மடியில் இருத்தி
எனை அணைத்த மண் கூட
வழிதேடும் எனக்கு
புதை குழியைக் காட்டும்.
சிறையுண்ட ஆத்மாவை
சுமந்திருக்கும் உடலோடு
ஆதரவு தேடி
ஒற்றைப் பறவையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பயணம் தொடங்கிற்று.

என் வாசல் தாண்டுகையில்
நா வரண்டு...
பேச்சிழந்து...
வழி நெடுக விழி நீள
என்தாய் வழி அனுப்பத்
தலை குனிந்தேன்.

காற்றுக்கும் காதிருக்கும்
கதறி அழ முடியாது.
சோகம் தான்
விடுதலைப் பாதையில்
நடக்க முனைந்ததால்
முடமாக்கப்பட்டு
கள்வரைப் போல
அடிமேல் அடியெடுத்து
மெல்ல நடந்தேன்.
எனது கிராமத்து வயல் வெளியும்
வயல் வெளிக்குத் துணையாக
உடன் துயிலும் இருளுக்குள்
நீண்டிருந்த பனைகளும்
கடும் கோபம் கொண்டு
எனை வெறித்துப் பார்த்தபடி.

வெற்றுத் தாளாய்
காற்றோடு பறந்தது இதயம்
இருளோடு பறந்தது முகம்
இன்னும் என் கால் மட்டும்
என்னோடு கூட

மணற்காட்டு வெளியும்
புதுக்காட்டுச் சந்தியும்



தாண்டிக்குளமும் தாண்டி
நீள நடந்தேன்.
குனிந்த தலை நிமிரவில்லை.
எனது மண்ணில்
நிச்சயமற்றுப் போய் விட்ட
எனது இருப்பை
உறுதிப் படுத்த
பிறந்த மண்ணின் எல்லையைக் கடந்தேன்
இறுதியாக
பாதங்களில் ஒட்டியிருந்த செம்மண்ணையும்
தட்டியாயிற்று.
செம் மண்ணும் போயிற்று
எம் மண்ணும் போயிற்று
போ.

ஔவை

*எல்லை கடத்தல் - 2000*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் குரல்

கொலையுண்டு போன
என் புதல்வர்களின்
முற்றாப் பிஞ்சுடலின் ஊனருந்தி
தன் கோரப் பசியாற்றி
தாகம் தீரச் செந்நீரும் குடித்தபின்
இன்னுமா தாய் நிலம்
புதல்வர்களைக் கேட்கிறது?

போராட என்னை அழைக்காதே
நானொரு தாய்
எனது புதல்வர்களையும் கேட்காதே
இரக்கமற்ற 'தாய் நிலமே'
கொல்லப்பட்ட என் புதல்வர்களின் இரத்தம்,
இன்னமும் காயவில்லை.

வாழ்வின் இனிமையை என் புதல்வருக்குக் காட்டி
நாம் விட்ட குறையைத் தொடரவென
நான் பெற்ற என் இனிய குழந்தைகளை
ஒரு காலம்
வாசல் வரை வந்து-மக்களுக்காய்
வழியனுப்பி வைத்தேன்.
'பூஞ்சிறகு முளைத்த
சிட்டுக்குருவியாய் பறந்து போன'
அவனுடன் நானும்
ஒன்றாய் நடந்திருந்தேன்...
மக்கள்; புரட்சி; விடுதலை எல்லாம்
வாய்ச் சொல்லாக
சந்தியின் ஓரமும்
வாவிக் கரையும்
புதை குழியும் மணல் மேடும்
என் புதல்வர்களின் சடலங்களால்
நிரம்பிய பிறகு...

துப்பாக்கி அரசர்கள்
சிம்மாசனம் ஏற
யுத்த வெறியில்
புதல்வர்கள் அலைந்தனர்.

இன்னுமா 'தாய் நிலம்'
புதல்வர்களைக் கேட்கிறது?

கடித்துக் குதறி
நெரித்தும் எரித்தும்
வடக்கிலும் தெற்கிலும்
உலகெங்கிலுமாக
எத்தனை குஞ்சுகளை விழுங்கி
விட்டாய்
இன்னும் அடங்காதோ உன் பசி?

விண்ணேறி மண் தொட்டு
மீண்ட பின்னும்
சமாதானம் வேண்ட
யுத்தம் தேவையோ?
பற்றி எரிக ஆயுத கலாசாரம்!

என் மழலைகளை விடு
நாளைய உலகம்
அவர்களுக்காய் மலரட்டும்!

ஔவை

---

*எல்லை கடத்தல் - 2000*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
உயர்ந்தவன், உன்னதமானவன்
தனித்துவமானவன்
நான் ஆண்

ஆண் என்பதால்
ஆற்றல் உள்ளவன்
அனைத்தும் அறிபவன்
குற்றம் செய்ய முடியாதவன்

குற்றம் இருந்தாலும்
மன்னிக்கப்பட வேண்டியவன்
ஏனெனில்
நான் ஆண் குறியை உடையவன்

எனது ஆண்குறி
எப்போதும் எங்கு வேண்டுமானாலும்
யாரைக் கண்டாலும்
விறைக்கக் கூடியது

சகோதரியோ மகளோ
யாரும் விதிவிலக்கல்ல
எனது ஆண்குறி விறைக்கக் கூடியது
அது இயற்கை



பண்பாடு
எனக்கு நடிப்பிற்குரியது
நான் வேடம் போடக் கூடியவன்
சமுதாயத்திற்காக

இந்த விறைப்பை வளப்படுத்த
நீலப்படங்கள் உண்டு
புத்தகங்கள் உண்டு
அதனால் இது வளப்படுத்தப்பட வேண்டியது

நீ யார்?
வெறும் பெண்
இந்த விறைப்பைத் தீர்க்கப்
படைக்கப்பட்டவள்

நான்
உயர்வானவன்
உன்னதமானவன்
போற்றப்பட வேண்டியவன்
நான் ஆண்

கட்டுப்பாடுகள் அற்றவன்
சந்தோசமானவன்
எனது ஆண்குறி
விறைக்கக்கூடியது

*கல்யாணி*

---

*பெண், 4:2, 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலம்

கோலமிடுவது
அம்மா வழியாய்
வந்த
பழக்கம்.
தனித்துவமும் கூட.
அம்மா
கோலமிடும் போது
இவள்
இரசித்து
மகிழ்ந்ததுண்டு.
வெட்கம் இவளை
ஆட்படுத்திய
பொழுதில்
சிறுகால் பெருவிரல்
கோல மிட்டதுண்டு.
இவள் கோலமிடும்
காலம் வந்தபோது
இவள்
கோலமிடவில்லை
முற்றத்தில்
புற்றிருந்தது.
மரநிழலில் வாடிய
இவள் கரங்கள்
மண்வெட்டி
தூக்கி நடந்ததால்,
இப்போ
புற்றில்லை.
ஆனால்
முற்றத்தில் அவள்
உடலில்
ஓடிய குருதி
கோலமிட்டிருந்தது
என்றும் அழியாதபடி.

*கோ.சி. கலைக்கதிர்*

*வெளிச்சம் பவள இதழ்- 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயும் அவளும்

முகில்களை விலத்தி
அவளை உணர வருகிறாய்

மெல்ல என நினைத்து
விழியில் காமம் வழிந்து விழ
தாபம் நிறைந்த ஒலி
திருப்தியடைய
நம்பிக்கைகளும் பிரம்மைகளும்
பிரேமைகளை எழுத்திவிட
என் உயிரியற் குறைகளை
அறியாக் குழந்தை
காதல் கொள்கிறான்

திரையில்
ஆனந்த நடனம்
தரையில் - துணையின்றி விழுகிறது
காதல் உடைகிறது

காலங்கள் மடிந்தே போயின

நாளை பற்றின
எந்த சம்பிரதாயமுமின்றி
அவள் கட்டிலில் கிடக்கிறாள்

நீ நெருங்குகிறாய்
தாண்டியும் விலத்தியும்
தேவையானால்
சன்னல் கண்ணாடியையும் உடைத்து,
பார்!
உன் சின்னப் பெண்
உறங்கிக் கொண்டிருக்கிறாள்

*கற்பகம்-யசோதரா*

---

*காலம், ஜூன்- 2005*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிநேகிதம் முடியும்

முன்னே போனவர்
நினைவழுத்த
பரபரக்க
அலைகளின் நடுவே
எதிரியைத் தேடி
அவள்.

காற்றும் மழையும்
கொடுக்கும் குளிரும்
உறவாய்த் தொடர
புயலிடை புரண்டும்
புன்னகை பூத்தவள்

எதிரியின் எறிகணை
இடிபோல் விழுந்தும் - மனம்
இடியாதிருந்து
இடியினோடுலவி
சிநேகிதியானவள்

தூரத்துப் புள்ளிகள்
பெரிதாகிப் பெரிதாகி
இலக்குகள் தெளிவாகும்
விழிகளில் ஒளியேறும்
கடலடி மாண்ட
எம்மவர் நினைவுகள்

இதயத்தில் நடமாட
அவள் திசை அதுவாகும்.
இலக்குகள் மீண்டும்
புள்ளியாய் மாறினால்
சீறும் அலைகளின்
சிநேகிதம் தொடரும்
ஆயினும் ஓர் நாள்
அதிர்வொன்றோடு
சிநேகிதம் முடியும்

*க.கனிமொழி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்த மகனுக்காய் என் கால்களை நகர்த்த

அவனை விதைத்த
அடுத்த கணம்
அதோ
அடுத்தடுத்துள்ள
கல்லறை நோக்கி
ஓடின கால்கள்.
கண்ணீர்ப் பூக்களைத்
தூவின கைகள்.

அவன் விதைகுழிக்கு
மண்ணிட்ட கரங்கள்
அனைத்துமே...
தத்தம் மக்களுக்குமாய்
மண்ணிட்டிருந்தன.

எந்த மகனுக்காய்
என் கால்களை நகர்த்த?
நேற்று விதையுண்டு போன
மூத்தவனுக்கா? - இல்லை
இப்போதுதான்
விதைக்கப்பட்ட என்
இளைய குஞ்சுக்கா?

*அ. காந்தா*

*எழுதாத உன் கவிதை: தமிழீழப் பெண்களின் கவிதைகள்- 2001*

## கறுப்பு யூலை

கறுப்பு யூலையும் வந்ததோ
பத்து வருடங்களும் ஆனதோ?
அன்று அரசு சிரித்தது
தமிழன் அழுவதைக் கண்டு.
இன்று பத்துவருடங்கள் கழிந்தும்
எமது அழுகை ஓய்ந்ததுவா?
பின்னைய எத்தனையோ யூலைகள்
கறுப்பு யூலையை மறக்கடிப்பனவாய்
வந்து போயின.
ஆயினும்
எம்மைப் போராட வைத்தது
83 கறுப்பு யூலைதான்.
இனிய காலையின் கீதத்தை ரசிப்பதற்கு
எத்தனை முறை பிச்சை கேட்டுச்
சலித்தோம்
பிச்சைக்கார அரசிடம்.
ஒப்பந்தம் என்று எத்தனை தடவை
நற்செய்தி கூறியது
தொடர்ந்தவை கறுப்பு யூலைகள்தான்.
எதிர்பார்த்த வண்ணம்
முடிவற்று நீண்டுகொண்டே போகும் பல
யூலைகள்.
எம் விடியல்?
மிக மிகத் தொலைவில்.

*கிருஷாந்தி ரட்ணராஜா*

*காலங்கள் - 1998*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒற்றைப் பனையடிக்கு உரிய பொருள்

நெடிதுயர்ந்த
ஒற்றைப்பனை மரம்
மெல்லிய தும்புகள் முறுக்கப்பட்ட
கயிற்றில் பிணைக்கப்பட்ட மாடு.
கண்ணிற் கெட்டும் நிறைந்த புற்கள்
ஆகா எத்தனை இனிமையானது அது.
காலடியில் இருந்த புற்கள் மறைந்தன.
அதோ சற்று எட்டத்தில்...
அவையும் மறைந்தன
அப்பாலான பச்சைப் புற்கள் தான்
எனக்குத் தேவை
ஒற்றைப் பனை மரச்சுற்றாடலின்
காலடிப் பச்சை சிறிதாகிவிட்டதே
அக்கரைப் புற்கள் நோக்கிய நகர்வு
எவ்விதம் சாத்தியம்?
இது என்ன? என் கழிவுகள்.
இத்தனையும் விட்டுச் சென்றேனா?
பனைநிழல்
இப்போது
எவ்வளவுதூரம் சென்று வந்தேன்
உண்டகளைப்பில் வெகுவான தூக்கம்!
இரை மீட்டல்!

இவை யென்ன?
வாலிலும் முதுகிலும்
பேனுக்கு அலைகின்ற காகங்கள்
வாலை அசைத்தால் மீண்டும் குத்தும்
சீ! தொலைந்து போங்கள்.
எழுந்து நின்றேன்
எங்கே எனக்குப் புல்?
நடந்தேன் நடந்தேன்
நடந்து கொண்டிருக்கிறேன்
புல்லைக் காணவில்லை.
அங்கே சிறு காற்று
பச்சை மணம் அடிக்கிறது.
காலை வைத்தேன்
கழுத்தில் ஏதோ...
எங்கோ இதைக்கண்டேனே!
ஒற்றைப் பனையடியில்
மறுகாலை வைத்தேன்
கழுத்தை இறுக்குகிறதே!
இதென்ன தடுக்கிறதே!
இத்தனை நாள் இது எங்கிருந்தது?
ஆக நான்
ஒற்றைப்பனையடிக்கு
உரிய பொருள்.

*கிருஷாந்தி ரட்ணராஜா*

---

*காலங்கள் - 1998*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறக்க விடு

என்னைப் பறக்கவிடு
மோகன வானத்தில்
மௌனத்தைக் கலைத்து
ராகத்தில் இசைமீட்டி
விடுதலைச் சிறகு விரித்தபடி
என்னைப் பறக்கவிடு.
வானவில்லின் அளவெடுத்து
வருவதற்கும்
மேகத்திரள்களிடையே துயின்று
எழும்புதற்கும்
நிலவை
ஒற்றிவந்து பொட்டிட்டுக் கொள்வதற்கும்
கார்காலம் பொழியும்
தூறல்களில் இறகு
நனைத்துக் குளிப்பதற்கும்
நீள் தூரம் பறக்கும்
எனது சிறகுகளைத் தா.

புள்ளிக்கோலத்தில் மிளிரும்
இறகுகள் உனக்கு விருப்பம்
அது காற்றைக் கிழித்து
உன்னிப் பறப்பதே
எனக்கு மட்டும் கேட்கும்
எனது பாடல்
வானப் பரப்பெங்கும்
பரந்து விரியவேண்டும்
புள்ளினங்களின் கூட்டத்தில்
நானொளிக்க
நீ வானம் பார்த்து
அங்கலாய்த்துத் தேடுவதை
இரசித்தபடி
இன்னும் உயரப்
பறக்கப்போகிறேன்
இதோ வானம்
என்னை அழைக்கிறது.

*குறவஞ்சி*

---

*எரிமலை - மார்ச் - 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடலின் அர்த்தங்கள்

சிவன்
அவன் பெருமான்...
ஆடியே ஆடல்...
அவை தீர்த்ததாக...
ஐதீக அர்த்தங்கள்.

ஆனந்தம்
கோபம்...
சாந்தம்... இவ்வாறு இன்னும்...
அது திருவிளையாடல்
அன்றைய புராணம்.
ஆங்கே புரட்டினால்...
அது சொல்வதோ...
ஆடல் சாதனை யென்று.

பிரளயம் கண்டு...
இருப்பது விடுத்து...
நகரத் தொடங்கினோம்,
ஆடித்திரிவதாய்... ஆடியே திரிவதாய்...
உயர்திணை... உரைக்க,
கலியுகம்; கலியுகம்... கரையக்கரைய...
அசைவற்றிருக்க அஃறிணைப்பொருளா?
அதுவும் அசையுமே.

ஆடலின் அர்த்தங்கள்
உணரப்படாத வேளை
தேடலின் ஆய்வாய்
தெரிந்ததும் இங்கே
ஆடல் சாதனை யென்றே.
ஆடியும், கவி பாடியும்
கறப்பதென்றாலும்
அதுவும் செய்வோம்.

அவன் அமையவில்லை
அவளுக்கு,
அடங்க
அடக்க,
துடிப்பு இல்லையா?
பின்னே...
உங்கள் அனுபவங்களை
நாங்கள் படவில்லை...
என்றதொரு ஆதங்கமா?

நோக்கிடும்
சொல்லம்புக்கான...
எதிரம்பு எம்வசமுண்டு
கற்பதே தொழிலாகி...
கல்விச் சாலைகள் கக்கிவிட்ட போதும்
கற்றுக் கொள்ள அநேகம்...
வாருங்கள் வாருங்கள்
இலவசம் இலவசம்...

*கோசல்யா சொர்ணலிங்கம்*

---

*மறையாத மறுபாதி, 2ஆம் பதிப்பு - 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்வெளி

நிசப்தம்;
பனிபடரும்
மலர்களின் நறுமணம்
மிதக்கும்
நள்ளிரவு

வானத்தைப் பார்த்தபடி
புல்தரையில் படுத்துள்ளேன்

தூரத்தே
மத்தளமும்
யாரோ ஒருவர் பாடுதலும்
இடையிடையே
துப்பாக்கி வெடியொலியும்
ஏந்தி வரும் காற்று

பாட்டின் தாளத்தில்
விண்மீன் அசையும்
மேகங்கள் நடனமிடும்
காற்று நெட்டுயிர்க்கும்
ககனமெல்லாம்
இசைநிறையும்

தென்றல் தடவும்
எனது தலைமயிரில்
காதின் மடலில்
காலின் பெருவிரலில்
மார்பகத்தின் மேட்டில்
இன்பம் கொப்பளிக்கும்
எனதுயிரும்
எனதுடலும்
இவ்விரவின் தேன் பருகும்

நான்
விண்ணை வலம் வந்து
விண்மீனை முத்தமிட்டு
சந்திரனைப் பாடி
மரத்தில் இளைப்பாறி
மலர்களினைத் தழுவி

எல்லையில்லா அண்டப் பெருவெளியில்
என்னை இழந்து
என் நாமம் கெட்டு
சதுராடிச்
சுழல்வென்
துயர் மறுப்பேன்.

*சங்கரி*

---

*உயிர்வெளி - 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பும் இறப்பும்

உன்னை முன்னர்
ஒருபோதும் அறியேன்
மூவாயிரம் மாணவருள் ஒருவனாய்
நீ மிக மிகச் சாதாரணமாய்
இருந்திருப்பாய்

நாடகம் என்றோ
ஸ்ரைக் என்றோ
மாணவர் அவை வேலைகள் என்றோ
எதிலுமே அக்கறை அற்றவனாக
வந்து போயிருக்கலாம்

ஏதோ ஒரு நாளில்
உன்னை நான்
எதிர்ப்பட்டிருத்தலும் கூடும்
வளர்ந்து பரந்த
வாகையின் நிழலில்
நூலக வாயிற் படிகளில்

அன்றேல்
பல்கலைக்கழக முகப்பு வாயிலில்
பின்புறமாகப் பலாலி வீதியில்
எங்கேனும்
கண்டும் இருக்கலாம்.

எனினும்
அப்போது உன்னை அறியேன்
இன்று
உனது அவலச் சாவை
உணர்த்திய நோட்டீஸ்
நூலகச் சுவரிலும்
விஞ்ஞானபீட வாயில் முன்னும்
கண்டு கனத்தது நெஞ்சு.

இளைஞனே
இன்று முழுவதும்
உனது முகமும்
இன்றுதான் அறிந்த
உனது பெயரும்
மனதை அரித்தன
மெதுவாய்.

உனது பெயரினை
உனது ஊரினை
உனது இருப்பினை
அறிவித்தது அந்த
மரண நோட்டீஸ்.
வாழ்ந்ததை உணர்த்திய
மரணம்!
நான்
துயர் மிகக் கொண்டேன்

*சங்கரி*

---

*சொல்லாத சேதிகள் - 1986*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயக நினைவுகளுடன்...

பனி போர்த்திக் கொண்டிருக்கும்
அழகிய அல்ப்ஸ் மலையின்
அடிச்சாரலில்
பூக்கள் பூத்துச் சொரியும்
அப்பிள் மரங்கள் நிறைந்த
ரம்மியமானதோர் சூழலில்
நான்.

சோகங்களில் மூழ்கிய
சொந்தங்களை அர்ச்சிப்பதற்கு
மலைசூழ்ந்த மணித்திரு நாட்டின்
நாளை பூக்கவிருக்கும்
சுதந்திர வாசம் பரப்பும்
சமாதானப் பூவில்
இன்றே தேனருந்தும்
என் கனவுகள்

இளந்தென்றலின்
மெல்லிய தோள்களில் ஏறி
என் காதில் வந்து விழும்
தமிழ்த்தாயின் மைந்தர்களின்
ஓலக்குரலில்
மான நரம்புகளை உடைக்கும்
என் உணர்வுகள்

பாதை மாறி பயணிக்கும்
எம்மவரின் இரத்தோட்டங்கள்
சொல்லும் சோகக் கதைகளை
கேட்டு அழுவதற்கும்
உமிழ் நீரை உணவாக்கியபடி
பற்றியெரியும் பசித்த வயிறுடன்
ஒவ்வொரு இரவும் பகலும்
உறங்கி உறங்கி விழிக்கும்
என் உறவுகளின்
உயிர்த்துடிப்பில் கலப்பதற்கும்
என் நுரையீரலின் பிடியிலிருந்து
விடுபட்டு பறந்து விட்டது
என் சுவாசம்

என்றாலும் உயிர் விறைக்கும் குளிரில்
விண்தொடும் சோலைகளினூடு
மண்தொட்டு ஓடிவரும்
ஜீரா நதிக்கரையோர
அகதிகள் விடுதி ஒன்றில்
இன்னும் உரிமைப்பதிவு
செய்யப்படாத மனிதனாக
நான்.

*தே. சங்கீதா*

*ஞானம், மார்ச்- 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழையா விருந்தாளிகள்

வெள்ளிப்பனி படிந்த
இலையுதிர்த்த நெடு மரங்கள்
பெருங்கட்டட சாலைகளில்
எலும்பையும் ஊடுருவும்
ஊசிப் பனித்துளிகள்.

உறைந்துவிட்ட பனிப்பாளங்களில்
சருமம் குத்திட
கைகளிலும் கால்களிலும்
நிணத்தாலான முட்கள்.

உருகிய தார் வீதியில்
கால்கள் கொப்பளிக்க
நடந்த போதும்
நாம் பெற்ற
உண்மையான காற்பங்கள்.

அழையா விருந்தாளிகளான
எமக்கு -
பாராமுக விருந்தோம்பல்.

நினைவுகள் மட்டும் பசுமையாகி
கனவுகளைத் தொலைத்த
எமக்கு -
நடப்புக்கள் எல்லாமே
வெம்மை.

மனிதம் எங்கே?
நாளையும் இருப்பேனா?
கேள்விக் குறிகளின்
பூதாகார நெரிச்சலால்...
பனிச் சாரலில் -
நடுங்கும் கூதலில்
நீண்ட வரிசைகளில்
நாம் -
ஆயுட் தண்டனைக் கைதிகளாக...
அகதியான குற்றத்திற்கா?

*சத்தியா*

---

*மறையாத மறுபாதி 2ஆம் பதிப்பு- 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வேண்டி

காற்றோடு கை கோர்த்து
ஊர்க்கோலம் போகின்ற
மகரந்தத் துகள்களுக்கு
என் நாசித்துவாரமும்
பாதையாகிப் போனதில்
தொண்டைக் குழிவரை
மசமசத்தது

"அக்கா!
சித்திரைக்குப் பொங்கியாச்சே?"
பாதையில் ஒரு தமிழன்
பாசமாய் கேட்டான்

"...ம் ம் ம்..."
காலைப் பரபரப்பில்
பாணைக் கடிக்கவே
மறந்தேன் என்றால்
நம்புவானா...!

பாதி இரவில் விழித்திருந்து
ஊரில் வாழும் உறவுக்காய்
அழுதேன் என்றால்
நம்புவானா...!

கற்தரையில் எம்மவர்
நித்திரை கொள்வதை
ஊர்க்கடிதம்
சொன்னதில் தொடங்கி
இந்திய வல்லூறுகள்
எம்மவரை
உயிர் வதம் செய்வதில்
தொடர்ந்து
செம்மணிப் புதைகுழியில்
எம் பெண்மணிகள்
புதைகுழிகள்
தொடர்வது வரை

சத்தியமாக நான்
சித்திரைக்கு
பொங்கவில்லை என்றால்
நம்புவானா...!

"ஓம் தம்பி பொங்கியாச்சு"

என் பொய்யில்
முகம் மலர்ந்து
முன்னேறிப் போறவனும்
மூக்கைத்தான் தேய்க்கிறான்
கண்களையும் கசக்குகிறான்.

அழகிய மலர்களின்
நுண்ணிய மகரந்தங்களுக்கு
இவன் மூக்கும் பலிதானோ...!

காற்றோடு கை கோர்த்து
ஊர்க்கோலம் போகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரந்தத் துகள்களிடமிருந்தாவது
அந்நிய மண்ணில்
அடைக்கலம் தேடும்
எங்கள்
மூக்குகளுக்கும் கண்களுக்கும்
விடுதலை வேண்டுமென
இயற்கையை வேண்டிநின்றேன்.

*சந்திரவதனா ஷா - ஜேர்மனி*

*எரிமலை - மே 2000*

## பிணவலி

எங்கோ தொலைந்து போயிருக்கும்
சுகமான கற்பனைகளும்
என்னை விட்டுப் பிரிந்திருக்கும்
இனிய உலகமும்
வெறும் நினைவுகளாகவே
மீளவும் மீளவும்...!
இழப்பின் வதையில்
அழுவதைத் தவிர - என்னால்
வேறெதுவும் முடியவில்லை!

சட்டப் படியாகவும் சடங்குகளாகவும்
அம்மன் சந்நிதியில் வளர்த்த
ஓமகுண்டலப் புகையில் -
கண்கள் கலங்க
வாழ்த்தொலி முழங்க
அக்கினி சாட்சியாய் என்னுடன்
இரண்டறக் கலந்துவிட்ட
இன்னுயிருக்காக -
என் சுயங்களையெல்லாம் அழித்து
என்னை அதற்காய்
அர்ப்பணமாக்கிய கணத்திலிருந்து
என்னிடமிருந்து நகர்ந்துபோன
இனிய உலகை எண்ணி
நேற்றுவரை நான் கண்ணீர் சிந்தியதில்லை!

இப்போ...
முடிகள் நரை கண்டு
முகத்தில் சுருக்கம் விழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மைகளை இழந்துகொள்ளும்
முதிர்ந்துபோன நினைவுகளில்

என்னிதய சிம்மாசனத்தில்
ராஜாவாயிருந்த
எனதருமை ஆத்மாவின்
இன்னோர் முகத்தில்
முளைத்திருந்த கோரப்பற்கள்
நானறியாமலே என்றோ என்னைக்
கொன்று விட்ட சேதியினை
கொல்லைப் புறத்தில் உலாவும்
பழைய மூச்சுக் காற்றும்
பறக்கும் சேலைத் துண்டுகளும்
மெல்ல மெல்லக்
கதை சொல்லிக் கொண்டிருக்கிறது!

என்னிடம் வந்தது
எனக்கானதே என்ற நம்பிக்கையில்
இழந்து போன என் சுயங்களிற்காகவும்
தொலைந்து போன என் சுகங்களிற்காகவும்
இப்போ நான் சிந்தும் கண்ணீர்
திரும்பவும் என்னிடமே கேள்வி கேட்கிறது!

உதடுகள் தைக்கப்பட்டு
சிறகுகள் ஒடிக்கப்பட்டு
உயிர்த்துளிகள் சிதறிவிட்ட
இக்கணத்தில் -

எனது பிணத்தைப் பார்த்து
நானே அழுவதைத் தவிர
என்னால் வேறெதுவும் முடியவில்லை!

*சந்திரா இரவீந்திரன்*

*ஊடறு - 2002*

## காத்திருப்பு

நள்ளிரவில்
வல்லூறுகளின் சுவடுகள்
கிராமத்தை வளைத்தன
ஒரு கணம் கண்ணயர
நரபலி எடுப்போன்
மனிதர்களைக் காயப்படுத்தினான்.
என் விழிகளும் குருடாகின.
ஆன்மாவை இறுகப்பொத்தி
சில நிமிடங்கள்
என்னில் மௌனப்போர்
பயங்கரவாதத்தின் சாயம்
எனக்கும் பூசப்பட்டதல்லவா
என்னில் ஓடுவது
கலப்பற்ற தமிழீழ இரத்தமல்லவா
மறுநாள்
காணாமல் போன பட்டியலில்
நானும் சேர்க்கப்பட்டேன்.
காணாமல் போன
எனது பெயரும்
விலங்கிடப்பட்ட எனது கையும்
விடுதலைக்காய் காத்திருக்கும்
பிரிந்த உறவுடன் இணைந்து.

*சமர்விழி*

*வெளிச்சம் பவள இதழ் - 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தாயின் புலம்பல்

தெருப்புழுதியில் உன் உடம்பு
முதுகெல்லாம் இரத்த வெள்ளம்
நீதானா என்று குனிந்து பார்த்தேன்.
"ஓம் ராசா நீயே தான்"
"ஏன் ஆச்சி அழுகின்றாய்"
என்று கூடிநிற்கும் சனம்கேட்க,
"பெடியனைத் தெரியுமா உனக்கு?"
என்று மிரட்டுகிறான் காக்கிச் சட்டை.
அவன் கையில் துவக்கு வெயிலில் மின்னுகிறது
தெரியாது என்று தலையசத்தேன்
நான் பெற்ற முதல் முத்தை.
நெஞ்சம் பதறுதையா.

குருஷேத்திரத்தில் கர்ணன்வீழ
'ஐயோ மகனே' என்று குந்தி
ஓடிச்சென்று அணைத்தாளே!
ஐயோ ராசா நான் பாவி
இப்போ வந்து பிறந்து விட்டேன்
என் பிள்ளை என்று சொல்ல
முடியாத பாவியானேன்.
எனக்கு மட்டும் பலமிருந்தால்
இரவிரவாய் உன்னை எடுத்துச் சென்று
செம்மணியில் எரித்திருப்பேன்.
முந்தாநாள் சாமம் உனக்குப்
பழஞ்சோறு போட்ட கை
இந்தக் கடனையும்
துணிவோடு செய்திருக்கும்.

இராவணன் கொடுமை தாங்காது
காடாறுமாதம் போனவன் நீ.
நமது தலைவர்கள் போல
ஏதாவது சாட்டுச் சொல்லி
அங்கேயே இருந்திருக்கலாகாதோ?
திரும்பி வந்து ஏழுநாளில்
உன்னைச் சுட்டார்களோ கொடும்பாவிகள்!
ஏன் ராசா திரும்பி வந்தாய்?
உன்னை மகனென்று நான் வீட்டே
கொண்டுபோனால் உன்தம்பிமாரை
விட்டு வைப்பாரோ கொடியவர்கள்?
வேட்டையாடித் தீர்த்துவிட்டுக்
கொட்டிலையும் எரிப்பார்கள்.
மாட்டையும் லொறியில் ஏத்தி
பலாலி போய்ச் சேர்வார்கள்.
யாரென்று கேட்க யாரிருக்கிறார்
மகனே! நான் ஏழையல்லோ!

பெரிய இடத்துப் பிள்ளையெல்லாம்
மேல்நாடோடி டாக்டராக
நீயேன் ராசா எல்லாத்தையும்
உன் தோள்மேல் ஏற்றாய்?
உன்னை நம்பி வாழ்ந்த எம்மை
என்னென்று மறந்துபோனாய்?
என் ஒருத்தி கூலியிலே
உங்களை நான் வளர்த்தெடுத்தேன்.
நீங்கள் வளர்ந்து மரமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நிழல் தரும் வேளை
என்கனவெல்லாம் தெருப்புழுதியில்
அப்படியே அழிஞ்சுபோச்சு.
என் கடைசிக் காலம்வரை
என் கைதான் எனக்குதவி.
மெய்யே ராசா நான் போய்வாறன்
மிச்சத்தை வீட்டில் அழ.
என் வயித்தெரிச்சல் ஒருநாள்
இப்பாவிகளை எரிக்குமல்லோ?
தனிநாடு கேட்டு மேடையேறி
கனக்கக் கதைத்தவர்கள்
அயல்நாட்டில் விருந்துண்டு
பாதுகாப்பாய் இருக்கையிலே,
ஊருக்காய் மடித்த பிள்ளை
தெருப்புழுதியில்
கிடக்கின்றான்.
அவனை அங்கு விட்டுச் செல்ல
என் நெஞ்சம் விம்முதையா
என்பிள்ளை என்று சொல்ல
முடியாத பாவியானேன்.

*சன்மார்க்கா*

*சொல்லாத சேதிகள் - 1986*

## முனைப்பு

பேய்களால் சிதைக்கப்படும்
பிரேதத்தைப் போன்று
சிதைக்கப்பட்டேன்
ஆத்மாவின் உணர்ச்சிகள் எல்லாம்
இரத்தம் தீண்டிய கரங்களால்
அசுத்தப் படுத்தப்பட்டன.

என்னை
மேகத்திற்குள்ளும்
மண்ணிற்குள்ளும்
மறைக்க எண்ணிய வேளையில்
வெளிச்சம் போட்டுப் பார்த்தனர்
அவர்களின்
குரோதம் நிறைந்த பார்வையும்
வஞ்சகம் நிறைந்த சிரிப்பும்
என்னைச் சுட்டெரித்தன.

எனது
ஆசைகள் இலட்சியங்கள்
சிதைக்கப்பட்டன
அவர்களின் மனம்
மகிழ்ச்சி கொண்டது
அவர்களின் பேரின்பம்
என் கண்ணீரில்தான்
இருக்க முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் என் கண்களுக்கு
நான் அடிமையில்லையே
அவர்களின் முன்
கண்ணீரைக் கொட்ட.

என் வேதனை கண்டு
ரசித்தனர் அவர்கள்
என்றைக்குமாய் என் தலை
குனிந்து போனதாய்க்
கனவு கண்டனர்.

ஆனால்
நான் வாழ்ந்தேன்
வாழ்நாளெல்லாம் நானாக
இருள் நிறைந்த
பயங்கரங்களின் ஊடாக
நான் வாழ்ந்தேன்
இன்னும் வாழ்கின்றேன்.

*சிவரமணி*

---

*சிவரமணி கவிதைகள் - 1993*

## யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்

யுத்தகால
இரவொன்றின் நெருக்குதல்
எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்.

ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதிதோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர்நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்,
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்.

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித்த துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக் குழந்தைக் கதைகளினதும் அர்த்தத்தை
இல்லா தொழித்தது.

எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமங் கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்து போனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர்
படலையை நேரத்துடன் சாத்திக்கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை இனம் காணவும்
கேள்வி கேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கவும்,
மந்தைகள்போல எல்லாவற்றையும்
பழகிக் கொண்டனர்.

தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.

யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
"வளர்ந்தவர்" ஆயினர்.

*சிவரமணி*





**என்னிடம்**

ஒரு துண்டு பிரசுரத்தைப் போல
நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க
வார்த்தைகள் இல்லை.

இரவு;
இரவினால் அதிகாரமிடப்பட்ட பகல்;
நாளைக் காலையில்
சூரியன் உதிக்குமா என்பதில்கூட
சந்தேகம் கொண்டுள்ள என்னிடம்
கனவுகள்
தம் அர்த்தத்தை இழந்தவைதான்.

இந்தச் சமூகத்தின் தொப்புள் கொடிக்கு
துப்பாக்கி நீட்டப்படும்போது
ஒரு மெல்லிய பூ நுனியில்
உக்காரக்கூடிய
வண்ணத்துப் பூச்சியின் கனவு
எனக்குச் சம்பந்தமற்ற
ஒரு சம்பவிப்பு மட்டுமே.

நான் மனிதனாய் வாழும் முயற்சியில்
பூக்களை மரத்துடன் விட்டுவிட விரும்புகிறேன்
எனக்கு
பகலால் உருவமைக்கப்பட்ட அழகிய இரவு
கனவாய் உள்ளது.

*சிவரமணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றம்?

போர்க்களந் தன்னில்
பேராற்றல் காட்டி
வரலாறு படைத்திட்ட
வீர மகளிரின்
வித்துடல் சுமந்த
ஊர்திகள் தம்மை
கடந்து சென்றபோதெல்லாம்
தலை வணங்கி நின்றிருக்கின்றது
அந்த வேலி...

ஆறடி நிலத்திற்குள்
அடங்கும் விருப்பின்றி
அன்னை மண் முழுவதும்
உலா வருவோமென்று
வெடித்துச் சிதறி
காற்றுடன் கலந்து நிற்பவர்கள்
உருவப் படங்களுக்கு
மலர் தூவும் பேறிற்காய்
மகிழ்வடைந்திருக்கிறது
அந்த முகப்பு வாயில்...

தாய் நிலம் மீட்க
தோள் கொடுத்து விட்டு
குதூகலம் மாறாமல்
குறுஞ்சிரிப்பும் போகாமல்
பொய்க்கால்களும்
போய்விட்ட விழிகளுமாய்
உலா வருகின்ற
எண்ணற்ற காலடிகளை
தரிசித்து வியந்திருக்கிறது
அந்த வாசற்படி...

இத்தனைக்குப் பின்னும்...
விழி திறக்க விருப்பமின்றி
மனம் மாறும் போக்கின்றி
பேதையர் என்றும்
பூவையர் என்றும்
சுருதி பிசகாமல்
ஒரே தாளகதியில்
மீண்டும் மீண்டும்
உதடுகள் இசைக்கும்
வெற்றுக் கோஷங்களைச் சுமப்பதற்காய்
வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறது
அந்த வீடு.

*சிரஞ்சீவி*

---

*எழுதாத உன் கவிதை: தமிழீழப் பெண்களின் கவிதைகள்- 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் கீதம்

மனித நடமாட்டமில்லாத
உணர்வுகள் அடங்கப்பட்ட இருளில்
நிகழ்ந்தன அவை

கோரத்தனங்களின் பற்கள் விழுங்கிய இரகசியங்களை
குண்டு கொண்ட ஆட்காட்டியின் அவலக்குரல்
தொண்டைக்குழி மட்டும் வந்து
அடங்கிக் கொண்ட இரவுகள் பல.

வெட்ட வெளிப் பரப்பின்
இரகசிய ஓரங்களில் நடந்தேறின அவை

எனக்குள் அந்நியம் அமிழ்த்திய கொடூரங்கள்
ஈரம் காயாமல் இன்னும்
பிசுபிசுத்துக் கொண்டிருக்கிறது

என் உடல் நைந்து உருக்குலைந்திருக்கலாம்.
ஏதாவது ஓரிரு எச்சம் மட்டும் இருக்கக்கூடும் -
ஆனால்
என் உயிர் இன்னும் காத்துக்கிடக்கிறது.
உண்மைகளின் வேர்களைக் காத்தபடி
என் உயிர் இன்னும் காத்துக் கிடக்கிறது.

சருகாயென்னை உதிர்த்த போதும்
என் ஆன்மா அழியவில்லை
அது எருவாய் இன்னும் இன்னும்
நியாயத்துக்கு உரமிட்டபடி உறைந்திருக்கிறது
என்றாவது உண்மையின் வெப்பம்
ஸ்பரிசிக்கும் போது அவை உருகியே தீரும்.

*சுகந்தினி சுதர்சன் - ஜேர்மனி*



# போரின் நாட்கள்

போரதிர்வுகள் கிளம்பிய காலையில்
சிதிலமாக்கப்பட்ட எனது
வாழ்க்கைக் கனவுகளோடு
இன்னும்,
உயிரள்ளிப் போகின்ற
கனத்த நினைவுகளின் மீதத்தில்
நீள்கின்றது வாழ்க்கை.

நிறங்களற்றுப்போன
பாதையெங்கும்
நெருஞ்சிமுட்கள் புரையோட
கொடிய போரின்
கரிய இரவுகளெல்லாம்
தனிமை சூழ
விழித்திருந்தேன்.
இரவுப் பறவைகளின்
அவலக் குரலும்
எங்கோ வலிமீதுற
மண்பிராண்டி துடிப்படங்கும்
நாயொன்றின் ஓலமும்
அமைதி கிழித்தன.
படுக்கையை நனைக்கும்
பனித்துளிகள் மனதைக்
குளர்விக்குமா?
கந்தகப் புகை நடுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறிய என் உறவின்
இறுதி உயிர்வலி சுமந்த
காற்றறியுமா என் தவிப்பு.
என்னருகே உறங்கும்
சின்னத் தளிருக்கு
நாளை என்ன சொல்வேன்.
மனதைக் குடையும்
ஓராயிரம் கேள்வியோடு
நாளை ஒரு
நிலவுக் கதிருக்காய்
ஒரு சிட்டுக்குருவி
இசையெழுப்புகின்ற
இனிய காலை
வரவுக்காய்
காத்திருக்கின்றேன்
கண்ணீர்த் திரைகளைக்
காற்று உலர்த்துகிறது.

*சுதாமதி*

---

*எழுதாத என் கவிதை: தமிழீழப் பெண்களின் கவிதைகள்- 2001*

# ஓநாய்கள் வந்தன

பொழுது மெதுவாய் சாய்கிறது.
அழகான என் சிறியவீடு... அதில்
எனக்கென
ஒரு இருட்டறை
குப்பி விளக்கு வைத்த குசினி
இவைதான்
என்பிரியமான உலகு
நானே இரசித்து
நடக்கின்ற 'மிடுக்கான' என்
நடையிது...

ஒழுங்கையில் திடீரென
நாய்குரைக்கும் சத்தம்...
அது
அசாதாரணமாயிருந்தது.
யன்னலூடே பார்க்கிறேன்
படலைக்கருகில் 'ஓநாய் கூட்டம்'
பத்துப்பன்னிரெண்டென அவை.
என்னை
நான் எதனுள் மறைக்க...

என் தனிமையில் களிகொண்டு
வெடுக்கென
என்னில் பாய்ந்தன ஓநாய்கள்
குரல்வளையும் வறண்டுபோய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர மறுத்தது.
ஆனாலும் விக்கித்துக்கதறினேன்.
ஓநாய்கள் தம்முன்னங்கால்களால்
என் கன்னங்களை அறைந்தன
தலை கிறுகிவந்தது
கண்கள் இருண்டுபோக

என்னுடல்
இழுத்துச் செல்லப்படுகிறது என்
இருட்டறைக்குள்...
நான் நினைவிழக்கிறேன்
ஓநாய்களோ
மகிழ்வுடன் எழுந்தன
புரியாத மொழியில் பேசியபடி
விரைந்தோடின...
என்னுடலெங்கும் காயங்கள்
அசையமுடியவில்லை
கிழிந்த உதடுகளிலிருந்து 'குருதி'
வடிந்தது...
சிதைந்த என் உடலங்களை
ஒருங்கு சேர்க்கிறேன்...
மெதுவாய் நிமிர்ந்து சுவரில் சாய்கிறேன்
நான் கிடந்த இடம்- அது
குருதியில் நனைந்திருந்தது
என் இதயம் அனலாய்க் கொதிக்க
கண்ணீர்
அதன் வடிகாலாய் வழிந்து
உதட்டுக்குருதியை
கழுவிச் சென்றது



எழுந்து செல்கிறேன்
முன்னே களப்புநீர் கலங்கியிருந்தது
பத்துமுறை
இல்லை பன்னிருமுறை மூழ்கியெழ
சூரியன் முழுவதுமாக நீரினுள் புதைந்து
அணைந்துபோனான்

இப்போது
எல்லாம் சரியாகிவிட்டது
நடந்தவை யாருக்கும் தெரியாதுபோலும்!
ஆனால்
என் சுயம் எங்கு தொலைந்தது
ஐயோ!
அந்த மிருகங்கள் வந்து...
நினைக்கும் கணங்களில் நான்
மரணித்து மீழ்வதுபோல்...
எனினும்
வெறித்த என் விழிப்பார்வையூடு
தொலைவில் தெரிகிறது
நான் இரசிக்கும் அந்த 'மிடுக்கு'
அந்த நடையில்
நான்.

*கே. சுதாஜினி*

---

*பெண், 5: 4 - 2000*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்மை

எனக்கும் அவனுக்குமான
உறவின் விரிசல்
அனர்த்தமானது

இப்போதெல்லாம்
வேண்டுமென்றான எமது பார்வைகளின்
உரசல்களைத் தற்செயலாக்கி
நகரும் நாட்கள்
சொல்லிச் செல்லும்
அந்த நாளின் மரணத்தை

நிறைவு அற்று.

அவன் நிறைமட்டும்
உணர்வில்

இன்னும் எனக்குள்
காதோரச் சருமத்தில்
அவன் விட்டுச் சென்ற
வியர்வை வீச்சும்
வாய் நாற்றமும்
எரிச்சலாய்

அவன் வேண்டிநிற்கலாம்
மீண்டும்
இறந்துபோக ஒரு நாளை

தற்செயலான அவன் பார்வை
தவிர்த்து
நிலை குத்தி நிற்கும்
என் பார்வை இன்னுமொருவன் மேல்.

*சுமதி ரூபன்*

*புலம்பெயர்ந்தோர் கவிதைகள் -2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலங்காதே கண்ணே காத்திரு

நீ என்னிடம்
அன்புக்காக மண்டியிட்டாய்
கோரைப்புல்லிடம் மண்டியிடும்
கும்பிடு தட்டான் போல்

ஆயிரம் தடவை
இந்த ஆத்மாவில்
அவை எழுதப்படட்டும்

அறிவால் முதிர்வு கொள்
என் அன்பே!
உன் அன்பை ஏற்றுக் கொள்ள
இப்போது முடியாதிருப்பதற்காக
என்னை மன்னித்துவிடு

தேடல்கள், புரிதல்கள்
வெறுத்தல்கள், மறுத்தல்கள்
கோரல்கள், போரிடல்கள்
எனப்பல வேலைகள் உள்ளன

எல்லாம் முடிவில்
நான் உன்னிடம் வருவேன்
உடன் இருக்கவும்
உன்மீது அன்பு செலுத்தவும்
உன் அன்பை ஏற்றுக் கொள்ளவும்

நான் உன்னிடம் வருவேன்
காலைக் கதிரும்
வெளிப்புமாக இணைந்து கொள்ள.

அதுவரை
உன் காதலைக்
காத்து வைத்திரு
கலங்காதே
கன்னாபின்னா என
கோபமும் கொள்ளாதே

போர்க்காலம் கொடியது
என்னையும்,
உன்னையும்
நம் காதலையும்
சுட்டெரித்து விடும்
போரின் முடிவில்
நான் உன்னிடம் வருவேன்

காரிருளில் உன்
கால்களிடை
முகம் புதைக்க
கவலை மறந்து
உன் மார்பில்
சாய்ந்து கொள்ள
என் தலையைக்
கோதி... விடும் உன்
கைகளில் முத்தங்கள்
காணிக்கை தர
உன்னை நீயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நானும்
மறந்து போக
யாரும் கண்டறியாத
எம் உயிரை
நாம் உயிர்த்தெடுக்க
நான் உன்னிடம் வருவேன்.

*சுல்பிகா*

---

*உயிர்வெளி - 1999*

## காத்திருப்பு

உன்னைப் பார்த்து நீண்ட நாட்களாகி விட்டது.
உனது குரலின் அன்பை அனுபவிக்க
ஏங்கித் தவிக்கிறது மனம்.
பாசம் நிறைந்த உன் பார்வைக்குள் நனையும்
நாளின் நினைவுகளில் கழிகிறதென் நிகழ்காலம்.
கால நீட்சியில் உனது கோலத்தில்
எழில் கூடியிருக்கும் என்று
நினைக்கின்றேன்
இத்தனை காலப் பிரிவினால் நீயும்
என்னைப் போலவே தவித்தபடி இருக்கலாம்.
நேரில் பேச வேண்டிய செய்திகளை
சுமக்கின்ற எங்களின் மனங்களின் சுமைகளை
மாற்றிக்கொள்கின்ற நாளின் வருகையை
எதிர்பார்க்கின்ற கணங்களின் அழிவுகள்
வருடங்களாக நகர்கின்ற பொழுதிலும்
தொடர்கிறது உனக்கான எனது காத்திருப்பு.
பேசிக்கொள்ள நேரமற்ற விதமாய்
உணர்வுமிக்க பொழுதொன்றில் சந்திக்கினும்
உனது கனிவான பார்வையே போதும்
இன்னும் ஆயிரம் ஆண்டுகள் காத்திருக்க
உன்னைப் பற்றிய கனவுகளில் வாழ்வதால்
வாழ்க்கையை இனிமை நிறைந்ததாய் உணர்கிறேன்.
நானும், உனக்கான எனது கவிதையும்
வழமை போலவே காத்துக் கொண்டிருப்போம்
எங்களது காத்திருப்பு ஒருபோதும் முடிவடையாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில்,
நீ இல்லாமல் போய்விட்ட செய்தியும்
உன்னைப் போலவே இரகசியமானது
என்பதுடன் பெறுமதியும் வாய்ந்தது.

*சூரியநிலா*

*வெளிச்சம் பவள இதழ்-2001. சோழநிலா என்ற பெயரிலும் எழுதியுள்ளார்.*

## நம்பிக்கை ஒளி

நான் பறக்கத் துடிக்கிறேன்...
என்னால் முடியவில்லை.

என் கைகளும், கால்களும்
பிணைக்கப்பட்டு
சிரசிலே முள்முடி தரிக்க
நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன்.

என் முழுச்சக்தியையும் திரட்டி
நான் பறக்கத் துடிக்கின்றேன்
என்னால் முடியவில்லை.

ஒடுக்குமுறைகள் என்
குரல்வளையை நெரிக்கின்றன.
மூடநம்பிக்கைகளோ என் மேனிமீது
பாம்புகளாய் நெளிகின்றன.
சாக்கடை நாற்றத்தை விஞ்சிய
துர்வாடை என் நாசிகளை
மூச்சு முட்ட முனைகின்றது.

ஆனாலும்
என்னுள் முகை கொண்டுள்ள
அசைக்கவியலாத ஒளி பொருந்திய
நம்பிக்கை மீது மட்டும்
ஆணியறைந்திட
எவற்றாலும் முடியவில்லை.

செந்தணல்

*எழுதாத உன் கவிதை: தமிழீழப் பெண்களின் கவிதைகள் - 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணங்கள் மலிந்த பூமி

டாங்கிகள் உழுது கிளறிய
நிலங்களில்
கண்ணிகள் விதைக்கப்பட்டன;
எண்ணிடாத எங்கள் சிறுசுகள்
கால்களைப் புதைக்க,
டும்மென முழங்கி
சாவுகள் அறுவடையாக;
வீடுகள் தோறும்
அவலங்களின் களஞ்சியம்
நிரம்பி வழிகிறது;
அடடா!
வன்னி பொன்விளையும் பூமி;
ஆனால்
பிணம் விளைகிறதே;
ஏன்?
போரோய்ந்த பின்னும்
மழலைகள் நாராய்கிழித்து சாக;
நாமென்ன செய்தோம் யார்க்கும்?

*செல்வதனி*

---

*ஞானம், ஜனவரி - 2003*

# மீளாத பொழுதுகள்

அமைதியான காலைப் பொழுது
காலைச் செம்மை கண்களைக் கவரும்
காகம் கரைதலும் இனிமையாய் ஒலிக்கும்
நீண்டு பரந்த தோட்ட வெளிகளில்
தென்றல் தவழ்ந்து மேனியைத் தழுவும்
எங்கும் அமைதி! எதிலும் இனிமை!

நேற்று வரையும்
அமைதியான காலைப்பொழுது.

பொழுது புலராக் கருமை வேளையில்
தட தடத்துறுமின வண்டிகள்
அவலக் குரல்கள்; 'ஐயோ! அம்மா!'
தோட்ட வெளிகள் அதிர்ந்து நடுங்கின
அங்கு மிங்கும் காக்கி உடைகளாய்...
ஆட்கள் வெருண்டனர்
அள்ளி ஏற்றிய இளைஞர்கள்
மூச்சுத் திணறினர்.

தாய்மையின் அழுகையும்
தங்கையின் விம்மலும்
பொழுது புலர்தலின்
அவலமாய்க் கேட்டன.

காகம் கரைவதும் நெருடலாய் ஒலித்தது.
மெல்லிய ஒலிகளும் பயத்தையே தூண்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் அச்சம்; எதிலும் அமைதி
தென்றல் சிலிர்ப்பில் உணர்வே இல்லை
காலைச் செம்மையை ரசிப்பதை மறந்தோம்...
நேற்று வரையும்
அமைதியான காலைப்பொழுது.

*செல்வி*

*செல்வி, சிவரமணி கவிதைகள் -1996*

## எனக்குள்ளே...

வெம்மையுடன் புழுதியையும் கொண்டுவரும் சோளகம்
எரிச்சலைத் தோற்றுவிக்கும்; ஓர் மாலைப் பொழுதில்
அம்மா என்னை அறைக்குள் இருத்தினாள்
குறுக்கும் நெடுக்குமாய் முறைப்புடன் உலாவினார்,
அப்பா;

கதவிடை வெளியால் சின்னத்தங்கை எட்டிப்பார்த்து
"விளையாட வருகிறாயா அக்கா?" என்றாள்.

வானவெளிக்கு, அதற்கப்பாலும்
நீண்டு நீண்டு விரிந்ததென் கனவுகள்
அன்றே ஒடுங்கின.
யன்னல் கம்பியும் வீட்டு மதிலும்
எனது இருப்பை வரையறை செய்தன.

பூமியின் மையத்துள் கொதிக்கும் தழலென
எனது மனமும் கொதிக்கும்; குமுறும்
பார்; நீ - ஒரு நாள்
வாமனன் நானென நினைக்கும் உமது
எண்ணங்கள் யாவையும் பொடிப் பொடியாக்குவேன்.

வானமெங்கும் அதற்கப்பாலும்
நீண்டு நீண்டு விரிக்கும் என் கைகள்
பாதாளத்துக்கும் அதற்கும் ஆழமாய்
எனது கால்கள் அழுந்திப் புதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிக்குள் குழம்பெனக் கொதிக்கும் தழல்போல்
சீறியெழுந்து எரிமலையாவேன்.

அன்றேயுமது சாத்திரம் தகரும்;
அன்றேயுங்கள் சடங்குகள் மாளும்
இன்னதின்னதாய் இருப்பீரென நீர்
எழுதிய இலக்கியம் நெருப்பினில் கருகும்.
வானம் பொழியும்; எரிமலைக் குழம்பிலே
ஆறுபாயும்-
அதில் நான் நீந்துவேன்-
சமவெளிகள், காடுகள், மலைகள் எங்கும்
தனித்தே சுற்றுவேன்.
இனிய மாலை, எழில்மிகு காலை - எல்லாம்
எனது மூச்சிலே உயிர்க்கும்.

*செல்வி*

*செல்வி, சிவரமணி கவிதைகள் - 1996*



பனியில் கலந்து கரைந்து போன இரவு-
பக்கத்து வீட்டுப் பெண்ணின் மூச்சிழுப்புப் போல
இந்த வாழ்க்கையும்...
நாய்களின் ஊளையும்
மனிதர்களின் அவலக் கீச்சிடல்களும்
செத்துப்போய்க் கொண்டிருக்கும்
வாழ்வின் இருப்பை உறுதிப்படுத்துகின்றன.

எனக்குள்,
பனிக்காக அணிந்த உடைகளின் கதகதப்பை மீறி
இரவின் தனிமையில்
என்னைத் தூங்கவிடாது துரத்துகின்ற நினைவுகள்...

குழந்தையொன்று வீறிட்டழுகிறது;
போர்வை விலகிப்போய் குளிர் உறுத்துகிறதோ -

அல்லது
அதற்கும் அவலமாய் நினைவுகள் உண்டோ?

அறையிலே,
தூங்கும் எனது தோழியின் கனவிலே
சூரியத் தேரேறி கந்தர்வன் ஒருவன் வரக்கூடும்.
இப்போது,
தூரத்தே கேட்கும் துவக்குச் சன்னங்கள் பட்டு
பரிச்சைக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்களை முத்தமிட்டபடி
முதிரா இளைஞனொருவன் இறக்கவும் கூடும்.

நிகழ்தகவுகளே இங்கு நிகழ்வுகளானதில்
அதிகாலைப் பனிதடவும் செம்மையும்கூட
தன் அர்த்தத்தை இன்று இழந்துபோனது.

*செல்வி*

*செல்வி, சிவரமணி கவிதைகள் - 1996*

## போராடும் எதுவும் நின்று நிலைக்கும்

செம்மணி...
*'ரிவரெச'ப் பேயின் ஊழிக் கூத்தில்
உயிர்காக்க எங்கள் இனிய உறவுகள்
இடம்பெயர்ந்து நகர்கையிலே
இதயம் கசிந்துருக வழியனுப்பி
'காத்தேன்
என் மக்களைக் காத்தேன்'
எனச் சிலிர்த்த நீள் வெளி
பத்திரமாய் தான் வழியனுப்பி வைத்தவர்கள்
தன் மடிக்கே
பிணங்களாய் வந்தபோது
என்ன நினைத்திருக்கும்?
கோபத்தில் குமுறி
ஆற்றாமையில் வெந்து
துயரத்தில் அழுதிருக்குமோ
பெற்றவர்களைப் போலவே.
பயிர் விதைத்த நிலமெங்கும்
உடல் புதைத்த சிங்களமே,
உப்புவெளிக் காற்றின்
ஊவென்ற பேரொலியில்
நானூறு உயிரொலிகள்
கலந்து தாம்பட்ட வதை சொல்லி
காவிநிறப் பூச்சின் சாயம் அழித்து
கோரச் சிவப்பை உலகுக்குணர்த்தும்.
புதைகுழிகளே ஆட்சியைத் தெரிகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித தேசமிது.
நரபலியும் இனவெறியும்
பௌத்தத்தின் போதனைகள்
என்றான தீவு இது.
நீதிக்கும் பேச்சுக்கும்
சமாதானக் காற்றுக்கும்
இடமில்லை என்றான பின்னாலும்
உயிர் இழக்கக் காத்திருக்கும்
உறவுகளே
போராடும் எதுவும் நின்று நிலைக்கும்.
மற்றவை எல்லாம் அழிந்தே போகும்.
நினைவில் கொள்க.

*தமிழவள்*

*யாழ்ப்பாணத்தை கைப்பற்ற 1995இல் சிங்களராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை*

*செம்மணி - 1998*

## நான் தொலைத்த இரவுகள்

இரும்பு வலைப்பின்னல்
இடறுகின்ற தெருக்களில்
இலக்கின்றி அலையும்
இலங்கைச் சருகுநான்.

முற்றத்து மணற்பரப்பும்
இரவல் தாலாட்டில்
இரவு கரைந்த
நாட்களும் இனி
எனக்கில்லை.

இரவில் - அருந்ததி
என்னை
ஆசீர்வதிக்கிறாள்
எனதினிய இரவுகளை
மீட்டுத்தர இயலாதவளாய்.

வானத்துப்பரப்பில்
வெள்ளி நிறைத்த
வேடிக்கை பார்த்து
தொலைதூரத்து
மகரந்தப்பொதி
சுமந்து வரும்
சுகந்தம் நுகரும்
சுகம் - இனி எனக்கில்லவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தவழ்ந்த
தாழ்வாரம்
தடமிழந்து போனதங்கே
என்னது என்று
எதுவுமேயில்லை.
தென்றலுக்கு
கையசைக்கும்
தென்னங்கீற்றுக்கூட
இனி எனக்குச் சொந்தமில்லை.

எல்லாம் இழந்து
எஞ்சியிருக்கும்
எனக்கு,
படைத்தற்கொள்கைமீது
பற்றற்றபோதும்.

*தயாநிதி*

*இனியும் சூல்கொள் - 1997. 23ஆவது இலக்கியச் சந்திப்பு மலர், பிரான்ஸ்*

## செம்மணி சிவப்பானது

என் வீட்டில் இருக்கும்
ஆசைக் கிளியே:
உன்னை நான் கூண்டில்
சிறைவைக்கவில்லை
கூண்டின் கதவுகள் எப்போதுமே
திறந்துதான் இருந்தது.
உன் தேவைகளை தீர்த்திட
எம் வான்பரப்பெங்கும் நீ பறப்பாய்.

அந்திவேளையில்
உன் இருப்பிடம் வந்தடைந்து
என்னோடு கொஞ்சு மொழிபேசிக்
களித்திருப்பாய்.
உன்னினப் பறவைகளோடு
உல்லாசமாய்த் திரிவதற்கு
தடையேதும் நான் போட்டதில்லை
கூண்டின் கதவுகளைப் பூட்டவில்லை.

இனவழிப்பு வேடர்களின்
அம்புபட்டுப் பாய்ந்த செங்குருதி
செம்மணித் தரையைச் சிவப்பாக்க
உன்னினப்பறவைகள் துடிதுடித்து மாண்டதை
தப்பியோடிவந்த நீ சொன்னாய்.
நேற்று
உன்னோடு பறந்த உன்னினப் பறவைகள்
இன்னும் கூடு வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னினத்தை அழிக்கவே
அவர்கள் அம்புகளுடன் காத்திருக்கிறார்கள்.
என் ஆசைக்கிளியே:
நீ நீண்டகாலம் என்னோடு
இருக்கவேண்டும்
உனக்கான சுதந்திரக்காலம் வரும்வரை
செம்மணியின் ஓலத்தை
உலகெலாம் எடுத்துச் சொல்ல
என்னோடிரு என்கிளியே!
இந்தக்கூட்டின் மடியில்
விடுதலைப்பாடல் ஒலிக்கும்வரை
நீ என்னோடு இரு.

*தயாமதி*

செம்மணி - 1998



ஓடப் பார்த்தேன்
ஒற்றைக்கால் நொண்டி.
நடக்கத் தொடங்கினேன்
கற்கள் இடித்தன.
மூலையில் இருந்தேன்
கதவுமூடப்பட்டது.

யன்னற்கம்பிகளால் சுவாசித்தேன்
துருக்கள் பிடித்தன விரல்களில்
மிகுதி ஒட்டின
என் மூச்சுகளில்.

முடியாது,
கதவைத்தள்ளினேன்
கால்களை உதறினேன்
வலிப்பவை வலிக்கட்டும்
இப்போது,
எரிச்சல் இல்லை மூச்சில்.
இவள்
பெண்ணில்லை என்றனர் வீட்டில்

*தர்மினி*

எக்ஸில், செப்-அக்: 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதை காலம்

எனது குரல் நாண்கள்
அறுந்தன.
உனது குரல்
கூர்வாளான போது...!

எனது மூச்சை
அள்ளிப் போயிற்று
உனது மூச்சு...!
நான் பேச்சற்றுப் போனேன்.

சுவாசத்திற்காகத்
தடுமாறுகிறேன் நான்...
நீ வாசத்திற்காக
என் பூக்களைப் பறித்தாய்!

நீ நினைத்ததை
நடத்தினாய்!
நான் நடைப்பிணமானேன்!

இனி நீ...
இது உன் காலம்...!

எனது இறுதி அத்தியாயங்களை
நீயே எழுது!

உயிர்போகும் வரைதானே
வதைக்க முடியும்
உன்னால்...!

*தாட்சாயணி*

*தாயகம், ஒக்டோபர் - 2004*

மெல்லிய விரலின் ஸ்பரிசத்தில்
அவனை அணைத்தேன்
சந்தோசக் கணத்தில்
அவன் மகிழ்ச்சி வார்த்தைகளாய்
விழுந்தது.

அம்மா ஆனேன்

என்னைக் கட்டுக்குள் அடக்கும்
அகராதியாய் குழந்தை

அவள்
என்னைப் போல வளர்ந்தாள்
அதிகமான நேரத்தை
அவனுடன் கழித்தபோதும்
எனக்கான அன்பு மீதமாய்
அவளுள்
கட்டுக்கள் அகற்றி
என்னை ஆக்கிரமிக்கும்.

கண்களை மூடி
அவனை வருடி
மெதுவாய்ச் சொன்னேன்ஃ
அவள் என் மகள்.
அழுத்தமாய் அவன் குரல்
மோதிற்று.

தனது என்பதாய்.

*தானியா*

*காலம், ஒக்- 2005*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியாயப்படுத்த முடியாதவளாக

இழந்துவிட்டவை அனைத்தும்
தவிர்க்க முடியாதவை
பறிக்கப்பட்டவைகளாகவும்
நீண்ட காலமாய்
திணிக்கப்பட்டவைகளாகவும்
என்னுடைய தருணங்களில்
இழந்து இழந்து
நிறையவே நம்பியிருக்கிறேன்
ஆயினும் நான்
துன்பங்களை ஏற்றுக்கொள்ள
முடியாதவளாகவும்
சந்தோஷங்களை அனுபவிக்க
முடியாதவளாகவும்
உண்மைகளை நினைத்தழுகிறேன்
நியாயப்படுத்த முடியாதவளாக.

*தில்லை*

*பெண், 5:3 - 2000*

வெளுப்புகள் இல்லாமல் எங்குமே கருமை
நெருக்கங்கள் அற்று சிதறிக் கிடந்தன
வெள்ளித் தகடுகள்
அசைவுகள் அற்றுக் கிடந்த மேகங்களுக்குள்
விழித்துக் கொண்டிருந்தது நிலவு
நினைவுகள் எதுவுமின்றி
இயல்புகள் மறந்து
எல்லாமே.

ஆசைகள்
ஆவேசங்கள்
எதிர்பார்ப்புகள்
ஏமாற்றங்கள் எதுவுமின்றி
மனமும்

தனிமையின் கதறல்களையும்
காதலின் கண்ணீரையும்
தேக்கி இறுகியிருந்த மேகங்களின் நடுவே
பூமியை நோக்கி
விழுந்து கொண்டிருந்தது
ஒற்றைச் சிறகொடிந்த குருவி ஒன்று

அவன் காதல் சொல்லிக் கொண்டிருந்தான்
இன்னொரு இதயத்திடம்.

*துர்க்கா*

*உயிர்நிழல், செப்.-ஒக்.- 2000*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை பெறுதல் இல்லாத பிரிவுகள்

உள்ளத்துள் கிடந்து குமைந்துமறுகி
கசக்கிப் பிழிகிறது உன் நினைவு..
கடைசிச் சந்திப்பை நினைவென
வலிந்து முயன்றதில் மெல்லிய திரையுடன்
மங்கலாகத் தெளிவற்று உன் உருவம்...
சந்தித்த நிகழ்வு மட்டும்
தெளிவாக மிகத் தெளிவாக...
கணீரென்ற உனது குரலும் சிரிப்பும்...
இப்போதும் தொடர்ந்து ஒலிப்பதாய்
என் செவிப்பறையில்...
நான்கு வருடங்கள் இருக்குமா
உன்னை நான் பார்த்து...

பூமாலைகளுடனும் பூக்களுடனும்
உற்றவர் புடை சூழ
மிகவும் மாறிப்போயிருந்தது
உன் தோற்றம்...
ஆனால் செவிகளில் மட்டும்
உனது அதே குரல்...
கேட்பவர் மனதை உருகச் செய்த
அதே குரல் இழைந்து குழைந்து
கசிந்துருகிக் கொண்டேயிருந்தது
ஒலிபெருக்கியூடாக...
உன்னுடன் பழகிய நாட்களின்
நினைவில் கண்களைத் திரையிட்டது
நீர்ப்படலம்!

நண்பா நீ எப்போதுமே
இயல்பானவன்: சிறப்பானவன்
அதுபோலத்தான் உனது சாவும்
எமது தேசத்தில் இயல்பானது
கூடவே சிறப்பானது
உனைப் பாராமலே கடந்துவிட்ட
பொழுதுகளும் வருடங்களும்
இப்போதுதான் நெருப்பைச் சொரிவதாய்
உள்ளத்தை உறுத்தி அரிக்கின்றது
எனது மிகுதி நட்புக்களையாவது
பிடி மண்ணுடனும் மலர்களுடனும்
சந்திக்குமுன்
உயிருடன் முழுதாக ஒரு முறை
கண்டுவிட வேண்டுமெனச் சொல்வதாய்...
தேற்ற முடியாத சோகத்துடன்
மாற்ற இயலாத பாரமொன்று
நீங்காமலேயே உளத்தில்

*தூயவள்*

*எழுதாத உன் கவிதை: தமிழீழப் பெண்களின் கவிதைகள்- 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னைப் போலவே என் கவிதையும்

என்னுள்
எழுதி எழுதி
திருத்தப்பட்ட கவிதையின்
சில வரிகள்
கண் சிமிட்டும் குண்டு பல்பின்
மெலிந்த வெளிச்சத்தில்
வலியுடன்
கண்கள் நீராடி
நெஞ்சைச் சுட்டு
என்னைத் தூங்காமல் தடுக்கின்றன...

எத்தனை தடவை திருத்தி எழுதியும்
முடிக்கப்படாமலேயே
காற்றில்
பரிதவிக்கின்றன
சாளரங்கள் மூடப்பட்ட பின்னும்
முற்றுப் பெற மறுக்கின்றன- ஏனோ
சத்தங்களும் மறுக்கின்றன...

துணிவை உரிய விட்டு
வலிக்கும் மனத்தோடு
வாரிய முதல் வரியில்
பார்வை பதியும் போது
முழுமை தெரிகிறது
விழிகள்

மற்ற வரிகளை
முற்றாக அழிக்க
மனம் வராததால்
முழுமை அடையாளமல்
வெகுநாட்களாய்
என்முன்னே படபடக்கிறது
என்னைப் போலவே
என் கவிதையும்

*நவஜோதி ஜோக்ரட்னம்*

---

*எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன் - 2006*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிதாய் பிறந்துவிட்டுப் போகிறேன்

அந்த வீதியில்
நீயும் நானும்
நட்பாய் தெரிந்த
முகம் ஒன்று.

நானோ நட்பாய்
சிரித்து வைத்தேன்.

ஆனால் நீயோ
அவனைப் பார்த்து
என்ன சிரிப்பு
எனக் கூறியபோது
ஏனோ அதிகம்
இடிந்துபோனது
நம் காதல்தான்.

உனக்கான
காத்திருப்பில்
நீ வரப் பிந்தியதால்
உன் நண்பனோடு
சிரித்துக் கதைத்தேன்.

ஆனால் நீயோ
என்ன கதைத்தாய் என
என்னைக் குடைந்தெடுத்து
குற்றக் கூண்டில்
நிறுத்தினாய் பார்

அப்போ என் மனம்
நீ என் மீது வைத்துள்ள
காதலையும், நம்பிக்கையையும்
ஆய்வு செய்து
அறிக்கை எழுத
தவறவில்லை

என் கூந்தலை
வெட்டியதற்காய்
எப்படி யெல்லாம்
திட்டித் தீர்த்தாய்.
நான் உன்னில் இருந்து
விலகிப் போகவல்லவா
செய்துவிட்டாய்.

காதல் என்றால்
என்னவென்று தெரியுமா
உனக்கு?
எனக்கே எனக்கான வாழ்வையும்
உனக்கே உனக்கான வாழ்வையும்
நீயும், நானும்
மனம் கோர்த்து
வாழ்ந்து பார்ப்பதுதான்.

அதற்காய்
என் வாழ்வை
என் விருப்பு வெறுப்பை
எல்லாம் துறந்து
உனக்காய் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் விருப்பு வெறுப்போடு
உனக்காய் வாழ
எனக்கு இஷ்டமில்லை.

நீ நினைக்கும்
குருட்டு
செவிட்டு
ஊமைக் காதலியாக
நான் இருப்பேன் என
நினையாதே.

என்னைச் சிதை ஏற்றாமல்
என்னை எனக்கே
திருப்பித் தந்துவிடு.

போதும்
நீ என் மீது வைத்த காதலும்
அதன் மீதான நம்பிக்கையும்.

போனால் போகிறது
நான் உன் மீது
கொண்ட காதலைப் புதைத்து
மீண்டும் புதிதாய்
பிறந்துவிட்டுப் போகிறேன்.

*நளாயினி தாமரைச்செல்வன்*

---

*நங்கூரம் - 2005*

## புத்துயிர்த்தல்

எனது தகப்பனின்
நம்பிக்கையற்ற பார்வைகளினூடும்
தாயின் குமுறல்களினூடும்
உறவுகளின்
என் திருமணம் பற்றிய
சகிக்க இயலாத பேச்சுகளினூடும்
சுதந்திரமாய் நான் வாழ்வதென்பது எவ்வாறு?

என் இனிமை,
இதம் என்பனவெல்லாம் அவளுக்கானவை
அவளற்ற என் உலகுபற்றி
கனவுகளும் வேண்டாம் ஒருவருக்கும்
போலியும்
வஞ்சகப் பாசமும் நிறைந்த முகங்கள் தான்

எனைச் சூழ எங்கும்
மென்மேலும் என்னால்
தோல்வியுறுதல் இயலாது
எனது அவள் தோழி மட்டுமல்ல...

அதுபற்றியும் சொல்வேன்
அது காதல்
அவனது வேர்களைப் பிடுங்கி எறியவும்
பிறருக்கிருக்கும் மனதின் பரப்பெங்கும்
கள்ளிச் செடிகள் நட்டுப் பார்க்கவும்
கணம் கணம் இங்கு போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்விதம் பிரிவேன் அன்பே
எவ்விதம் வாழ்வேன் நான்?
ஆயினும் ஆயினும் வாழ்வேன்
ஆச்சரிய மேயாயினும்
எனையமுத்தும் இவ்
இறுகிய பாறைகளினூடிருந்து
வீறு கொண்டதொரு புல்லாய் நிமிர்வேன்.

கூவத்தான் முடியாதாயினும்
ஈனஸ்வரத்திலேனும் என் பாடல்களை முனகியபடி
யார் முன்னும் பணிதலன்றி
எனது உணர்வுகளோடும் அவர்களோடும்
எவ்வகை வாழ்வெனப் புரியாத இது
குழப்பமிகு வாழ்வேதானாயினும்

வாழ்வேன்
வாழ்வேன்
வாழ்வேன் நான்.

*நஜீபா*

---

*உயிர்வெளி- 1999, பெண்ணியா என்ற பெயரில் எழுதுகிறார்.*

## என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை!

என் ஈர்ப்பு அறுகிறது
இப்பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்

பரந்து கிடந்தன என் உணர்ச்சிகள்
அவற்றையெல்லாம் முடக்கி வை என்றனர்
நான் அவாவியிருந்த வாழ்வையும்
என் சுதந்திரம் நுரைத்த கனவுகளையும்

ஒரு பெரும் கனவுலகைக் கட்டி
நான் பதினேமு வருடங்கள் ஆண்டேன்
எங்கிருந்தோ வீசிய புயலில்
எல்லாமே சிதறின
நொருங்கிச் சிதைந்த கனவுகளோடும்
கண்ணீரோடும்
நான் துயிலறுத்திருக்கிறேன்

என் ஈர்ப்பு அறுகிறது
இப்பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்

நிரந்தரித்திருக்க நினைத்திருந்தேன்
என் யுகத்தில்
உய்த்துணர்கிறேன் இப்போ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவிதமான யதார்த்தங்களையும்
மனித நேயங்களையும்
உண்டு கழித்து ஏப்பம் விட்டு
வீணுக்குச் சிரித்து
வாழ்வதே வாழ்வென ஆயிற்று... ஆயிற்று...

மனிதத்துவத்தைத் தொலைத்த
தகப்பன்களின் மகன்களினிடையே
எனக்கான
ஒரேயொரு காதலனையும் காண முடியவில்லை
எனவேயும்
என் ஈர்ப்பு அறுகிறது
இப்பேய் உலகை விட்டும்
அதன் ஆதிக்கங்களை விட்டும்

என் பயணம் ஆரம்பித்தாயிற்று
முடிவுகளற்ற இலக்கை நோக்கி
தனித்தாயினும் பயணிப்பதே இயன்றவரை
என் சிறகுகளின் மீது நீளும்
எல்லாக் கைகளுக்கெதிராகவும்
என் கனவுகளின் மீது
கொடூரங்களை வரைய நீளும்
எல்லாத் தூரிகைகளுக்கெதிராகவும்

*நஜீபா*

---

*என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை:*
*பெண்ணியா கவிதைகள்-2006*

# எழுதாத உன் கவிதை

"எழுதாத என் கவியை
எழுதுங்களேன்"
எனும் உன் கவிதை
எழுதப்பட்டுவிட்டது.

உப்பு வெளியில்
உருகிய உங்கள்
உடல்கள் மீது
எமது வீரர்கள்
எழுதாத உன் கவியை
எழுதி விட்டார்கள்.

தூரிகையால் வரையப்பட்ட
ஓவியங்களாய் நாம்
உங்களைப் பார்க்கவில்லை.
காவலரண்களின் முன்னே
வித்துடல்களாய் நீங்கள்...

எம்மை ஏறி மிதித்து- அவர்
ஏளனம் செய்த மண்ணில்
இப்போது
எமது தேசியக்கொடி பறந்து,
எழுதாத உன் கவிதை
எழுதப்பட்டுவிட்டது.

அன்று அவர்
விதையான வீரர் மேல்
ஷெல் மழை பொழிந்த போதும்
உறுதியை நாம் இழக்கவில்லை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரமேற்றிக் கொண்டோம்
எழுதாத உன் கவியை எழுதுவதற்காகவே.

நீல வரிப்புலிகள் தரையிறக்க,
கறுப்பு வரிப்புலிகள் ஆட்டித் தகர்க்க,
பச்சை வரிப்புலிகள் இடம்பிடிக்க,
புலிக்கொடி ஏற்றப்பட்ட ஆனையிறவு
இன்று
சிங்காரமாய் சிரிக்கிறது.

உன் துப்பாக்கி முனையைவிட
உனது பேனா கூர்மையானதால்,
எழுதாது போன உன் கவியை
எழுதுவதற்காக
இவர் உயிரைக் கோலாக்கி
உதிரத்தை மையாக்கினார்.
எழுதாத உன் கவியை எழுதிவிட்டு
எம் செல்வக் குழந்தைகள்
உன்னிடமே வந்து விட்டனர்.

அவர் எழுதிய கவிதையைப் பார்.
ஏராளம் ஏராளமாய்
உனது எண்ணங்கள்
எழுதப்படப்போகும்
உன் கவிதைத் தொடர்ச்சி
இனி இடைவிடாது எழுதப்படும்.
எங்கள் கைக்கு வந்த
உந்தன் பேனாவுக்கு
இனி ஓய்வே இல்லை..

*நாதினி*

*எழுதாத என் கவிதை: தமிழீழப் பெண்களின் கவிதைகள் - 2001*

# யதார்த்தம்

ஒரு கணம்தான்
அதிலும்
குறைவாகக்கூட இருக்கலாம்.
யாருமே எதிர்பாராமல்
அது நிகழ்ந்தது.

அந்தச் சந்தியை
கடந்து கொண்டிருந்தவர்கள்,
தேநீர்க் கடையிலினுள்ளே
அமர்ந்திருந்தவர்கள்,
மண்ணெண்ணெய்க்காய்
வரிசையில் நின்றவர்கள்
எல்லோரையும் தாண்டி
அவனுக்கு முன்பாய்
நிகழ்ந்த வெடிப்பு.
மேலே விமானங்கள் இல்லை
ஷெல்தான்.

அவன்
ஒருமுறை மேலெழும்பிக்
கீழே வீழ்ந்தான்.
எந்தச் சத்தமுமில்லை.
கத்த நினைப்பதற்குள்
அவன் இறந்திருக்க வேண்டும்.
வெடிப்பின் அதிர்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கத்தல்
கேட்காமலும் போயிருக்கலாம்.
எதுவும் சொல்வதற்கில்லை.
சனங்கள்
திடீரென ஒதுங்கிப் போனார்கள்.
தேநீர்க் கடையின் பாட்டுக்கூட
நின்று போயிருந்தது.
வெறிச்சோடிய வீதியில்
அவன் மட்டும்
தனியாகக் கிடந்தான்.
கையொன்று
வீதியின் மறுகரையில்
விரல்களை நீட்டியபடி...
யாரையோ
குற்றஞ்சாட்டுவதாய்...
சில நிமிஷங்கள்தான்.

'அம்புலன்ஸ்' வந்து
எல்லாவற்றையும்
அள்ளிக்கொண்டு போனது.
எஞ்சியதாய்
கொஞ்சமாய் அவனது இரத்தம்,
ஒன்றிரண்டு
சைக்கிள் கம்பிகள்,
ஷெல் துண்டுகள்...
அவ்வளவுதான்.

வாகனங்கள்
அவற்றையும்
துடைத்துக்கொண்டே கடந்தன.



வீதியில்
இப்போது எதுவுமேயில்லை.
பழையபடி...

மண்ணெண்ணெய் வரிசை
முன்பைவிட நீண்டிருக்கிறது.
தேநீர்க் கடையிலும்
புதிதாய்
ஒரு பாட்டு ஆரம்பமாகிறது.
சனங்கள்
விரைந்து கொண்டிருக்கிறார்கள்
எதுவுமே நிகழாத மாதிரி

*நாமகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் மார்க்குகளை
மணியோடரில் அனுப்பிவிட்டு
இரவில் விழிமூடாமல்
வேலைக்கும் போகாமல்
அத்தானே நீ அங்கு
அவசரத்தில் காத்துள்ளாய்

பத்தாம் திகதியன்று
பதிவுத்திருமணம் பின்
மூன்று நாட்களில்
பெரிய கொண்டாட்டம்
காட்டும் அடிச்சாச்சு
கலியாணவீட்டிற்கு
கமரா மன்னுடனும்
கதைச்சு முடிச்சாச்சு
நேற்று நெடுநேரம்
தொலைபேசியில் நீ...

வெள்ளைத்தோலும்
வெளியில் ஆடித்திரியாதவளும்
வேண்டுமென்றாய்
உன் பணத்தில்
நான் மொஸ்கோ வந்திறங்கி
பதின்மூன்று மாசமாச்சு.

இருபது மாசமாய்
வாசுகி இங்கு



படாத பாடு படுகிறாள்
கமலாவின் கதையள் பற்றி
கனக்கச் சொல்லியுள்ளன்
எடுப்பம் எடுப்பமென்று
அகலியாவின் அண்ணை
எண்ணூறு டொலர்களை அனுப்பி
அவளை இன்னமும்
ஏன்தான் எடுக்கவில்லையோ?

ஏஜென்ஸிக்காரன் நேற்று
எனைத்தேடி வந்தான்
விடிய விடியப் பேசு
விரைவில் அனுப்பிறன் என்றான்
பத்தாம் திகதிக்கு
பதினாறு நாள்தானே இருக்க
அதனாற்தான் அன்றிரவை
அவனோடை கழிச்சிட்டன்

உனக்காக நானென்று
உறுதியான பின்பு
அவசரமாய் எழுதுகிறேன்
இம் மடலை இன்று
அத்தானே நான்
உன்னிடத்தில் வந்திடுவேன்
பத்தாம்திகதிக்கு முன்பு.

*நிருபா*

---

*அம்மா, பங்குனி - 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவுக்கு ஒரு மடல்

அன்பின் இயேசுவே,
நான் நலம். நீர் நலமா?
உம் முகவரி தெரிந்திருந்தால் - இதை
அஞ்சலில் சேர்த்திருப்பேன்.
முகவரி தெரியாததால்
அச்சில் சேர்த்திருக்கிறேன்.
இப்பொழுது இவ்வுலகம்
இனவெறி ஒருபுறமும்
நிறவெறி மறுபுறமுமென
பிளவுபட்டுக் கிடக்கிறது.
எங்கு பார்த்தாலும்
அகதி முகாம்கள்!
அவலக்குரல்கள்!
குருதி ஓடைகள்!

நான் சொல்லுவது என்னவென்றால்
நீர் மீண்டும் இவ்வுலகம் வரவேண்டும்
இன்னொரு தடவை
இவ்வுலகை மீட்க வேண்டும்.
மறந்தும்
சமாதானம் தரவந்தேன்
என்று வெளியிலே சொல்லிவிடாதீர்!
அன்றுதான் ஆணிகள்
இன்றோ ஆயுதங்கள்
இருகைகளில் காயம் கண்ட
நீர்
உடல் முழுதும் ஒட்டை போடாதீர்.
எங்கள் நிலை கூறிவிட்டேன்.
கட்டாயம் நீர் வரவேண்டும்
இத்துடன் முடிக்கிறேன்.
மற்றவை நேரில்
ஆ...
முக்கியமானதை மறந்துவிட்டேன்
வரும்போது
அடையாள அட்டையை
மறந்துவிடாதீர்

*ஜெ. நிரோசா*

---

*ஞானம், 19 - 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

இருந்தால் போல்
கருத்தரிக்கும்
இடையிடை
தன்னிருப்பை
உணர்த்துவதாய்
நெஞ்சக் கருவறைக்குள்
நெருடுகிற பொழுதுகளில்
கொஞ்சம் வலியெடுக்கும்
தூக்கம்
புறக்கணிக்க
துணையாக
நினைவுகளே
பூத்திருக்கும் ராத்திரியில்
வெள்ளைத் தாளொன்றின்
விரித்த பரப்புக்களை
மெல்ல முறுவலிக்கும்
என்னுடைய செல்லக் குழந்தை
கவிதை

*நிலா*

*காலம், ஜூலை - 1990*

# சிரட்டையும் மண்ணும்

நானும் நீயும்
ஓடிப்பிடித்து விளையாடிய
ஒற்றையடிப்பாதை
காடுபத்தி...
காணாமல் போயிருந்தது.

சலசலத்து
சங்கீதம்பாடி
ஊரின் நடுவால்
ஊடறுத்து ஓடிய
ஆறுகள் இரண்டும்
அடையாளமற்றுப் போயிருந்தன.

ஊஞ்சல் கட்டி ஆடிய
எல்லைப்புற ஆலமரம்
எப்படி மறைந்தது...
சுவடுகளற்று...
கறையானும் பாம்பும்
வாழ்வதற்காய்...
புதிதாக அங்கே
'புத்து'கள் முளைத்திருக்கின்றன.

ஊர்பற்றிய
ஒவ்வொரு நினைவும்
ஊசியாய்க் குத்தியது மனசை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிடும்
திசைகள் தோறும்
நமதான ஞாபகங்கள்
கை காட்டி முறுவலிக்கிறது.

கிட்டி, கிளித்தட்டு
பட்டம், பம்பரம்
மறந்துபோன விளையாட்டுகள்
மறுபடியும்
ஞாபகம் வந்தது.

மயானத்தை
நினைவூட்டுவதாய்
நமதான...
அழகிய கிராமம்

அழுக்காகிப்போன
நினைவுகளை...
தூசு தட்டி, துடைத்து
வாசிக்கையில்
அழுகை வந்தது.

தூரத்தில்
சிரட்டையும் மண்ணும்
சிதறிக் கிடந்தன...
விளையாட ஆருமில்லாமல்!

*நாச்சியாதீவு பர்வீன்*

---

*மல்லிகை, செப்: 2005*

## ஓரு கடல் நீரூற்றி...

நட்சத்திரங்கள் பூத்தவானம் விரிந்திருந்தது!
எமக்குப் பின்னால்
பாதியாய் ஒளிர்ந்த நிலவு தொடர்ந்து வந்தது!
தூரத்து வயல்வெளியை மூடியிருந்தது
வெண்பனி!
தென்னைகளில் மோதி குடியிருப்புகளை ஊடுருவி
எம்செவி வழி நுழைந்தது -
வங்கக் கடலில் எழுகின்ற அலையோசை!
சந்தடி ஓய்ந்த தெருவழியே
நீயும் நானும் விடுதிவரை நடந்தோம்!

இப்படியே...
எத்தனையோ இரவுகளில்
விவாதிப்போம் நெடுநேரம்!
முடிவில் எதிர்காலம் குறித்த அவநம்பிக்கைகளுடன்
பிரிந்து செல்வோம்!

பின்வந்த, பதற்றமான பொழுதொன்றில்
உன் விடுதலை வேட்கைக்குத் தடையாயிருந்த
அனைத்தையும் உதறி அடவி புகுந்தாய்!

பரணி...
உன் நினைவுள் தேய்ந்து கொண்டிருந்த வேளை
மாரிக்கால அந்திப் பொழுதொன்றில்
நனைந்த சீருடைகளிலிருந்து நீர் சொட்டச் சொட்ட
மீளவும் நீ வந்தாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையெழும்பும் கடல் பரப்பினில்
உனக்கான பணி முடிக்கவென விடைபெற்றுப்போனாய்!
வாழ்த்துச் சொல்ல வாயெழவுமில்லை!
ஆரத்தழுவிட நீ விரும்பவுமில்லை!
வெளியே பெய்த மழை என் கன்னங்களில் வழிந்தோட....
மழைப்புகாரினூடே மறைந்துபோனாய்!
திரைகடல் சென்ற திரவியமானாய்!
ஆழிப்பரப்பெங்கும் ஊழித்தீ எழுந்து தணிந்தது- நீ
திரும்பி வரவே இல்லை!

இன்று வீரர்கள் துயிலும் சமாதிகளின் மீது
காலத்துயரின் பெருமௌனம் கவிழ்ந்துள்ளது!
சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவனே!
இங்கு ஏதுமற்ற உன் கல்லறையில்
ஒரு கடல் நீரூற்றி நிரப்பிடவோ?

*பஹீமா ஜஹான்*

*மூன்றாவது மனிதன், ஏப்ரல்-மே 2002*

## சாபங்களையகற்றிய குழிகளின் மீதிருந்து...

சாபங்களையகற்றிய குழிகளின் மீதிருந்து
காற்றிலே கரைகிறது சூனியம்!

அவர்களும் விதைத்தனர்
இவர்களும் விதைத்தனர்
எந்தப் பாதமொன்றோ தம்மீது படும்வரை
உறுமலை உள்ளடக்கிக்
காலங்கள் தொறுமவை காத்துக் கிடந்தன!

தத்தித் தவழும் பாலகனோ...
ஏழைத் தாயொருத்தியோ...
இனிய இளைஞனொருவனோ...
மதகுருவோ...
மேய்ச்சலுக்குச் சென்ற மந்தையொன்றோ...
அல்லது
குறிவைத்த அவர்களிலும் இவர்களிலும் எவரோ?

அறுவடை காண மறந்த வன்னிப் பெருநிலத்தில்
நச்சுக் கிழங்குகளை நாளெல்லாம் தோண்டலாம்
நீண்ட கோடைகளிலும் மரிப்பதில்லை
மாரிகாலம் கடந்துபோன பின்னும் முளைப்பதில்லை
ஏவிவிடப்பட்ட பூதங்களைத் தமக்குள் பிடித்துப்
பாதையோரங்களிலும் பொட்டல் வெளிகளிலும்

காத்திருந்தன!
நெஞ்சிலுள்ள செஞ்சிலுவை அவனைக் காத்திட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கரம் சுமந்த கோலுடன்
அங்குல மங்குலமாக
வன்னிப் பெருநிலம் தடவி நச்சுக் கிழங்குகள்
தோண்டுகிறான்!
எங்கிருந்தோ வந்த தேவதூதனாய்
எம்மொழியும் அறியான்... எமதினமும் அறியான்
அவனொருவன் சாபங்களைத் தோண்டியகற்றிய குழிகளில்
நாமினி எதை நடப்போகிறோம்!

*பஹீமா ஜஹான்*



# அழிவின் பின்னர்

வெட்டி வீழ்த்தப்பட்ட மரத்தின்
அடிக்கட்டை மீது
அமர்ந்துள்ளது பறவை

இன்று அதனிடம்
பறத்தலும் இல்லை
ஒரு பாடலும் இல்லை

அதன் விழிகள் எதிரே
வெய்யில் காயும்
ஒரு பெருவெளி விரிந்துள்ளது.

அந்த மனிதர்களைச் சபிக்கிறதோ...
தனது கூட்டை எண்ணித் தவிக்கிறதோ?

*பஹீமா ஜஹான்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன சொல்கிறாய்?

எமது முற்றவெளி மீது
யுத்தத்தின் கருநிழல்கள் நெளிந்து வரத்தொடங்கிய வேளை
எமது வாழ்வின் துயர்மிகு அத்தியாயம்
எழுதப்படலாயிற்று!

திடீரென ஊரின் எல்லை கடந்து- நீ
தொலைதூரமேகியதன் பின் வந்த நாட்களில்
இருளடர்ந்த இரவுகள் யாவிலும்
எமது வாழிடமெங்கிலும் உனைத்தேடி ஏமாந்து
திரும்பினார்கள்!

அதன்பின் நிகழ்ந்த பிரளயப் பொழுதில்,
எங்கள் குடிமனைகளுக்கு மேலாகப் பறந்த
இயந்திரப் பிசாசுகள்
அதிரும் ஓசையுடன் அச்சத்தைப் பொழிந்தன.
மரக்கிளைகள் சுழன்று அசைந்ததில்
சிதறுண்டு பறந்த பறவைக் கூட்டங்களோடு
எமதினிய இளைஞர்களும் காணாமற் போயினர்.
துன்பம் பல சுமந்து முன்னோர்கள் தேடி வைத்தவை யாவும்
எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டன.
ஆனந்தமழை பாய்ந்த இல்லங்களுக்குள்ளிருந்து
எமது பெண்களின் அவலக் குரல்கள் எழுந்தன.
எங்கள் குழந்தைகளைக் காத்திட
எந்தத் தேவதைகளும் வரவேயில்லை!
எங்கோ தூரத்தில் துப்பாக்கிகள் வெடிக்கின்றன
ஈனக்குரலெடுத்துக் கதறும் ஓசை காற்றிலேறி வருகின்றது
தினம் தோறும் சாவு எமது வாசல் வந்து
திரும்பிய தடயங்களைக் காண்கிறோம்
எப்போதும் கதவு தட்டப்படலாம்!

நீ தேடியலைந்த எதுவுமுனக்கு ஈடேற்றம் தரவில்லை.
தோற்றுப்போன அரசியலின் பின்னர்
அமைதியைத் தேடித் தூரதேசம் ஒன்றில் அடைக்கலம்
புகுந்தாய்
மனச்சுமைகள் அனைத்தையும் மௌனமாக
அஞ்ஞாத வாசத்திற் கரைத்தாய்!

ஐரோப்பாவில் எங்கோ அடர்ந்த மூங்கிற் காட்டினிடையே
இராணுவ வீர்களுக்கு மத்தியில் இருந்து
நீ எடுத்தனுப்பியிருந்த நிழற்படம்
சொல்லாத சேதிகள் பலவற்றை எனக்குச் சொன்னது.
அதில் ஆனந்தமின்னல் பளிச்சிடும் உன்முகம்
எத்துணை ஆழகாக உள்ளது!

அன்பானவனே!
எந்த விடிவுமற்ற தேசத்தின் தலைவிதியை
நொந்த வண்ணம்
இங்கு எனது இருப்புப் பற்றியும் நம்பிக்கைகள் பற்றியும்
ஓயாது விமர்சிக்கின்றாய்
தினமும் வாழ்வு சூனியத்தில் விடிந்திட....
உயிர்கள் எந்தப் பெறுமதியுமற்று அழிந்திட....
யாருக்கும் யாருமற்ற சாபம் பிடித்த வாழ்வைச்
சபித்தவளாக நான் வாழ்ந்தபோதும்
எனது தேசம் எனக்கு வேண்டும்!
நீ என்ன சொல்கிறாய்?

*பஹீமா ஜஹான்*

---

*இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் - 2006*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தத்தால் தொலைந்தோம்

நாளை நீயும் நானும் நடக்கவுள்ள
நிலப் பரப்புகளில்
தேசியக் கொடி மட்டுந்தான் மிஞ்சிக் கிடக்கும்.

மழலைகளையும் முட்களையும் ஒன்றாக புதைத்து
மூடிய குப்பைமேடுகளுடன்
என் தேசம் ஒரு பிணக்காடாகும்-
மனிதமாமிசத்தைத் தின்று பெருத்த
அந்த விசர் நாயின் கண்களிடமா
என் தோழர்களின் தேசிய உணர்வை தேட முடியும்.

ஆயிரக்கணக்கான
இந்தச் சமாதிகளிடமா
எமது விடுதலையை கொண்டாட முடியும்

விட்டுவையுங்கள்
யாராவது ஒரு மனிதனையாவது விட்டு வையுங்கள்.
யுத்தத்தால் அழிந்து போன எனது மண்ணைப்பற்றி
எழுத குருதி நிரம்பிய பேனாவையும்
மனித நேயத்தை
உணர்த்த விட்டுவையுங்கள்.

காலையில் பூத்த மலர்களின் மகரந்தங்களில்
இரவுகளில் குருதி காய்ந்திருந்த
சோகங்களையெல்லாம்
ஆட்சி மீதும் ஆயுதங்கள் மேலும் மோகம்
கொண்ட குருடர்களை பற்றியெல்லாம்
எழுத வேண்டும்.

ஒரு புதிய உலகம்
தோன்றும் நேரம்
ஆயுதங்களெல்லாம் புதைக்கப்பட்ட
கொலைகளை மரண தண்டனைகள் கடந்த
மனிதப் பண்புகள் நிறைந்த
சமத்துவம் மட்டும் பேசும் இனவேற்றுமை உணராத
சமுதாய எழுச்சி வேண்டும்.

இந்த யுத்தத்தில் எப்படித் தொலைந்தோம்
எதை இழந்தோம்
எதைப் பெற்றோம்
எமது தெருச் சுவர்களில்
இந்த கொடியவர்களின் வரலாறு
எழுதப்பட வேண்டும்.

*பாமதி*

---

*எக்ஸில், ஏப்-ஒக் 2000*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி

கள்ளிச் செடியில் இருந்து
இரத்தம் கசிந்து கொண்டிருந்தது
முட்டைக்குள்
பறவைக் குஞ்சு இறந்தே பிறந்தது
மலர்களின் மகரந்தங்கள்
வண்டுகளாலே சிதைக்கப்பட்டிருந்தது

சிதறிக்கிடந்த உன் எலும்புகளையும்
சதைத் துண்டுகளையும்
கூட்டி அள்ளி
உன் சிதைக்கு தீ வைத்தேன்

அக்கினியாய் உயர்ந்தாய்
புகைக்காற்றாய் பரவினாய்
மேகங்களுடன் கலந்து
நிரந்தரமாய் பிரிந்தாய்

*பாமதி*



## நினைவுத் தொடரில்

நீள் தொலைவில்
வெண்பனிப் போர்வையுடன்
முடிவிலா மலைத் தொடர்கள்.

கோடையின் வருகைக்கு
கோலமிடும் பூக்கள்
நீண்ட இரவைத்
துரத்தி நின்று
வேடிக்கை பார்க்கும்
நள்ளிரவுச் சூரியன்.

ஆழ்கடலின்
அமைதி குலைத்து
ஆர்வத்தோடு
கரைதேடும்
அலைகள்
கரை மணலோடு
கதைபேசும் அழகை
மறைந்திருந்தே
செவிமடுக்கும் செம்பரிதி.

செம்பந்தை
திசை தெரியாது
உருட்டிச் சிறைசெய்து
ஆட்சி பிடிக்கும்
இரவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சை மஞ்சள்
வண்ணங்களிழந்து
நண்பனின் பிரிவுக்காய்
துக்கம் காக்கும்
தாவர இராச்சியம்.

இரவின் பிடியில்
இலவசமாய் தரைதொடுக்கும்
வெண் பனித்துகள்கள்
வெள்ளிகளைத் துணைக்கழைத்து
வீதி உலா வரும் வெண்ணிலவு.

இவையனைத்தும்
ஒருங்கே கொண்ட
கரையோரத் தீவுகளைப்
பிரியநேர்ந்தது.

இயற்கை இழந்த
இயந்திரம் விழுங்கிய
தலைநகரில், எனது
நாட்களை இழக்க
நிர்ப்பந்திக்கப்பட்டேன்

எதற்காக...?

*பாமினி*

---

*மறையாத மறுபாதி, 2ஆம் பதிப்பு - 1993*

## கல்லறைக்குள் ஒரு கருவறை

கவிதைகளைச் சுமந்த
கருவறையை
இன்று
கல்லறை ஒன்று
சுமக்கிறது

ஆம்!
கஸ்தூரி
கவிதைகளின் நாயகியே
இதோ உன்
கல்லறையைச் சுற்றி
ஒரு
கவிமாலை.

விறைத்து விட்ட
உன் உடல்
வீரமரணத்தை
உறுதிப்படுத்தினாலும்
உண்மை என்று
ஏற்றுக்கொள்ள
உள்ளம் மறுக்கிறது.

ஆயிரத்தில் ஒருவராக
அஞ்சலிக்காய்
அத்தனை வீரர்களுள்
நீயும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ப்படுக்கையில்
மௌனமாக...

ஆனால்
உன்காலடியிலோ
கவிதைகள் எல்லாம்
கரைந்து போயிருந்தன.

சிறுகதைகள் எல்லாம்
உன்னைச்
சிரிக்க வைக்கும் முயற்சியில்.

நாடகங்கள் எல்லாம்
உன் மரணமும்
நாடகமாகாதா என்ற
நப்பாசையில்.

நீ
ஆசை வைத்துப் பார்க்கின்ற
இந்த
அழகான தேசத்திற்கு
உன்னால் தேடப்பட்ட
சொத்துக்கள் இவைதான்.

உன்னை
இனம் காணத் தவறிய
இலக்கிய உலகத்தின்
இதயத்திற்கு
இப்போதாவது தெரிந்திருக்கும்
நீ இமயமென்று.



துப்பாக்கி மட்டுமே
தூக்கத் தெரிந்தவர்கள்
என்ற தப்பான
வெற்றுக் கோள்களுக்கு
நீ வெடிகுண்டு.

தமிழீழத்தில் நீ
தடுத்து வைக்கப்பட வேண்டியவள்
ஆனால்
விடுதலையின் வீச்சு
உன்னையும்
விலையாக்கிக் கொண்டது.

கணப்பொழுதொன்று
காலமெல்லாம்
கவலைப்படப் போகின்றது
தான்
காவல் செய்தபோது
கண்ணயர்ந்ததுதான்
நீ
காணாமல் போனதற்கு
காரணம் என்று.

*மேஜர் பாரதி*

---

*காதோடு சொல்லிவிடு - 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான அம்மா

அன்பான அம்மா
என் தேசத்தில்
ஒரு வைகறையை
வரவேற்பதற்காக
வரலாற்றுக் கடமை
அழைப்பு விடுத்ததை
அடுத்து
காணாமல் போன
உன் அன்பு மகளின்
உள்ளத்து உணர்வுகள்
இங்கே...

சின்ன வயதில்
அயல் வீட்டுச் சிறுமியுடன்
விளையாட
உன் அனுமதியைப்
பெற்றுச் சென்றதும்
நீண்ட தெருக்களில்
தென்னைமர நிழல்களில்
முட்கிளுவை வேலிகளுக்கு
இடையில் நின்று
இ.போ.ச. பஸ்ஸை மறித்தும்,
சூரியன் மறைவதை
சற்றேனும் சிந்திக்காது
அந்தக் கருக்கலிலும்
வீடு வரா என்னைத் தேடி
அப்பாவுக்குத் தெரியாது
அழைத்துச் சென்றதையும்
இன்னமும் நான் மறக்கவில்லை.

அம்மா!
இன்னும்..
அதிகாலைப் பொழுதில்
உண்ணவும் நேரமில்லாத
என் இயந்திர வாழ்வில்
நீ உணவு தீத்தியதையும்
சுடுகாட்டின்
அருகாமைப் பாதையை
நினைத்துப் பயப்படும்
உன் இயல்பான சுபாவத்திலும்
படிக்க வைக்க வேண்டும்
என்பதற்காய்
மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியை
காற்று மறைக்கவும்
எத்தனை இரவுகள்
மழையில் நனைந்தும்
இரவில் என்னை
கூட்டி வந்த
உன் மெலிந்த உருவத்தை
எப்படி நான் மறக்க?

இன்று
நான் வரவில்லையென
நீ அழுது கொள்வதாக
நான் கேள்விப்படுகிறேன்.

அன்பான அம்மாவே!
நான் உன்னை
அளவு கடந்து நேசிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனிலும் பார்க்க
நான் ஓடி விளையாடிய
என் வீட்டு முற்றத்தை,
நான் கால் பதித்த
ஒற்றையடிப் பாதைகளை,
செம்பாட்டு மண்படிந்த
என் தெருக்களை,
சணல் பூத்துக் குலுங்கும்
என் தேசத்தை,
தோட்ட வெளிகளை
இப்படி இப்படி
எத்தனையோ...

மொத்தத்தில்
என் தேசத்தை
எனதருமை மக்களை
நான் மானசீகமாக
நேசிக்கிறேன்.
இதனால்
அடிமை இருளால் மூடப்பட்ட
என் தேசத்தில்
வைகறையை வரவேற்க
தம்பி தங்கைகளுடன்
நான் செல்கிறேன்.

நாளை திரும்பி வரா
உன் மகளை எண்ணி
நீ கவலைப்படாதே
என் மறைவின் பின்னர்
புதிய தோழர்கள்
அந்த வைகறைக்காய்
புறப்படுவார்கள்.



அதற்கு முன்னால்
அவர்கள்
உன்னிடம் வரலாம்.
அப்போது அவர்களின்
புதிய சீருடையில்
புதிய துப்பாக்கியில்
இனிய முகங்களில்
என்னைப் பார்.

அடுத்து வரும் நாட்களில்
அவர்களும்
இல்லாமல் போகலாம்.
ஆனால்...
என்றோ ஒரு நாள்
எம் மக்கள் புறப்படுவார்கள்.
அப்போது அந்த
புதிய விடியலை
வரவேற்கும்
அதிகாலைப் புஸ்பங்களாய்
மெல்லிய பனித்துளியின்
முகத்தின் பின்னால்
நாம் முகையவிழ்ந்து
தென்றலின் தடவலில்
முகமலர்ந்தாடுவோம்.
அப்போது நீ இருந்தால்
உற்றுப் பார்.
உன் செல்ல மகளின் முகம்
சிரித்தபடியே தெரியும்.

*மேஜர் பாரதி*

*காதோடு சொல்லிவிடு - 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எறும்பும் நெருப்பும்

நாய் நரிகள் கொண்டு போனதும்
பேய்கள் கொண்டு போனதும் போக
சில எலும்புத் துண்டுகளும்
சில நெருப்புத் துண்டுகளும்
எஞ்சிக் கிடந்தன

இந்துமா கடலில்
புதைப்போம் என்றனர் சிலர்
அகழ்வாய்வாளருக்காக
நிலத்தடியில்
புதைப்போம் என்றனர் பலர்

நான் சொன்னேன்
பவுத்திரமாய் பாதுகாத்து
அடுத்த தலைமுறையின் கைகளில்
ஒப்படைப்போம் என்று.

இப்போ
இந்த சிலரும்
அந்த பலரும்
என்னைப் புதைக்க வேண்டுமென்றனர்

ஒன்றுமட்டும் புரிந்தது
எங்கேயாவது
எதையாவது
புதைத்தலே இவர்களுக்குத் தெரிந்தவை

*பானுபாரதி*

*சுவடுகள், பிப்- 1992*

## இருளினுள்ளே

நேற்றைய இரவில்
ஏதோ அனர்த்தம்
இன்றைய அதிகாலையும் காலையும்
சாவின் முனகலையும் இழந்து
சலனமற்று
சவமாய்க் கிடந்தது.
நெருப்பில் உருகிய
கொழுப்பு நெடியை
பனிப்புகார் சுமந்து வந்து
தெருக்களில் தூவிச் சென்றது

இன்னும் விடியவில்லை
இன்னும் விடியவில்லை
ஒன்றிரண்டு காகங்கள் மட்டும்
இணல்வாடி இலைகளூடு கூவியது
இல்லை; கதறியது.

இணல்வாடி மரத்தினடியில்
நிலத்தில்
முளைக்கால்கள் ஊன்றி
வேப்பம் விதைகள்
உச்சி மரத்தை அண்ணாந்து
கிளைகளூடே
சிதறும் சூரியத்தெறிப்பை...
எப்போது விடியும்? என்று
கேட்டுவைக்கும்.
இன்னும் விடியவில்லை என்பதை மட்டும்
உச்சிமரக் காகங்கள்
உளறிக் கொண்டிருக்கும்.

*பானு பாரதி*

*மறையாத மறுபாதி, 2ஆம் பதிப்பு - 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரைமீட்பு

இருகை இணைத்து
கட்டிய மண்ணில்
ஊரில் வீடு.

பொழுது சாய்ந்தாலும்
மனிதர்கள் மறையா
தோழர் சகித
அப்பா சிரிப்பு

படஅறை தாங்கும் துவக்குகள்
வாய் பிளந்து நோக்கும்
பார்வைகள்.
அதிசயப் பொருளின் ஸ்பரிசம்

தேடித்தொடும் கைகளின்
சாதித்த மனசு
போராட்டத்திற்காக
ஆயுதம் தூக்கும்
மாமாக்களாம்.

அம்மா சொன்னாள்.

வெளிச்சத்தை கண்ணுக்கடித்து
பயப்பட்டலற மேலே
தூக்கி கண்ணடிக்கும்
தென்னைமர மூலைகளில்
வீட்டுக் கொல்லைகளில்
"கோலிங் அப்பா... கோலிங் அப்பா
ஓவர்... ஓவர்" என
அடிக்கடி பெட்டியோடு பேசும்
மாமா
இன்றில்லை.

படிக்கப்போன பல்கேரிய அத்தையின்
பரிசுக் கிட்டாரை மீட்டக்கற்பிக்கும்
பிரசுரம் கொண்டுபோய்
அந்நியன் பிடித்து வாராது போன
பிறிதொருவர்

கிட்டாரை மீட்ட
விரல்கள் மீளுமா?

அவர்கள் வைத்த கண்ணிவெடிக்காய்
அமைதிகாப்போர் சுட்டவர்களுள்
அப்பாவும் ஒண்டென்று
கதறியழும் நண்பியின்
தந்தையின் சைக்கிள் பின்சீட்டில்
பலநாள் பயணித்தது
பலமாய்த் தாக்க

தலைக்குத் துணியால் கொண்டை போட்ட
ஆண்கள் தலைகளைக் காண்கையில்
பயமாய்க் கோபமாய்
மாறிடும் மனதில்
சொர்க்கமேயென்ற பூமி
கொதித்து கனன்றது

தாத்தாவின் நண்பர்
காக்கா
காரணப்பெயரல்ல
நண்பர் வெள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட ஆராய்ச்சியின் பின்
காக்கா அண்ணா
கூப்பிடலில்
திருப்பிச்சிரிப்பார்.

காக்கா என்பதே
அண்ணா என்றறிகையில்
எம்மகராதி
ஓர் சொல் சேர்த்துக் கொள்ளும்

பிறிதொரு நாளில்
அம்மா
பாவம் சனங்கள்
விளக்கோடும் பாயோடும்
மழை வேறு

வெளியேற்றப்பட்ட சனங்களை
வவுனியா வழிகளில்
கண்ட கவலைகள்
கவலைப்படாமல்
கெந்தித்தட்டுவோம்.

இருகை இணைத்து
கட்டிய மண்ணில்
ஊரில் விடு.

கனடா வாழ்க்கை
கடத்தலின் பின்
ஈழம் நோக்கிய
இன்னொரு பயணத்தில்
வானம் நோக்கும்
வாழ்தல் பயத்தில்.



அம்மம்மா வீட்டு
தேசிமரமும்
கருவேப்பிலை மரமும்
பூத்துக் காய்த்து
செழித்து இருக்கையில்
விமானச் சத்தமோ பீதி தரும்.

கொட்டில் வாங்கில்
படுத்துக் கிடக்கும்
ஆத்ம சுகத்திற்கே
பீதிதான் விலை.

தாத்தாவின் வாயோ
புளியமரக் காணியில்
முழங்கால் வளைத்து
குந்தி
புல்லுப் பிடுங்கும்
முனைதலின் ஊடே வளர்த்த
ரெண்டு தென்னம் பிள்ளைகள்
'அவங்கள்' சுட்டுப்பழகி பட்டதனை
அவங்களுக்கென்ன தெரியும்
என ஆறும்.

எனது காற்றோ
அப்பா கேட்கச் சொன்னதை
வேண்டா வெறுப்பாய்
வெள்ளைக்காரன் வரமுன்னம்
நெடுந்தீவில் நெசவு இயந்திரம் இருந்ததாமே
கேள்வி வீசும்
பதில்மேல் சுரணையற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா (சு)வாசத்தில்
நாவூற மின்னிய
கிணற்றுத் தண்ணீர்
கைப்பாய்க் கைத்தது
குளம்
கலிங்குப் பாய்ந்தது.

மறுநாள் மாலை
சித்தி
இயக்கத்துக்கு ஓடிற்றாள்.

தாத்தா
நெடுந்தீவு மண்ணும்
வன்னி வாழ்தலும் பற்றிப் பேசி
விடைபெறும் போது
கலங்கும் முதுமையை
முக்காடிட்டு மறைத்து,
"சின்ன காக்காவை
கொழும்பில் கண்டனியோ?"
கேள்வியில் வெளிறும்
சொர்க்கமே எனது பூமி

கிணத்துத் தண்ணி
கைக்கும்.
கலிங்குப் பாயும்

சொர்க்கமே எனது பூமி?

*பிரதிபா தில்லைநாதன்*

---

*யுத்தத்தைத் தின்போம் - 1999*

## கிழிகிறதடி என் நாட்கள்

*1.*

கிழிகிறதடி என் நாட்கள்
மௌனப் புறாக்களாய்

உனக்கு தெரியுமோ
நான் யாரையும்
இப்போ
எதிர்ப்பதில்லை
முரண்பட்டு விலகியவர்களை
மனிதர்களென சேர்த்துக்கொண்டேன்
உடன்பட்டு வந்தவர்களோ
மனிதன்களாகவே
இனியும் இருப்போம் என்பர்

கிழிகிறதடி என் நாட்கள்

என் மோனம் இழந்தேன்
இனி
நளினம் அழகு
இரண்டையும் இழப்பேன்
இறந்ததும் நிகழ்வதும்
ஒன்றுபோல
காலங்கள்

நெஞ்சு மையத்துள் வெறுமை

ஏதும் செய்ததாய்
அன்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதுவும் செய்வதாய்
நினைவில் இல்லை

செய்யப்போவதாய்
எழுகிறது
எனக்குள்
ஜனரஞ்சகக் கனவு

அதோடு
கிழிகிறதடி என் நாட்கள்

**2.**

நான்
எதைச் சாதித்தேன்
எதைச் சாதிப்பேன்

கால்வைத்த மனிதனை
எதிர்க்கத் திராணியற்று
கலைகின்றன
மௌனப்புறாக்கள்

பாரதியின் பாடலில்
அகமகிழ்ந்து
குந்த
நான் என்ன பராசக்தியா?

கலைகின்றன புறாக்கள்
கிழிகிறதடி என் காலங்கள்

**3.**

என்உடல் செயற்படாமற்போய்
சில வருடங்கள்
ஆயிற்று



அந்த சிலவற்றுள்
சிதைந்த என் கனவு
ஏக்கம்

இப்போதும்
கனவுகள் மீண்டும் வராதா என்கின்ற
ஏக்கம்

மீண்டு
மீண்டும்வா

**4.**

எவனதும் பாதிப்பற்று
எழுதும் ஆசை

எவளைக் கேட்டாலும்
பாரதி என்கிறாள்
சரி அப்புறம் என்றால்
இன்னொரு பாரதி
யுகக் கவியாய் முளைத்துவிடுகிறான்.

எவனதும் பாதிப்பற்று
எழுதும் ஆசை
வேராய் இருக்கிறது
என்னுள்

தெரிந்த வரையில்
எவனும் எழுதிக் கிழித்ததாய்
இல்லை

இங்கு எவனைப்பற்றியும்
எவனுக்கும் கவலையில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனவன் கவலையெல்லாம்
அவள்களின் பாதிப்புகள்
தாங்களாக வேண்டும்
அதுவே

மௌனப் புறாக்களாய்
கிழிகிறதடி என் நாட்கள்.

*பிரதீபா தில்லைநாதன்*

*உயிர்நிழல், நவ-டிசு 1999*

## பெண்ணாக ஒரு அகதி

பனியும் வெப்பமும்
காலங்களுக்கேற்ப
மாறிமாறி
வந்திடும் பொழுதுகளில்

விரிந்து நெளிந்து
செல்லும் பாதையோரங்களிலும்
விரைந்து செல்லும் பஸ் வண்டியிலும்
மலர்களை விரும்பும் பூஞ்சோலைகளிலும்
கடந்து செல்கையிலும்
தரித்து நிற்கையிலும்
காட்சிப் பொருளென
முகத்திலிருந்து பாதங்கள் வரைக்கும்
என்னைப் பல கண்கள் அளக்கும்
அகதியாதலால்.
ஆடையிலிருந்து உறுப்புகள் வரைக்கும்
பார்வைகளால் விசாரிக்கப்பட்டு
வயோதிபரிலிருந்து இளைஞர் வரைக்கும்
பஸ் கண்ணாடிகளில் கண்களை
பிரயாசத்துடன் என்மேல் வீசி
காமப்பார்வையை என் மேல் பதிப்பர்.
பெண்ணாதலால்...

தேசங்கள் தாண்டினும்
வாழ்நிலை மாறினும்
அகதியாகவும், பெண்ணாகவும்
என்னைக் கண்கள் நோக்கிய வண்ணமே!

*பிரியதர்சினி*

*மறையாத மறுபாதி, 2ஆம் பதிப்பு- 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்கள் சொன்ன கதை

நான்
இறக்கை பிடுங்கப்பட்ட
குயிற்பேடு
பறக்க முடியாமற்தான்
இந்தக் கல்யாணக் கூண்டின்
கைதியானேன்

மனத்தோடு வளர்ந்த
நம் நேசத்தை
மதத்தோடு பறித்தார்கள்
முடிவு...
நீயோ ஜித்தாவில்
நான் இங்கு
திறந்த இத்தாவில்

என் கண்ணீருக்குக்
கட்டுப்பாடு விதிக்கின்ற
உன் கடிதங்களும்
தம் வருகையைக் கட்டுப்படுத்திக் கொண்டன
என் கண்ணீரும்
கட்டுப்பாட்டைத் தளர்த்திற்று

காத்திருந்த என்னை
உதாசீனம் செய்துவிட்டு
இப்போது
வாழ்த்துப்பாட
வந்திருக்கிறாய்

என்னிடமிருந்து
எப்படி நீ
தொலைந்துபோனாய்?
தொலைந்து போன என்
இதயத்திற்கு
எப்படி நீ வாழ்த்துப்பாட முடியும்?

*மசூறா ஏ.மஜீட்*

---

*உயிர்வெளி - 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் அங்கிருந்தேன்

நன்றாய்த்தான் இருந்தது எல்லாம்...
இனிய பழைய நாட்களைவிடவும்
நிலத்திற்காகவும் நிலைமைக்காகவும்
சண்டைகள் இனியும் இல்லை.
சொந்த மண்ணில் மகிழ்ச்சியில்
மனிதர்கள் வாழ்ந்தனர் அங்கு.
"ஓம் அதை அவர்கள் செய்துதான் விட்டார்கள்"
யுத்தத்தை நிறுத்திவிட்டார்கள்.
"போதும் போதுமிந்த சவம்பிடித்த யுத்தம்"
என்று சொல்லித்தான் விட்டார்கள்.
யாழ்ப்பாணத்திலும் நிலைமை வழமையாம்
திரும்பவும் நானங்கு போக முடியுமாம்!
வழமைபோல் ஓடினாள்
யாழ்தேவியாள்.
நெரிசலும் இல்லை, வரிசையும் இல்லை
ஜன்னலோர மூலையில்
எனக்கொரு இடம் கிடைத்தது.
அந்த வெக்கையிலும் பயணம் இனித்தது
திரும்பும் இடமெல்லாம் நல்லாய்த்தான் இருந்தது.
போய் இறங்கிய பின்னர்
எல்லாம் எனதாய் உணர்ந்தேன்.
பாருங்கள்
எவ்வளவு பெரிய வித்தியாசத்தை
இந்த அமைதி (சமாதானம்) கொடுத்துவிடுகிறது.
எல்லாமே இலகுவாகையில்
கைபடும் தூரத்தில் எல்லாம் இருக்கையில்
சொர்க்கம் இந்த மண்ணில் வருகுதே!
சாதிமத பேதம் இல்லை
உண்ண உணவுநிறைய இருப்பதால்
பசியும் துயரும் பிணியும் இல்லை.
மெத்த மழை நித்தம் பெய்வதால்
துயரம் இல்லை
விவசாயிகள் மனசில் துயரம் இல்லை.
வெங்காயம் மிளகாய் மரக்கறி வகைகள்
பழங்களுக்கும் குறைவில்லை.
இவை ஒன்றுக்குமங்கு வரியுமில்லை.
உடைத்திருந்த நகரைப் பார்க்கப்போனேன்.
போகிற வழியினில் கோவில்கள் கண்டேன்.
அழகான இந்த மண்ணில் போரென்று சொன்னவர் யார்?
அதே அதே அழகுடன் எல்லாம் இருந்தன.
யாழ் நூலக வாசலில்
வண.பிதா லோங்கிற்கு வணக்கம் தெரிவித்தேன்.
"எதுவுமிங்கு எரிந்துவிடவில்லை"
சொன்னார் பாதிரியார் நிமிர்ந்தபடி.
வீரசிங்கம் மண்டபத்திற்கு போனேன் பிறகு.
கட்டி இருந்தார்கள் இனி என்றுமே விழாதபடி.
அன்று அங்கு ஒரு பெண்கள் கூட்டம்
நிறையத் தோழிகளைக் கண்டதில் மகிழ்ச்சி.
பாத்திமா அங்கிருந்தாள்
சித்தியும் நயீமாவுடன்
"நாங்கள் மீண்டும் எங்கள் மண்ணில்"
புன்னகை தவழச் சொன்னாள் சகீமா.
என்னைக் கண்டதில் சாந்தினி மகிழ்ந்தாள்.
"பெண்களின் நிலைமை எப்படி?" என்றேன்.
"எமக்கெல்லாம் நல்லகாலம்"- என்றவள்
"பெண்களாக மதிக்கப்படுகிறோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெருமை தரும் விசயந்தானே"
சத்தமாகச் சொன்னாளவள்.

நிகழ்ச்சி ஒழுங்கு வேலைகளில் செல்வி இருந்தாள்.

சிவரமணியோ கவிதை ஒன்றைப் படிக்க இருந்தாள்.

சமத்துவம் கௌரவம் மனிதநேயம் இவற்றுடன்
அவர்களின் அடையாளத்துடன் பெண்களைப் பார்க்கையில்
எத்தனை மகிழ்ச்சி, எத்தனை மகிழ்ச்சி"
என்று சொல்லி எதிரொலித்திடும் ஒரு குரல்.
திரும்பினேன்.
வழமையான பிரகாசம் மின்ன
ராஜினி நின்றாள்.
சந்தோசம் மிஞ்சிக் கத்தவும் முடியவில்லை.
விழித்துவிட்டேன்.
கண்டது கனவு.

*மல்லிகா*

*இனியும் சூல்கொள், 23ஆவது இலக்கியச் சந்திப்பு மலர், பிரான்ஸ் - 1997*

# அவள் ஒன்றுக்கும் அசையாள்

வானமே கிழிந்தது போல்
வாரி வாரி மழை பெய்தது.
காவலரணையும் மேவி வெள்ளம்
கால் பரப்பி நடந்தது.
கடும் பயிற்சி எடுப்பதால்
தேய்ந்து நைந்து கிழிந்த
கால் சட்டை ஒன்றை
தைத்தவாறிந்தாள் ஒருத்தி
ஊசியில் நூல் கோர்த்தவாறு
அவள் மெல்லச் சொன்னாள்,
வானமும் பீத்தலாய்ப் போச்சுது.
இது முடிய அதையும் நான்
பொத்தித் தைக்கப் போகிறேன்.

நிலமெல்லாம் ஊறி தடியெல்லாம் பாறி
பொறிந்து விழப்போன
கொட்டிலுக்கு முட்டுக் கொடுத்த
அடுத்தவள் முணுமுணுத்தாள்,
சனமெல்லாம் பாவம்
நனையப் போகுதுகள்

சாக்குப் தொப்பியில் மழைநீர் ஊறி
தலையெல்லாம் கனக்க,
கருவியோடு தானும் நனைந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிரில் பல் கிடுக்க,
மரத்தின் மறைவிலிருந்து
பகைத்தளம் நோக்கித் தன்
விழி விரித்த வீரி ஒருத்தி
சற்றும் அசைந்தாளில்லை
மழை வெள்ளமென்ன
பகை வெள்ளம் வந்தாலும்
அவள் அசையாள்! வெல்வாள்!

*மலைமகள்*

*எழுதாத உன் கவிதை: தமிழீழப் பெண்களின் கவிதைகள் - 2001*

## பைத்தியக்காரன்

தனக்குத்தான் தெரியும் என நினைத்து
நீ வடித்த காவியங்கள்
தவிடு பொடியாகும் காலம்
வெகுவிரைவில் - நீ
நின்ற இடம் தெரியாமல்
நிற்க வழியில்லாமல்- நீ
நிலைகுலையும் கண்கொள்ளாக் காட்சி
இன்னும் சொற்ப காலங்களில் - புரியவில்லையா
புரியாத புதிராக உனக்கு இது இருந்தாலும்
புதிய புதிர் இல்லை என்பதும் உண்மைதான்!

மாதத்தில் ஆறுநாள் துடக்காக நான் இருந்தால்
வருடத்தில் எழுபத்திரண்டுநாள் துடக்காக நான் இருப்பேன்
அப்படி என்றால் உன் வருகையோ... பெருந் துடக்கு
இதனைக் கூட அறியாத பெருங் கவிஞா!
உன்நிலை பாராது மற்றவர்களை இழிவுபடுத்துகின்றாயே!

எங்கள் துடக்கு நேரத்தில் கூட- நாங்கள்
இருப்புக்களை திடப்படுத்துகின்றோம்
நீயோ எங்கள் உயர்வு கண்டு மடிந்து போகின்றாய்
ஏன் இந்த அவலநிலை?
எங்களுக்கு மாத்திரம் களைப்பும் துடக்கும் என்றால்
உங்களுக்கு அவ்வப்போது ஏற்படும் துடக்குகளை
எதில் சேர்ப்பது...? உங்கள்
தூரநோக்கமே பெண்களை தரங்குறைப்பது என்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில் இருக்கும் செயல்வாதம்
உங்களை நீங்களே இழிவுபடுத்துவதாகும்
இறுதியாக ஒன்று...!

துடக்கு என்ற கூட்டில் ஏற்றி
கிடங்கு என்ற பள்ளத்துக்குள்- என்னை
கிடத்தி விட்டோம் என
கனவு காணாதே...!
உன் தூரநோக்கில் - பெண்
துடக்குள்ளவள் என்றால்
என் சொல்வாதம் - நீ
பைத்தியக்காரன் என்பதே!

*மஸாஹிறா பாயிஸ்*

*ஊடறு- 2002*

# நட்சத்திரங்களின் மழை

மழை தூமித்துக் கொண்டிருந்தது
ஒரு சிறுவன்
வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்
மழைத் துமிகள்
அவன் மேலே விழுகின்றது

சூரியன் மறையத் தொடங்கினான்
சிறுவனைத் தவிர
எல்லோரும் அவரவர் வீடுகளில் இருந்தார்கள்
அவனோ ஒரு பொழுதும்
வானத்தைப் பார்த்திராதது போல
பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று
அவன் தலையில் ஏதோ விழுந்தது
அவன் வலியால் கத்தினான்
நட்சத்திரங்களின் மழை
அவன் மேல்
விழுந்து கொண்டிருந்ததனால்

*மீரா பாலகணேசன்*

*வெளிச்சம், கார்த்திகை- மார்கழி, 2003*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்மையின் இலக்கணம்

அவன்,
கற்றுக்கொண்ட வித்தைகள்
இன்று நேற்று வந்ததல்ல...
தொன்று தொட்டே....
தொட்டிலில் இருக்கும் போதே...
தொடங்கியாச்சு!

பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்தே,
முறையாகக் கற்றவை தான்!
அதனை,
தன் தந்தையிடமிருந்து...
மீண்டும்... மீண்டும் தரப்படுத்திக் கொண்டான்!
இல்லறத்திற்கு இவை இன்றியமையாதது,
எனத் தன்னை,
தயார் படுத்தவும் செய்தான்!

தன் மகனுக்கும்,
ஆண்மையின் இலக்கணத்தை,
அறிவிப்பதாய்...
தினம் தினம் தாரத்துடன் சண்டையிட்டான்!

அவளை
எட்டிப் பிடித்து,
கன்னம் வீங்க கைவிரல் பதித்து...
முஸ்டியால் குத்தி,
முட்டி வீழ்த்தி...
கூந்தல் பற்றி...
சுவத்தில் சாத்தி
ஓங்கி அறைந்து ஒரு உதையும் போட்டான்!

ஒவ்வொரு 'ஸ்டெப்' பாய்
ஒயிலாகப் பழக்கினான் மகனுக்கும்!
... .... ....
வாழையடி வாழையாய்...
வம்சப் பரம்பரையாய்.. அதே,
வழித் தோன்றலில் வந்தவன்,
ஆணவத்தை ஆளுமையில் கொண்டவன்!
ஆர்ப்பரித்தான்...
"ஆ ணென்று"!

மகனுக்கும்
பேதையொன்றைப் பேசி...
மணமுடித்து,
நாளும் உடைபடும்
மருமகள் கன்னம் பார்த்து,
மகனின் வீரத்தையும்,
மெச்சிக் கொண்டான்!

ஓ... இறைவா!
அப்படியே...
"பெண்" சாதி..
அடங்கிப் போனது!
இப்படியே...
"இவன்" சாதி
அலட்டிக் கொண்டது!
இதுதான்...
ஆண்மையென்று

*முகைசிரா முகைடீன்*

---

*பெண், 9:2 - 2004*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரிலிருந்து ஒரு கடிதம்

அன்பு நண்ப,
கோடை விடுமுறையில்
வீடு வந்தபோது
ஊர் பாலைவனமாக-
என்னைப் பொறுத்தவரையில்!

வெம்மையும் வறட்சியும்
'இந்தியக்' கெடுபிடியும்
வழமைபோல்.
ஆனால் அதுவல்ல
பாலையின் காரணம்.
ஊர் வாசிகசாலையின் முன்னுள்ள
முருகன் கோவிற் தேரடி
வெறிச்சோடி...
உனக்குத் தெரியுமோ என்னவோ
எங்கட கூட்டத்தில் ஒருத்தரும்
இப்ப
இங்க இல்லை.

ரவி ஒருமுறை
கண்ணிவெடி வைக்கப்போய்...
ராசன் சயனைட் குடித்து...
சங்கர் இங்கிலாந்தில்
சேகர் இந்தியாவில் (?)
நீயோ நோர்வேயில்!

சங்கர் உண்மையிலேயே படிக்கப்போனானாம்
பரவாயில்லை.

ஆனால் நீ படிக்கப்போவதாகச்
சொல்லிக்கொண்டு
'அகதியாக...'
அம்மா சொன்னபோது
என்னால
நம்ப முடியேல்ல.
'சொந்த மண்ணிலேயே
அகதியாய் வாழ்வதற்கும்
அந்நிய மண்ணில்
அகதியாய் வாழ்வதற்கும்
என்ன வித்தியாசம்?'
என்று நீ கேட்கலாம்.
ஆனால்
'இருப்பு'க்கும் 'வாழ்வு'க்கும்
என்ன வித்தியாசமென்று
நான் சொல்லத் தேவையில்லை.

உலக அரசியல், நாட்டு நடப்பு
எமது விடுதலை, அகதிகளாதல்
இயக்கங்களின் போக்கு
அரச செய்தி ஊடகங்களின்
புளுகு மூடை....
எதைத்தான் நாம் அலசாது விட்டோம்?
ஆனால்-
அப்போது உன் கருத்து வேறாயிருந்தது.

கலாசாலைக் கல்வியின் பொருத்தமின்மையா
அக்காமாரின் பிரச்சனையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்தப்பட்டவனென்று கூறி
உனையவர்கள் ஒதுக்கிவைத்தமையா
இயக்கங்களின்
ஏறுமாறான நடவடிக்கைகளா...
இவற்றில் எது உன்னை
அகதியாய்த் துரத்திற்று?

எனக்கு விளங்கேல்ல,
இவையெல்லாம்
முன்பும் இருந்தவைதானே?
போகுமுன் நீ ஒரு
கடிதமாவது போட்டிருக்கலாம்.
* * *
நான் வந்ததிலிருந்து
வீட்டில்தான்.
ஊரில் இன்னும்
இயக்கக் கூட்டங்கள்
இலக்கிய விமரிசனங்கள்
தெருக்கூத்து நாடகங்கள்
நடக்குதுதான்.
நடத்துவோர் சந்தோசப்பட்டிருப்பினம்
கேள்வி கேட்டு மடக்கிறதுகளைக்
காணேல்ல என்று.

கடற்கரைக் கண்ணகை கோவிலுக்குப்
போயிற்று வந்து அம்மா சொன்னா
எங்கட 'ஆவரங்காட்டில்'
ஈச்சங் குலையள் நிறையப்
பழுத்திருக்குதாம்...



கடற்தண்ணிய மறிச்சுக்கட்டின
வாய்க்காலில் குந்தியிருந்து
ஈச்சங் கொட்டைகளைத்
தேங்கிய தண்ணீரில்
வீசி வீசிக் கதைத்து...
ஓ! எங்கட ஊரில
ஈச்சம் பழம் பிடுங்கக் கூட
இப்ப ஆக்களில்லை.

திருத்தப்படாத எம்மூர் வீதிகளில்
சைக்கிளில் வரிசையாய்
குழிகளை விலத்த வெட்டி
வாயினால் மணி அடித்து
ஒருவரும் இப்ப போறேல்ல
வீதிகளில் குழிகள்
அப்படியே!

* * *

பருவகால தரிசனங்கள்-
வெயில் வரும், இலை உதிரும்
வெண்பனி தழுவும் நிலமகளை,
பிரபஞ்சமே உறைந்துபோகும்.
எலும்புக் குருத்தை
ஊடறுக்கும் குளிரில்
வசந்தத்தை எதிர்பார்த்து
வெளிநாட்டு வாழ்வில் அள்ளுண்டு
சீட்டாட்டம், ஏமாற்று
போதைப் பொருள் கடத்தல்
பல்வேறாய் பிளவுண்ட
குழு மோதல்கள், குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலக யாந்திரிகத்தின்
விஸ்வரூபம்...

இவை தவிர
நோர்வேயில் புதிதாக
உணர்ந்தவற்றை எழுது.
பிடிக்காட்டித் திரும்பி வா,
இங்க செய்யிறதுக்கு
இன்னும்
எவ்வளவோ இருக்கு.

*மைத்ரேயி*

*புலம்பெயர்ந்தோர் கவிதைகள் - 2001*

## பொருள்

நீண்டு தொங்கும்
வெப்ப இரவு
பூச்சிகளை
முக்கிக் கனக்க வைக்கிறது.
காற்றுச் சிணுங்கலில்
பக்கத்து வீட்டு ரேடியோவின்
சின்ன அலறல்.
கனமிக்க கைப்பிடியில்
நொறுங்குகிறது உடல்
வியர்வை பொங்கி வழிய
அழுத்தல்
வருத்தல்
முத்தமிடல் கூட ஆவேசமாய்
அவன் தனது பேனாவால்
தாள்களில் கிறுக்குவதுபோல,
தனக்குரிய சீப்பால்
தலையை அழுத்தி வாரிக் கொள்வது போல,
தாடியைச் சீவுகிற சவரக்கத்தியை
கவனமாகக் கையாள்வதைப் போல
எல்லாம் முடிந்து
அமைதியாய்த் தூங்குகிறான் அருகே.
என் இத்தனை நாளைய
காதலும் கனிவும்
இதந்தரு மென்னுணர்வுகளும்
பொங்கியெழுந்த குறியின் முன்
ஒழுகிக் கிடக்கிறது
கட்டிலின் கீழே.

*மைதிலி*

*இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள் - 2003. கொற்றவை என்ற பெயரிலும் எழுதியுள்ளார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதுதானே நான்

உனக்கு ஞாபகம் இருக்கிறதா?
நான்ஒரு
தொட்டாற் சுருங்கி என்று
மென்மையான இழைகள்
மட்டுமே
என் இதயத்தைச் சுற்றி என்று.
என்னால்
ஆற்றிக் கொள்ள இயலாத தருணங்களில்
உன் பார்வையில்

நான்...
மூர்க்கமானவள்
'வினை' பிடித்தவள்
அஃறிணைப் பிறப்பு...
எப்படியெனினும்

உன் வறட்டுப் பிடிவாதத்திற்கும்
ஆழ்மனத் தாக்கங்களுக்கும்
உன் காயங்களுக்கும்
உத்தியோகத்திற்கும்
கௌரவத்துக்கும்
எதிர்பார்ப்புகளுக்கும்
என்னைத் தானே
இரை கொள்கிறாய்!
நிஜமாகக் கூடி
என் கனவுகளைக் கூட
ஒடித்துவிட்டு
அதிலும் கூட திருப்தியுறாது...

எதுதான் உன்னைத் திருப்திப் படுத்துமோ?...
உண்மை அன்புக்கு ஏங்குவதாக
அன்று சொன்ன நீ
இன்று
என்னிடமிருந்து அதைப் பெற்றும்
எனக்குரியதைத்தர
ஏனோ மறுக்கிறாய்
சற்றே திறந்த ஜன்னலுக்கு வெளியே
ஒளியையும் மீறின
சந்தோஷ முகங்கள்...
என் வாழ்க்கை ஏனோ
இழப்புகளுடனும்
ஏக்கத்துடனும்
ஆயினும்

உன்
கூர் மூக்கின் அழகில்
சிறுபிள்ளைத் தனங்களில்
உதாரண குணங்களில்
உனக்குள்ளான மனிதனை
சலித்துத் தேடி...
உன்னில் லயித்து
நீ தரும்
சந்தோஷங்களில் கலந்து
அதே புன்னகையுடன்
உனக்காகவே என்றும்...

*யாழ்-ஆதிரை*

---

*உயிர்வெளி - 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்புகள்

இத்தனை ஏமாற்றங்களை
எதிர் கொள்ளவா நாம்
எதிர்காலங்களை துறந்து
இங்கு வந்தோம்

எங்கள் சொந்தம்
எங்கள் கல்வி
எங்கள் நன்மை
எங்கள் பதவி
என இருந்த
சிறுவட்டத்தை அழித்து
பெரிதாய் ஒரு வட்டம்
நாமே வரைந்தது...

அந்த பெரிதான
வட்டத்தினுள்ளும்
சிறுமைகள் எம்மை
ஏமாற்றினவோ

நண்பா!
மழலை பேசும்
குழந்தைப் பருவம்
தரையில் கிடந்து
தவழும்போதும்
முற்றத்தில் விளையாடி
மகிழும் சிறுவர் கண்டு
ஏங்கியிருந்த எமக்கு...
ஒருநாள்
அந்த வாழ்வும் வந்து
அணைத்துக் கொண்டது

சிறுவர்களாய்
செருப்பில்லாக் கால்களுடன்
தெருக் கரையால்
நடக்கையிலே
நீளக் கால்ச் சட்டை
நிலம் தாங்கும் சப்பாத்து
நிமிர்ந்த நடை
அண்ணாமார் பலர்
அணிவகுத்துச் செல்லும்...
அதைக் கண்டு
எதிர்பார்த்திருக்க
அந்தக் காலம்
எமக்கு கிட்டி
இதமாய்க் கழித்தோம்
கல்லூரி நாட்களில்
பல்கலைக்கழக வாழ்வு

எம்மனதில் வந்து
நிழலாட
விடாமுயற்சிப் படிகள்
கண்முன் தெரிய
அலைகளில் ஏறி
பட்டப்படிப்பை
எட்டிப் பிடித்தவர்கள் நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை வரவேற்ற
புதிதான நண்பர்களின்
புதிரான பாடங்கள்
புதிய வழியை காட்டி நிற்க...

நம்மூர்த் தெருக்களிலும்
நம் மண்ணின் எல்லைகளிலும்
சோக கீதங்கள் மறைந்து
சுகமான ராகங்கள்
இசைப்படும் வரை...
பட்டங்கள் என்ன
பலன் தரும் என எண்ணத் தொடங்கி...

புதிய எதிர்ப்பார்ப்புகளோடு
பழைய சுகங்களை மறந்து
முன்சென்ற
நண்பர்களின் பின்னால்
நடக்கத் தொடங்கினோம்

இத்தனை காலம்
ஓடி மறைந்தும்
எங்கள் கவலைகள்
எதிர்பார்ப்புகள் எம்மோடு
ஒட்டியே இருக்க
ஏமாற்றங்கள் மட்டும்
எதிர் கொண்டு...
எதிர் கொண்டு...

எதிரிகள் எம்மை
அழிக்கு முன்னரே



எம்மவர் எம்மை
ஒழிக்க வருவதும்

துயரங்களை
மக்களிடமிருந்து பிரிப்பதற்காய்
துப்பாக்கி ஏந்தியவர்கள்
துப்பாக்கிகள் கொண்டு
மக்களையே
துரத்தும் போதும்

இளைய வயதில்
எதிர்பார்ப்புகளை
அடுக்கடுக்காய்
வெற்றி கொண்டவர்கள்
இப்போது
ஏமாற்றங்கள் எம்மை
எதிர்கொள்ள

இந்தப் பெரிதான
வட்டத்தினுள்ளும்
சிறுமைகள் எம்மை
ஏமாற்றினவோ

*யாழினி*

---

*காலம், மார்ச் - 1991*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெருவின் ஓலம்

நிலமாகிக் கிடந்தேன்
தெருவாக்கினாய்
மகிழ்ந்தேன்

சுகமாக நடந்தாய்
சுமைதாங்கியானேன்
பூரித்தேன்

உன் வளர்ச்சியால்
எனை விஸ்தாரமாக்கினாய்
வியந்து போனேன்!

அலங்கரித்தாய்
நாணப்பட்டேன்

மேதினங்களில்
சுவாசித்துக் கொண்டேன்!

ஒவ்வொரு சுதந்திர நாளிலும்
கர்வப்பட்டேன்!

இன்னும் செய்தாய்
எச்சில் உமிழ்ந்தாய்!
வேண்டாததை வீசியெறிந்தாய்!
உயிர் உள்ளதும் அற்றதுமாய்!
இரத்தம் தெளித்தாய்!
பிணங்கள் குவித்தாய்!
சலம் வடித்தாய்!
மலம் கழித்தாய்!

ஐயோ!
கூனிக்குறுகிவிட்டேன்
சிறுமைப்படுத்திவிட்டாய்!
மீண்டும் என்னை
நிலமாக்கிவிடு!
விளைநிலமாக்கிவிடு!

*யூலியா*

---

*இருள்வெளி - 1998. இலக்கியச் சந்திப்பு , 10ஆவது ஆண்டையொட்டி வந்த பின் நவீனத்துவ படைப்புகளின் தொகுதி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையிலும் உண்மையாக

விரிந்து கிடந்த
கூந்தலை முடிந்து
கலைந்து போன ஆடைகளை
அணிவதற்காய் நானும்
மெதுவாக எழுந்தபோது
'இவள் அவனோட விரும்பித்தான்..'
வார்த்தைகள் என்னை
அறுத்து வதைத்தன
திரும்பிப் பார்த்தேன்
அம்மா, அக்கா, அண்ணா அனைவருமே
என்னைப் பிழையாக...
"தான் செத்திருக்கலாம்
இல்லாட்டி
அவனைச் சாக்காட்டியிருக்கலாம்
இரண்டுமில்லாமல் எங்கட மானத்தை....?"

தொடர்ந்தன பொறிகள்
ஆனால்?.. நான் சிரித்தேன்
"இராணுவக் கற்பழிப்புக்காய் கலங்கிடலாகாது" என
மேடையேறி முழங்கிய அண்ணன்
புத்தகங்களில் எழுதிய அக்கா
இன்று ... எனது ஊரவன்
அதே நிலையில்...

எனக்குப் புரியவில்லை
அந்நியன் ஆத்திரத்தில்
அடக்குமுறையின் வடிவில் நடந்து கொண்டான்
ஆனால்... இவனோ...
காமனாய்... கயவனாய்...
இவனை என்ன செய்யலாம்?

கற்புக்காய் கண்ணீர் வடிக்க
நான் ஒன்றும் கண்ணகியல்ல
மானத்தை நினைத்து நிற்க,
நான் ஒன்றும்
இழக்கவில்லை.
தற்கொலையில் உயிரைமாய்க்க
நான் ஒன்றும் கோழையில்லை.
இராணுவத்தை விட்டுத் தள்ளினோம்
ஆனால்... நமது இனத்தவனை வெறிபிடித்தவனை
திருமணமாகி இரு குழந்தையும் பெற்றவனை
என்னைப்போல் இன்னும்
எத்தனைபேர்?
இவனைப் போல் இன்னும்
எத்தனைபேர்?
இவர்களுக்கு என்ன செய்யலாம்?
குழம்பினேன்
நான் குழறவில்லை
குடும்ப கௌரவத்திற்காக
என்னைக் கொல்லலாம்
ஆனால் நானாக...
அது நடக்காது.

எனது பாதங்கள் தொடரும் பயணத்தில்
முடிந்தால்... துணிவிருந்தால்
உண்மையிலும் உண்மையாக
எவராவது வாழ வரலாம்.

*ரங்கா*

*சொல்லாத சேதிகள் - 1986*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

என் மௌனங்களை
நீ உடைக்கச் சொல்கிறாய்
அவை உனக்காக உடைவதாக இல்லை
அதற்கான
தகுதியை அவை கேட்கின்றன

நிராகரிப்பின் வலி உனக்கு மட்டும்தானா?

நீ யாரென்று அறியுமுன்
என் முத்தங்களை
உன்னுடன் வீணடித்து
என் உணர்வுகளை
உன்னோடு சாகடித்து
என் இதயத்திற்கு
உன்னால் வலிகொடுத்து
என் பொழுதுகளை
உன்னால் நானிழந்து

மொத்தத்தில்
என் சுயத்தையே இழந்திருந்தேன்

இல்லை
என் மௌனங்கள் உனக்காக இல்லை

*ரஞ்சினி (பிராங்போட்)*

---

*உயிர்நிழல், ஜன-மார் : 2006*

ஒரு சின்னக் குருவியாய்
இந்த மலை, ஆறு, கடல், நதி
பூந்தோட்டங்கள், மனிதர்கள், மிருகங்கள்
எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன்.

ஆனாலும் என்ன?
நான் தூக்கணாம் குருவி
தும்புகளின் தொடுதல்களில் தொங்கிக்
கொண்டிருக்கிறது
எனது கூடு

என் மெதுமெதுப்பான
தசைகளை பிறாண்டிக் கொட்டியும்,
குருதியைப் புசிக்கவும்
என்னின்,
அழுகிய இறக்கைகளை பிடுங்கி எறியவும்
எஞ்சி உள்ள தோலைக் கூட
தங்களுக்காக எடுத்து
என் உடலில்லா ஆன்மாவை
பூமியின் ஆயிரம் அடிகள்
ஆழத்தில் புதைத்துவிட
என் சிறு கூண்டைச் சுற்றி
பேய்களின் கொட்டம்.

என்னைக் காப்பாற்றுங்கள்
என்னை மட்டுமல்ல
புயலோடு வந்த பேய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிக் கொண்டு போன என்னுறவுகளையும்
வாழ்வைத் தொலைத்துவிட்டு
விழிகளால் மட்டுமே
தேடி அலையும் என் தாய் தந்தையையும்

என்னையும் எனைச் சுற்றியிருந்த எல்லாவற்றையும்
பேய்களிடம் இருந்து காப்பாற்றுங்கள்
என் உயிர்மூச்சுப் பறிக்கப்படும் முன்
துப்பாக்கி ஏந்திய இந்தப் பேய்களிடம் இருந்து
என்னை காப்பாற்றுங்கள்.

*ரேவதி*

---

*இன்னுமொரு காலடி - தமிழர் நலன்புரி சங்கம் மலர்- 1998*
*கலா என்ற பெயரிலும் எழுதுகிறார்.*



**கோணேஸ்வரிகள்...!**

நேற்றைய அவளுடைய சாவு எனக்கு
வேதனையைத் தரவில்லை
மரத்துப்போய்விட்ட உணர்வுகளுக்குள்
அதிர்ந்து போதல் எப்படி நிகழும்!?

அன்பான என் தமிழச்சிகளே,
இத்தீவின் சமாதனத்திற்காய்
நீங்கள் என்ன செய்தீர்கள்!?
ஆகவே, வாருங்கள்
உடைகளைக் கழற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்
என் அம்மாவே
உன்னையும்தான்.

சமாதானத்திற்காய் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளைத் திறவுங்கள்
பாவம்
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்.

வீரர்களே! வாருங்கள்
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.
என் பின்னால்
எனது பள்ளித் தங்கையும் உள்ளாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ந்ததா எல்லாம்
அவ்வளவோடு நின்றுவிடாதீர்!
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக் கூடும்.
ஆகவே,
வெடிவைத்தே சிதறடியுங்கள்
ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளி
புதையுங்கள்
இனிமேல் எம்மினம் தளிர்விட முடியாதபடி.

சிங்கள சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை.

*ரேவதி*

*சரிநிகர், கலா என்ற பெயரிலும் எழுதுகிறார்.*

## கொஞ்சம் கண் பனித்துப்போ...

ஒரு தீப்பிழம்பை
உள்ளங்கைக்குள் பொத்தி வைத்துக்
கொண்டு(ம்)
எதுவுமே இல்லை என்றிடல்
உனக்கு இயல்கின்றது தான்.
ஆனால்...
என்னில் வந்திடும்- ஒரு
மெல்லிய மழைத் தூறலில்...
தென்றலின் தொடுகையில் கூட
நான்... பொசுங்கிப்போதலும்...
தலையிலே ஒரு பூ வந்து விழுகையிலும்
நசிந்து போனதாய் உணர்தலும்...
எனது நிழலின் ஒலிகேட்டு
நானே நெஞ்சம் அதிர்தலும்...
இப்போதெல்லாம்
இயல்பாகிப்போயிருக்கிறது.

உனக்குத் தெரியுமா?
இங்கே
புயலடித்தோய்ந்த இலவங்காடாய்...
உன் நினைவுத் தீ நாக்குகள்
தீண்டித்தீண்டி உருக்குலைத்தழித்த
மானாப் புதராய்- என்
மனவெளி!

ச்சே!
வெறுமனே ஒரு வெள்ளைத்தாளாய்
இருந்ததோர் உள்ளத்தில்
நீ பாட்டுக்கு, உன்னிஷ்டம்போல் தீட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறுக்கல் சித்திரமாய்
உன் நினைவுகள்...

கல்வெட்டுப் பொறிப்பாய் -அவை
உருமாறியது உணராமல்
'வர்ணம் தீட்டுதல் பற்றி- நீ
விவாதித்துக் கொண்டிருக்கிறாய்'

மனப்பாறை வெடித்து- அதன்
அங்குலம் அங்குலமாய்- நீ
வேரோடிப் போனதறியாமல்
நடுகைக்கேற்ற நிலமா- இது
நட்டால் ந(ப)லன் தருமா என்றெல்லாம்
விசாரித்துக் கொண்டிருக்கிறாய்,
வேடிக்கைதான்!

நிலவு தேய்தல் பற்றி...
காற்று ஓலமிடுவது பற்றி...
பூவும் இலைகளும்
உதிர்ந்து சருகாகுதல் பற்றி...
இன்னும்...
எதையெதைப் பற்றியெல்லாமோ
மனம் நெகிழ்ந்துருகும்- என்
இனிய தோழனே!
உறங்குதல் தொலைத்து...
உள்வலி இழந்து .
'எது' வாகவோ ஆகியிருக்கும்
எனக்காவும் கொஞ்சம்
கண்பனித்துப்போ

*லறீனா ஏ.ஹெக்*

*மல்லிகை- டிசம்பர் 2005*

## கூரை எரிந்ததில் நிலைவ ரசிக்கும்நான்

காசு கொடுத்து
ஆம்பிளை வாங்கி
அதற்கு
பணிவிடையும் செய்யும் அவலங்கள்.
நான் சொல்ல
விழி விரித்துக் கேட்கிறாள் மகள்
ராஜாராணி கதை கேட்கும் பாவனையில்.

போர் தருகின்ற
சோகங்களுக்குள்ளாலேயும்
ரகசியமாய்
சிலிர்த்துக் கொள்கிறேன்
புலம் பெயர்ந்தமை
தங்கத் தட்டில் தந்திட்ட சுதந்திரம்
என் மகள்களுக்கும்
நம் பெண்களுக்கும்

*வசந்தி -ராஜா*

*உயிர் நிழல், ஜூலை-ஆக: 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னோடு

இயற்கையே!
உன்னோடு
எப்போதும் கைகுலுக்கிக் கொள்ளவே
விரும்புகிறேன்.
ஆறுகள்
நதிகள்
எல்லையின்றி இருப்பதைப்போல
எப்போதும்
எல்லையில்லாது
இந்த
அண்ட வான் வெளியில்
ஏதோ செய்தியாய்
ஒளி சிமிட்டும்
ஒற்றை நட்சத்திரமாய்
எல்லையில்லாது
செய்தி சொல்லி.
காலங்கள் தங்களுக்குள்
கைகுலுக்கிக் கொள்கையில்
எங்கள்
மத்தியில்
வளர்ந்து விட்ட
எனது பொம்மை
அக்காமார்கள்

எமது சகோதரிகளுக்கு மட்டும்
இயங்கியல் விதிகள்
பொய்த்துப் போகையில்
காலச் சக்கரத்தின்
கண்காட்சிச் சாலையில்
தலையாட்டும் பொம்மையாய்
வேண்டாம்.
எப்போதும் குழந்தையாய்
இருக்கவே
இயற்கையே
பின்நோக்கிக் கொஞ்சம்
நகர்ந்து கொள்...
உன்னோடு எப்போதும்
கைகுலுக்கிக் கொள்ள
இந்தக் குழந்தைக்காய்

*இ.வசந்தி*

---

*மறையாத மறுபாதி, 2ஆம் பதிப்பு - 1993*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள் வெளவால்கள்

குயில் இருக்கும்
தோப்பை விட
வெளவால்கள் தொங்கும்
மரத்தில்
வாசம் செய்யவே
இவள் ஆசைப்படுகின்றாள்!

தன் பாதையே தெரியாமல்
தவிக்கின்ற குயிலை விட
தலை கீழாய் நின்று
கெட்டியாகத் தனது
இருப்பை நிலை நாட்டும்
அந்த அரைக் குருட்டு
வெளவால்கள்
அற்புதமானவை!

இருப்பை
நிலை நிறுத்த முடியாமல்
நாள் முழுவதும்
குருடாய் இருக்கும்
குயில்களின்
கூவலை விட
தன் பார்வை
இருண்டு வரும்
நிலை தெரிந்து

அந்த நேரம்
தன் இருப்பை
நிலை நிறுத்த
தலை கீழாய் நின்று
சத்தியாக்கிரகம்
செய்கின்ற
அந்த வெளவால்கள்
வாய் கிழியக் கத்துவதை
கேட்டு இவள்
கிளர்ந்தெழுந்து
இருட்டிலும்
இருப்புக்கு
உயிர் கொடுக்க
ஒலி எழுப்பிக்
கத்துகின்றாள்!

*வாசுகி குணரத்தினம்*

---

*பெண், 4:3 - 1999*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதாத கவிதை...

எழுதுங்களேன்...
நான்
எழுதாது செல்லும்
என் கவிதையை
எழுதுங்களேன்!

ஏராளம்...
ஏராளம்... எண்ணங்களை
எழுத
எழுந்துவர முடியவில்லை.
எல்லையில்
என் துப்பாக்கி
எழுந்து நிற்பதால்
எழுந்துவர என்னால் முடியவில்லை!
எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்!

சீறும்
துப்பாக்கியின் பின்னால்
என்உடல்
சின்னாபின்னப்பட்டுப் போகலாம்.
ஆனால்
என் உணர்வுகள் சிதையாது
உங்களை சிந்திக்க வைக்கும்.
அப்போது
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்!

மீட்கப்பட்ட எம் மண்ணில்
எங்கள்
கல்லறைகள்
கட்டப்பட்டால்
அவை
உங்கள்
கண்ணீர் அஞ்சலிக்காகவோ
அன்றேல் மலர் வளைய
மரியாதைக்காகவோ அல்ல!
எம் மண்ணின்
மறுவாழ்விற்கு
உங்கள் மனஉறுதி
மகுடஞ் சூட்ட வேண்டும்
என்பதற்காகவே!

எனவே
எழுதாத என் கவிதையை
எழுதுங்களேன்!

அர்த்தமுள்ள
என் மரணத்தின் பின்
அங்கீகரிக்கப்பட்ட
தமிழீழத்தில்
நிச்சயம் நீங்கள்
உலாவருவீர்கள்!

அப்போ
எழுதாத
என்கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் முன்
எழுந்து நிற்கும்!

என்னைத்
தெரிந்தவர்கள்
புரிந்தவர்கள்
அரவணைத்தவர்கள்
அன்பு காட்டியவர்கள்
அத்தனை பேரும்
எழுதாது
எழுந்து நிற்கும்
என்
கவிதைக்குள்
பாருங்கள்!

அங்கே
நான் மட்டுமல்ல
என்னுடன்
அத்தனை
மாவீரர்களும்
சந்தோஷமாய்
உங்களைப் பார்த்துப்
புன்னகை பூப்போம்!

*காப்டன் வானதி*

*ஆனையிறவு முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த காப்டன் வானதி எழுதிய இறுதிக் கவிதை இது.*

---

*இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் - 2006*

# மௌன ஆன்மா

மௌனமாகி
என் மனதோடு வாழும்
நிதர்சன முகங்களின்
அகங்கள் இவை
வடிவங்களற்ற மனங்கள்
எடுத்துரைத்தவையெல்லாம்
துயர் குமுழிகளே!
வெற்று வார்த்தைகளின்
சத்தமற்ற ஒலிகள் கூட
என்னை ரணப்படுத்துபவைதான்.
குருதி பெருகி,
சீழ் வடிந்து
சிதிலமான
என் மௌனான்மா
எங்குமே புலப்படாத
நுண்ணிய ஒளிக் கசிவிற்காய்
காத்திருந்த போதெல்லாம்
இருளுறைந்த பெருவெளிகளையே
முகங்கள் காட்டின.
நிச்சயம் ஒளிக்கசிவு
எந்த பொட்டிற்கு
ஊடாகவும் கசியலாம்
எனும் நம்பிக்கையோடு நான்
நாளைகளிற்காய் சுவாசிக்கிறேன்

*விண்ணரசி*

---

*வெளிச்சம் பவள இதழ்- 2001 அலையிசை என்னும் பெயரிலும் இவர் எழுதியுள்ளார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர அடிமைகள்

முகம் மறைத்து நிறம் பூசி
முழுவதுமாய் வேஷம் கட்டி
புன்னகையால் போர்வையிட்டு
பொய்களையே வடித்தெடுத்து
போகாத ஊருக்கு வழி சொல்லும்
போலி இலக்கியவாதிப் பெண்ணல்ல நான்.

எங்கோ உருவாகி
எதற்கெதற்கோ உருமாறி
எழுதுவதற்காய் பிறர் காலை
உடைத்து ஊன்று கோலாக்கி
நடைபோட்டு வந்தவளுமல்ல நான்.

எழுத்தைக் களவாடி
ஏட்டில் பதிவாக்கி
வளத்தைப் பெருக்கி வாழும்
வாய்ச் சொல்லில் வீரியுமல்ல நான்.

என் உள்ளத்தில் உருவாகி
கற்பனை செய்யாமல் கருவாகி
வெளியாகி வரும் எண்ணக் குமுறலை
கவிதையாக்கி தருகின்ற சராசரிப் பெண் நான்.

இருள் போர்த்த பூமியிலே
இடைக்கிடை தலைகாட்டும்
சூரியனும் தொலைந்து போக
சுதந்திரம் பெற்றதாய் எண்ணி- இந்த
சூனியத்துள் வீழ்ந்த என்
சகோதரிகளுள் ஒருத்தி நான்.

எங்கோ நெடுந் தொலைவில்
என் உறவுகள் இருந்து அழ
இங்கோ முகம் தொலைத்து
வாழ்பவருள் ஒருத்தியானேன்.

பனி கொட்டிக் குளிர் வாட்டும்
பாழ்வெளியில் கரைந்துபோக
கரையொதுங்கிக் கரையொதுங்கி
கண்காணாத் தொலைவொதுங்கி
காணாமல் போன எங்கள்
கருவறைச் செல்வங்களே -உங்கள்
கனவுகளைக் கௌரவிக்கிறேன்.

உங்களுக்குப் புகழ்மாலை
சூடவரும் இந்நாளில்
புழுவாய் நெளியும் எம்
புலம்பெயர்ந்த புத்திரரின்
ஆசைகளையும் அவர்தம்
மன ஓசைகளையும்
கொஞ்சம் அலசுவதற்கு முயல்கிறேன்.

*வித்யா*

---

*உயிர் நிழல், ஜன.பிப்: 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணத்துப் பூச்சிகளின் ஒரு வண்ண உலகம்
என் அறைக்குள் நேற்று
மண்ணிற வண்ணத்துப்பூச்சி ஒன்று
மழை பெய்த அந்த மாலையில்
என் அறைக்குள் வந்தது
அதன் சிறகுகளில் நிறங்களால் ஒரு அழகிய மனித முகம்
என்னோடு பேசி மகிழ வந்தது.

விழி மூடாமல் என் முகத்தையே முறைத்தபடி
முறைத்த பார்வையில் முகத்தின் அழகு
மறைந்தே போயிற்று

ஆம்
ஒரு மனித முகம்தான்
மனிதர்களே முறைப்பர்.

முனை சுருட்டிய மீசையோடு
கிராமப்புறக் காவல் தெய்வம் போலென்றாள் சித்தி
அரசன் மாதிரி என்றேன் நான்
கையில் வாளும் இருந்தது போல

அழகை அபகரிக்க எண்ணிப் பிடிக்கப்போக
பறந்து மறைந்தன காவல் தெய்வமும் அரசனும்



ஒரு வண்ணத்துப் பூச்சி
சொன்னது மற்றொன்றுக்கு மனிதர்கள் "உலக மகா
விசித்திரங்கள்"
ஏனென்றது மற்றது
"மதி மயக்கத்தில் காவல் தெய்வம் அரசன் என
உளறுகிறார்கள்"
நானும் மயங்கி விடாது
வந்து விட்டேன் மறுபடி கம்பளிப்பூச்சியாகி விட"

*விநோதினி*

---

*தலித் - 2007*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌடி

அந்நாட்களில் எல்லாரையும் போல
அவனும் ஒரு மனிதன் என் நண்பன்
அவனுக்குப் பச்சையும் சிவப்பு நிறமும் பிடிக்கும்
அவ்வப்போது வகுப்புகளுக்கு வாரன்
வருகிற போது முகம் முகமாயிராது-
போவதெங்கோ என்றேன்.
பின்னொரு நாளில் அறிவாய் என்றான்.
படிக்கும் வயதில் அவன் பையில்
தாடி வளர்த்தவர்களின் படங்கள் போட்ட
புத்தகங்கள். யார் அவர்கள் என்றேன்-
உனக்கெதற்கு என்றான்.
பாடங்களை மறந்து விடுதலைக் கவிதைகள்
பல புனைந்தான்.
துப்பாக்கிகளையும் வீரர்களையும் வரைந்தான்.
மென்மையும் குறும்பும் அவனது கண்களிலிருந்து
மறையக் குரோதமும் வெறுமையும் சுடர்ந்தன.
அவள் காதலைச் சொன்ன கடிதங்களுக்கு
ஒருநாள் பகல் தீயிட்டான், பள்ளியில்
பிறந்த காதல் அங்கேயே யாருமறியாது
அவளைக் கொன்று புதைத்தது.
எம்மோடு பேசுவதை மறந்தான்.
அவனைச் சூழ்ந்திருந்த விசித்திரங்களை
யாரிடமும் சொல்ல முடியவில்லை.
காகிதக் கப்பல் விட்டுக் கொண்டிருந்த
நனைந்த ஒரு காலைப் பொழுதில்
அவனது தாயின் அழுகுரல்
ஈரக் காற்றில் இழைந்து பரவ
அவன் போனான்.
காடுகள், முகாம்கள், துப்பாக்கிகள்
வெடி மருந்துகள் எல்லாம் வாழ்வாக
பறவைகளும் மழையும்
பூக்களும் அர்த்தமற்றுப் போயின அவனுக்கு.
பின் அவர்களைப் போல
நானும் அவன் மரணத்தை எதிர் கொண்டேன்.
அவனும் ஒரு மனிதன் என் நண்பன்.
பிறிதொரு நாளில் கிழிந்து வந்த
அவன் கடிதத்தில்
எழுதியிருந்தான்
“என் கல்லறையில் எனக்குப் பிடித்த பச்சை நிற
இலைகளையும்
சிவப்புப் பூக்களையும் தூவுக” என...

*வினோதினி*

---

*தலித் - 2007*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டை

ஓர் இரவில்
எங்கள் ஊரில்
ஆண்கள் எல்லாம்
துடைக்கப்பட்டனர்.

பல குடிசையினுள்
வெளிச்செல்ல
முடியாத
முனகல் சத்தங்கள்
கேட்டன.

எலியின் சலசலப்பிற்கு
பயந்த அவளது
நாலு வயது மகன்
மீண்டும் பச்சை மண்ணில்
புரண்டபடி
செத்துக் கிடந்தான்
பதினெட்டு வயதில்.

மிருகங்கள் குதறிய
இடங்களில் எல்லாம்
மனிதக் காலடிகள்
சிவப்பும் கறுப்புமாய்.

பிசாசுகளின்
வாரிசுக்குப் பயந்த
அந்த
கிராம தேவதைகளின்
கருப்பைகள்
ஓரிரு நாட்களில்
தற்கொலை செய்தன.

"வின்" என்ற
அதிகாலை வேதனை
அனைவரது முகத்திலும்
அதிகமாய் அப்பியிருந்தது.

இருட்டு நாய்கள்
மறைந்து போயின
மீண்டும் வரும்
இரவு வேட்டைக்காக.

*விஜயலட்சுமி சேகர்*

---

*பெண் 6:1 - 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணுக்குள்ளே கடலாய்...

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
அலையோர வெண்மணலில்
நாம் பதித்த கால்தடங்கள்
இல்லாத இடங்கள் இல்லை

இற்றைத் திங்கள்
அதேவெண்மணலில்
என் கால்கள் தேடுகின்றன
உன் தடங்களை
ஓ வெனும்
கடல் இரைச்சலில்
உன் குரல் ஒலிப்பதுபோல்
பிரமைகள் எத்தனை எத்தனை
தூரத்தே
கடல் அசைவின் மேல்- நீந்தியிருப்பது போல் கனவு
நீண்ட தூரம் கண்கள் முட்டும்வரை

உன் முகம் தேட
வெள்ளை ஆடையுடன்- நீ
தூரத்தே மிதக்கலாம்
எனும் பிரமை
கடல் நுரை காலை நனைக்க
அலை உன் கைகளாக மாறி- என்
கால்களை இழுப்பதாய் பிரமை

கண்மணி
காணாதவர் பட்டியலில் - நீ
அடங்கியிருந்தாலும்
எனக்குத் தெரியும்- அந்த
கடலுக்கடியில் குந்தியிருந்து
மௌனமாய் அழுகிறாய் என்று.

*விஜயலட்சுமி சேகர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமை

நான் ஆமை நான் ஆமை
நான் எப்பவும் வெளியில் வரமாட்டேன்
எனக்குச் சுதந்திரமாகப் போகவும் வழியில்லை
நான் நடக்கும் போதெல்லாம் பயந்து பயந்துதான் நடப்பேன்
எனக்குப் பக்கத்தில் யாரும் வந்தால் உள்ளே போய் புகுந்து கொள்வேன்.

நான் ஆமை நான் ஆமை
நான் பிறக்கும் போதே
நீ இப்படித்தான்வாழ வேண்டும் என்று
என் உடலைப் பாதுகாக்க
ஓடையும் சேர்த்து வைத்து விட்டார்கள்
நான் என் வீட்டையும் சுமந்து கொண்டு திரிகிறேன்
இது எனக்குப் பெரும் சுமையாக இருக்கிறது
அதைக் கழற்றிவிட்டு நடந்துப் பார்க்க விரும்புகிறேன்
ஆனால் அப்படிச் செய்யலாமா
ஏன் எனக்கு மட்டும் இந்த ஓடு என நினைக்கிறேன்
ஆமாம் அது இல்லாவிட்டால்...

நான் ஆமை
என் ஓடைக் கழற்றக் கூடாது
சுமையென்றாலும் பரவாயில்லை
சுமந்து தான் ஆகவேண்டும்
என் ஆசையெல்லாம் இருக்கட்டும்
நான் வாழ்ந்தால் போதும்
நான் ஆமை நான் ஆமை
நான் பிறக்கும் போதே
நீ இப்படித்தான் வாழ வேண்டும் என்று
என் உடலைப் பாதுகாக்க ஓடையும் சேர்த்து வைத்து விட்டார்கள்.
நான் என் வீட்டையும் சுமந்து கொண்டு திரிகிறேன்.

இது எனக்குப் பெரும் சுமையாக இருக்கிறது
அதைக் கழற்றிவிட்டு நடந்துப் பார்க்க விரும்புகிறேன்.
சீ.... சுமையாக இந்த ஓடு இல்லாவிட்டால்
நான் எவ்வளவு சுதந்திரமாகத் திரிந்திருப்பேன்

*விஜிகலா புவனேந்திரன்*

*வெளிப்படுதல் - 2001*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரிதலின் அவலம்

முத்தங்களாகி கலவியில் மயங்கி
இறுக அணைத்து வியர்வையில் ஒட்டி
கரைந்துபோகும் அடுத்த நிமிடமே
நீ! ஆணாகி விடுகிறாய்.

நான் வேண்டிய நீ முழுமையாகக் காணாது
ஆணாக விஸ்வரூபம் எடுக்கிறாய்

ஒருநாள் மறந்து விடலாம்
இருநாள் மன்னித்து விடலாம்
ஒவ்வொரு நாளும்

பைத்தியமாகிறது உறவு

நீ எழுதுகிறாய் பேசுகிறாய்

இதில் பெண்ணுரிமை வேறு
எதையுமே நீ புரிந்ததில்லை
எப்படி முடிகிறது உங்களால்

என்னால் முடியவில்லை விட்டுவிடு
எல்லாத்தையுமே.

*றஞ்சனி*

*உயிர்நிழல், ஜூலை-ஆக 2000*

## உன் தனிமை

நான் தனியே இருப்பதைப்
பற்றி நீ
கவலைப்படுவதாய், எனக்கு
உன்துணை கட்டாயம் தேவையாக
இருப்பதாய்
என் மேல் நிறையவே
அனுதாபம் இருப்பதாய்
அதை நான்
அறியாமல் இருப்பதாய்
என்பற்றி ஊரில் நிறையவே
கதைகள் இருப்பதாய்
இப்படி நிறையவே பேசினாய்
இவை எனக்குப் புதியவை-
இல்லை நண்பனே!
நான் சுதந்திரமாக இருப்பதற்குக்
காரணமே உன்துணை
இல்லாமல் இருப்பதுதான்
இதை நீ அறிந்திருக்க
ஞாயமில்லை
இனியாவது உன் தனிமைபற்றிப்
பேசு
பயப்படாமல் மனம் திறந்து.

*றஞ்சினி*

*எக்ஸில் - 2004*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா(ழ்...?)ல்..!

உள்ளுக்குள் கசிந்து, ஒழுகி
உள்ளாடை நனைந்துவிட்டது...
உறைசாதனப் பெட்டிக்குள் - முலைப்பால்
"உறைந்து" போயிருந்தது.

ஆறுவாரக் குழந்தை
அஞ்சலிக்காக,
ஆயிரம் கட்டைகளுக்குப்பாலுள்ள
'அடிலேய்ட்டு'க்கு
அஞ்சலில்
அனுப்பவேண்டிய
அந்தப்பால்
அநாதையாய்க் கிடந்தது;
அடுப்பங்கரை உறைசாதனத்தில்...

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்
இயேசு பிறந்தது,
இப்போதல்லவா இவர்களுக்கு
இடிக்குது...!
இரண்டுநாள் அஞ்சல் லீவு!

புடைத்து, கனத்து, வலித்து,
வழிகின்ற பால்...,
வீணாய்ப் போகிறதே...! அந்தோ
பாழாய்ப் போகிறதே...!

பாவமடா குழந்தை, அங்கு
பாட்டியின் மார்புக்குள்
பாலைத் தேடுகிறாள்...!

முலைக் காம்பிற்கும்
முகவாயிற்கும் உள்ள உறவு
முடங்கிப்போய்...
முந்தி நிற்கிறது
தபாற்காரன்... வருகை

காம்பை பிள்ளை
கடித்துக் குடித்துக்
காந்தும் சுகத்தை
வேண்டும் 'டொலர்'களுக்கு
வித்துவிட்ட சனங்கள்...!

பாரதி பொய்யன்...!?
தமிழை மட்டும் பாடி
தப்பிவிட்டான்.
"தமிழனும் இனி மெல்லச் சாவான்"

'இன்டர்நெட்டி'ல் தாயின்
முத்தங்கள் பரிமாறப்படும்...

'டிஜிட்டலி'ல் தாய்ப்பால் விற்பனை
அறிமுகப்படுத்தப்படும்...
பால் கொடுக்கவல்ல
'ரப்பர்' தாய்மார்
விற்கப்படுவர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும்
'கிறிஸ்மஸ்' என்றால்
கழிவு விலையில்!

சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
எதுவுமே புரியவில்லை
ஏதேதோ நடக்குதிங்கே!

*ஜமுனா*

*ஞானம், பிப்ரவரி- 2004*

# சகுனம்

ஐந்து வீடுகளுக்கு ஒரே முற்றம்
பெரிய முற்றம்
முற்றத்தின் நடுவிலே
ஓர் மாமரம்
மாமரக் குடையின் கீழ் - என்
அப்பா சாக்குக் கட்டிலிலே

மாலைச் சூரியனும் களைத்துவிட்ட நேரம்
தூ...தூ... சுடலைக்குருவி
நாயின் ஊளைச் சத்தமும்
ஏதோ துக்கறி என்று...
சொன்னது போலவே
அயல் வீட்டில் மரணம்,
ஆனால்... இப்போ...
சுடலைக்குருவியும் நாயும் காகமும்
களைக்காமல் கத்தும்
நாளாந்தம் துக்குறிதான்.

*சா.ஜெயந்தி*

*மறையாத மறுபாதி, 2ஆம் பதிப்பு - 1993*

## இனியும் நான் தனியாக இல்லை

அமைதி காக்க வந்தவர்கள்
என் வாழ்வின் அமைதியைக் கெடுத்தனரே
புகுந்தனரே என் வீட்டினுள்
பதறியது என் தேகம்
பாய்ந்தனர் என்மீது
பதம் பார்த்தனர் என் உடலை

குரங்கின் கையில் அகப்பட்ட
மாலையாய் ஆனதோ என் உடல்
உடல் முழுக்க நோ
உள்ளத்திலோ பாரம்- ஆனாலும்
என் இருப்பு உறுதியானது

புலம்பியது போதும்
பொங்கி எழு என் மனமே
பொழுது புலர்ந்துள்ளது
அதோ வானில் தெரிகிறது என்
வாழ்விற்கான நம்பிக்கை
நட்சத்திரங்கள்
அவை தரும் ஒளிபோதும்
இருளடித்த என் மனதிற்கு

நாய் கடித்த புண்போல்
வெறும் புண் மட்டும்தான்
மருந்தினை போட்டுவிட்டால்
ஆறிவிடும் இப்புண்ணும்.
என்துயர் துடைக்க இங்கு
ஆயிரம் கரங்கள் உண்டு
என் உறுதியும் எனக்காக உண்டு
இனியும் நான் தனியாக இல்லை

*ஜெயந்தி தளையசிங்கம்*

---

*ஊடறு - 2002*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா வந்துவிடேன்

அரபு நாட்டு அசிங்கங்களைக் கழுவி
நீ அனுப்பும் ரியாலும், டினாரும்
வேண்டாம்
நீ வேண்டும்
உன் மடியில் முகம் புதைத்து
உன் செல்ல மகள் ஆறுதலடைய வேண்டும்
மொட்டாக இருந்த நானிப்போ
மலர்ந்து புத்தம் புது மலராய்...
இப்போதெல்லாம் என்னிதயம்
உன் அரவணைப்புக்காய், அதிகமாய்
ஏங்குகிறது
வந்துவிடேன் தாயே!
அக்காவின் கணவரின்
அந்த இரகசியக்
தொடுகைகள்
அடுத்த வீட்டு கிழட்டு மாமாவின்
அர்த்தமுள்ள பார்வைகள்
இளவட்டங்களின் சின்னச் சின்ன
கண் சிமிட்டல்கள்
எதற்குமே அலட்டிக் கொள்ளாத
என் குடிகார அப்பாவோடு
நானும், இளையதுகளும்
நீ வரத்தாமதிக்கும் ஒவ்வொரு கணமும்
எனக்கு 'அக்கினிப் பரீட்சை'தான்
உன் அழகு ரோஜாவின் இதழ்கள்
பலவந்தமாய் உதிர்க்கப்பட்டு விடலாம்
காம வல்லூறுகளின் பார்வையிலிருந்து நான்...
நீ வரும்போது உன் மகள்
அக்கினிக்கு 'ஆகுதீ' ஆகிவிடுவனோ
என்ற பயம்
அதனால் வந்துவிடேன் அன்னையே
கூழோ, கஞ்சியோ உன்னோடு போதும்.

*லுனுகலை ஹஸீனா புஹார்*

---

*மண்ணிழந்த வேர்கள் - 2003*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னுரைகள்

## பெண் எழுத்து: தொகுப்பும் வாசிப்பும்

ஈழத்துப் பெண்கள் கவிதைத் தொகுப்பான பெயல் மணக்கும் பொழுது 2007 ஏப்ரல் மாதம் தமிழ் நாட்டிலிருந்து வெளியாகிறது. இவ்வருடம் பொங்கலன்று இத்தொகுத்தல் முயற்சியை ஆரம்பித்தேன் என்றார் அதன் தொகுப்பாசிரியை மங்கை. இந்தத் தொகுப்பு முயற்சி நடைபெற்ற நான்கு மாதகாலம் ஈழத்தில் – இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் – யுத்தம் உக்கிரமடைந்த காலகட்டம்; யுத்தத்தின் அகோர விளைவுகள் மக்களின், பெண்களின் வாழ்க்கையை நிலை தடுமாறச் செய்து தலைகீழாகப் புரட்டி விட்ட கால கட்டம்; போரின் வன்முறைகளுக்குள் இருந்து உயிர் தப்ப உடுத்த உடையுடன் தமது வீடுகளையும் வாழ்விடங்களையும் விட்டு, உடைமைகளை விட்டு, மக்கள், பெண்கள், குழந்தைகள் ஓடிக்கொண்டிருக்கும் காலகட்டம்.

தமக்கான காலமும் நேரமும் வெளியும் அற்று, இடப்பெயர்வும் அங்கலாய்ப்பும் அவற்றை எதிர்கொள்வதுமே வாழ்வாகிப்போன இக்கால கட்டத்தில் தமது உடைமைகளைப் போலவே தமது படைப்புகளையும் பாதுகாக்க முடியாத நிலை.

தாம் பின்னிய கூடைகளை, வனைந்த சட்டிபானைகளை, தைத்த துணிகளை, வரைந்த ஓவியங்களை, எழுதிய கவிதைகளைப் பிரிய முடியாமல் பிரிந்து பெண்கள் இடம்பெயர்ந்த, இடம் மாறிய, தொண்ணூறுகளில் இருந்து இடம் பெற்ற பல்வேறு இடப்பெயர்வுகளில் சொல்லப்பட்டும் எழுதப்படாத கதைகளாய் உள்ளன. போரும் சுனாமியும் அலைக்கழித்த வாழ்வில் அழிந்து சிதைந்த வீடுகளையும் வாழ்க்கைகளையும் மீண்டும் கட்டி மீளெழ முயலும் தருணத்தில் திரும்பவும் யுத்தத்தின் தாக்குதல் தற்போது நிகழ்கிறது. தொலைந்து போன ஓவியங்களையும் கதைகளையும் கவிதைகளையும் பல்வேறு முயற்சிகளாலும் மீளக் கண்டு பிடித்தும் அப்படியும் அகப்படாதவற்றை நினைவின் பெட்டகத்துள் இருந்து மீட்டெடுத்தும் வைத்துள்ளனர் ஈழத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் ஓவியைகள், எழுத்தாளிகள் சிலர். கணினியில் பதிந்து, அச்சிட்டு, புகைப்படமாக்கிப் பாதுகாக்கும் ஓரிரு முயற்சிகளும் நிகழ்த்துள்ளன.

எனினும் கூட இவற்றை முழுமையாகத் தேடி முறையாகத் தொகுத்து ஆவணப்படுத்திப் பாதுகாத்துப் பரந்ததும் பொதுவானதுமான தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் என்ற வெளியுள் கொண்டு வந்து நிலைநிறுத்தப் போதுமான அவகாசமும் பாதுகாப்பானதும் நிம்மதியானதுமான சூழலும் இல்லாத நிலை எமக்கு.

இத்தகைய சூழலில் தமிழ் நாட்டிலிருந்து எமது கருத்துக்களையும் உணர்வுகளையும் கற்பனைகளையும் ஆசைகளையும் பகிர்ந்து கொள்ளும் நண்பி மங்கை இத்தொகுதியை வெளிக்கொணர்கிறார்.

சாதாரண காலங்களிலேயே கவனிக்கப்படாமலும் பேணப்படாமலும் போகும் பெண்களின் இலக்கியங்கள் போர்க்காலத்தில் இரட்டிப்பு அபாயங்களுக்கு உள்ளாகின்றன. இதனை அறிந்தது போல, எமது நிலையினையும் அங்கலாப்புகளையும் உணர்ந்து தாங்குவதைப் போல இத்தொகுப்பு முயற்சி எனக்குப் படுகிறது. ஒவ்வொரு செயலுக்கும் அச்செயல் நிகழ்த்தப்படும் காலம் ஒரு அர்த்தத் தளத்தை விரிக்கிறது. எனக்கு இத்தொகுதியின் அர்த்தம் இதுவாகத் தெரிகிறது. மகிழ்வைத் தருகிறது. நன்றிகள் நண்பியே!

■ ■ ■

பெண்களது எழுத்தாக்கங்களைத் தொகுப்பதும், வெளியிடுவதும், பேணுவதும் முக்கியமானதொரு செயல். அதனை நான் விவரிக்க வேண்டியதில்லை. ஆனால் இங்கு இடம்பெறும் ஈழத்துப் பெண்கள் பற்றி ஒரு விடயத்தினை மாத்திரம் குறிப்பிட விரும்புகின்றேன். பெண்களின் எழுத்துக்களைப் பொறுத்த மட்டில் யுத்தம் ஏற்படுத்தும் இரட்டிப்பு அபாயம் என மேலே நான் கூறியதையொட்டி.

சிவரமணி 1991ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்து அரசியல் யுத்த நிகழ்வுகள், சமூக மனோபாவங்கள் ஆகியவற்றின் நெருக்கடியால் தனது 23ஆவது வயதில் தற்கொலை செய்தவர். செல்வியும் அதே ஆண்டில் கடத்தப்பட்டு காணாமற்போய் விட்டார். கிருஷாந்தி நோய்ப்பட்டு இறந்தார். அப்போது அவருக்கு வயது 25. தனது கவிதைகள் பிரசுரமாகும் முன்னரே அவர் இறந்து போனார். எழுதாத என் கவிதையை எழுதுங்களேன் என எழுதிவிட்டு போர்முனையில் இறந்து போன வானதி... என இளம் வயதில் எம்மிடையே மறைந்து போன கவிஞர்களின் பட்டியல் நீளும்.

இவர்கள் எழுத்துக்களைத் தேடி எடுத்துத் தொகுத்தல் அவர்கள் இருப்பையும் குரலையும் எடுத்துக் காட்டும் அவசியமான பணியாகும்.

சிலர் எழுதுவதையே நிறுத்திவிட்டார்கள் ஊர்வசி போல; சன்மார்க்கா போல; சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக



வெளிவந்த இத்தகையோரின் ஆக்கங்களை ஒரு இடத்தில் சேர்த்து குவிமையப்படுத்துவது முக்கியமானது.

பெண்களுடைய எழுத்தாக்கங்களைத் தேர்வதிலும் அவற்றைத் தொகுப்பதிலும் வழக்கமான அழகியல் இலக்கிய அளவுகோல்களைப் பிரயோகிப்பது பற்றியும் சிந்திக்க வேண்டியது அவசியம். பெண்களது எழுத்துக்கள் பல்வேறு தடைகளைத் தாண்டியே வெளியே வரவேண்டியுள்ளது. அவை தம்மளவில் ஒரு பாணியையும் அழகியலையும் உருவாக்கிக் கொள்கின்றன. எழுத்துப் பயிற்சியும் மீண்டும் மீண்டும் உரைத்தெழுதி மெருகேற்றலும் அவசியமென்பது ஒரு புறமிருக்க, ஏற்கெனவே வரையப்பட்டுள்ள அழகியல் அளவுகோல்களை நாம் பயன்படுத்தலாமா என்பது விவாதிக்க வேண்டியது. வெவ்வேறு வகையான எழுத்து முறைகளை இந்தப் படைப்புகளில் அவதானிக்கலாம். இவற்றில் எதை விடுவது? எதை எடுப்பது? எப்படி? என்பவை தனியான விவாதத்திற்குரிய விடங்கள்.

■ ■ ■

தற்காலத்தில் ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் பிரசுரகளம் பொதுவாகவே தமிழ் நாடாகவே உள்ளது. ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தோர் தமிழ் நாட்டிலேயே தமது ஆக்கங்களை வெளியிடுகின்றனர். இவை யாவுமே ஈழத்தில் நூல் சந்தைக்கு வருவதில்லை. இதனால் ஈழத்தில் பரவலாக அறியவும் படுவதில்லை. இது தவிர ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளைத் தொகுத்து வெளியிடும் ஆர்வமும் தமிழ் நாட்டில் அதிகரித்து வருகின்றது. தமிழவன் தொகுத்துள்ள ஈழக் கவிதைகள் போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். பெண்கள் எழுத்துக்களையும் வெளியிடும் ஒரு போக்கையும் காணலாம். சொல்லாத சேதிகள் யாழ்ப்பாணத்தில் 1986இல் பெண்கள் ஆய்வு வட்டத்தினால் வெளியிடப்பட்டது. முதன் முதலில் தமிழில் வெளிவந்த பெண்கள் கவிதைத் தொகுதி இது. இதன் பதிப்புகள் தமிழகத்தில் வெளியிடப்பட்டன. 1987இல் சிலிக்குயில் பதிப்பகம் இதனை மீள் பிரசுரம் செய்தது. 1993இல் வெளியான சிவரமணி கவிதைகள், 1997இல் செல்வியின் கவிதைகள் சிலவற்றுடன் சேர்த்து செல்வி- சிவரமணி கவிதைகள் எனத் தாமரைச் செல்வி பதிப்பக வெளியீடாக வந்தது.

'பறத்தல் அதன் சுதந்திரம்' என்ற பெண்கள் கவிதைத் தொகுதியிலும் ஈழப் பெண்கள் கவிதைகள் சில சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால் இவற்றின் பிரதிகள் ஈழத்தில் பரவலாகவில்லை. இவை ஈழத்துப் பெண்களிடையேயான தொடர்புகளுக்கு வலுச்சேர்ப்பனவாகவோ பெண்கள் செயல்வாதத்திற்கு வலுச்சேர்ப்பனவாகவோ அமையவில்லை என்பதும் துரதிஷ்டவசமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டின் தேவைக்காகவே இவை பிரசுரமாகின்றனவோ என்ற ஐயத்தையும் இத்தகைய பிரசுரங்கள் எழுப்புகின்றன.

அது மட்டுமல்லாது எந்தக் கவிதையை யார் எழுதினார்கள் என்ற நிச்சயமின்றிப் பிரசுரிப்பதும் நிகழ்ந்திருக்கிறது. பறத்தல் அதன் சுதந்திரம் என்ற தொகுப்பில் வாருங்கள் தோழியரே என்று தொடங்கும் சிவரமணியின் கவிதையை சன்மார்க்கா பெயரில் பிரசுரித்திருந்தனர். மதுபாஷினி இத்தவறைச் சுட்டிக்காட்டியதன் பின்னர் எழுந்த விமர்சனங்களைப் பலர் அறிந்திருக்கலாம். சிவரமணியின் அந்தக் கவிதை சொல்லாத சேதிகளில் முதலில் வெளிவந்தது. அந்தத் தொகுதியைத் தேடிப் பார்த்திருக்க வேண்டும். இத்தகைய ஒரு பின்னணியில் நோக்கும்போது தமது கலைச் செயற்பாடுகளைப் பெண்நிலைச் செயல்வாதத்தின் அங்கமாகக் காணும் மங்கை ஈழத்துப் பெண் கவிதைகளைத் தொகுத்திருப்பது ஆறுதலைத் தருகிறது.

■ ■ ■

பெண்களது இலக்கிய மரபை நிறுவுதல் என்பது எப்பொழுதும் சவால்களை எதிர்கொள்வதாகவே இருக்கிறது. பல இடைவெளிகள், கேள்விகள் என்றும் இருந்து கொண்டே உள்ளன.

சங்க இலக்கியம் தொட்டு இன்றுவரை இந்நிலை தொடர்கிறது. சங்கப் பாட்டுகளில் எத்தனை பெண்களுடையவை? சங்கப் புலவர்களில் எத்தனை பேர் பெண்கள் என்ற மயக்கம் இன்னும் முற்றாகத் தீர்ந்து விடவில்லை. பெயர் தொடர்பான மயக்கமே இது. பாடல் புனைந்தவர் ஆணா? பெண்ணா? என்கின்ற மயக்கம் தற்காலம் வரை தொடர்கின்றது. தமயந்தி, அருந்ததி போன்ற பெயர்கள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. ஆண்கள் பெண்கள் பெயரைப் பயன்படுத்துவது இதற்குக் காரணம்.

பெயரை மட்டுமின்றி வேறு தகவல்களையும் சேகரிக்க வேண்டிய கருத்தூன்றிப் பார்க்க வேண்டிய தேவையை இது சுட்டுகிறது. இது மாத்திரமல்ல, ஒருவரே பல பெர்களில் எழுதும் வழக்கமும் உண்டு. விஜயலட்சுமி சேகர், விஜயலட்சுமி கந்தையா, சிநேகா என மூன்று பெயர்களில் எழுதுபவரும் விஜயலட்சுமி என்ற ஒருவர்தான். இதேபோல வேறும் சிலர். இந்த விடயமும் கவனிக்க வேண்டியது.

■ ■ ■

இறுதியாக

'பெயல் மணக்கும் பொழுது- ஈழப் பெண்கள் கவிதை'க்காக இச்சிறு குறிப்பை எழுதும் போது எனது நினைவுகள் 21 வருடங்கள் பின்னோக்கிப்



போகின்றன. பெண்கள் ஆய்வு வட்டத்தின் வாராந்தரக் கலந்துரையாடல் ஒன்றில் 'சொல்லாத சேதிகள்' தொகுப்புப் பற்றிய எண்ணம் கருக்கட்டியது. சர்வமங்களம் கைலாசபதி, சோமேஸ்வரி, யுவனேஸ்வரி (ஊர்வசி), மல்லிகா, செல்வி, சுமங்களா ஆகியோருடன் நானும் இருந்தேன். அப்பொழுது நாங்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில். தொகுப்பை உருவாக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. சொல்லாத சேதிகள் என்ற தலைப்பை உருவாக்கினேன். 1986 மார்ச் மாதம் பெண்கள் தினத்தன்று சொல்லாத சேதிகள் வெளியானதும் அது அக்காலத்தில் ஏற்படுத்திய அதிர்வுகளும் நினைவுக்கு வருகின்றன. பெண்கள் ஆய்வுவட்டம் இப்பொழுது இல்லை. அதன் அங்கத்தவரான சோமேஸ்வரி மாத்திரமே இப்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ளார். ஏனையோர் மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு, சிக்காகோ எனப் பிரிந்து பரந்து விட்டோம். சொல்லாத சேதிகள் கவிஞர்களும் இன்று திக்கிற்கொருவராய் விட்டனர். சிவரமணியும் செல்வியும் உலகிலிருந்தே அகற்றப்பட்டு விட்டனர்.

21 வருடங்களின் முன்னர் யாழ்ப்பாணத்தில், ஒரு பிற்பகற்பொழுதில் ஆறு பெண்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடல், அதன் உத்வேகம் ஆகியவை இந்த நூலுக்கு ஒரு மறைமுக முன்னோடியாக அமைந்ததை எண்ணும்போது பெருமிதம் அடைகிறேன். யுத்தத்தின் துயர் நிலையிலும் இந்த மகிழ்வையும் பெருமிதத்தையும் உருவாக்கிய மங்கை மற்றும் பக்கத்துணையான கீதா, அரசு ஏனையோருக்கும் வாழ்த்துகளும் நன்றியும்.

**சித்திரலேகா மௌனகுரு**
மட்டக்களப்பு, இலங்கை
28.03.07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக் கடன்

ஈழத் தமிழ்ப் பெண்களின் கவிதைகளை நாம் முதன்முதலாக 1980களின் இறுதி ஆண்டுகளில் அறிந்தோம். ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையும் போராட்டமும் தமிழகத்தின் தெருக்கள்வரை நீண்டிருந்த காலம் அது. தமிழ்நாட்டு இளைஞர்களின், இளம் பெண்களின், மனத்தையும் அறிவையும் ஆட்கொண்ட அந்த போராட்டக் காலம் அவர்களது அரசியல் ஓர்மையைக் கட்டமைத்தது. அவர்களில் பலரின் சமுதாய அக்கறையும் கரிசனமும் வளரக் காரணமாயிருந்தது. குறிப்பாக, அச்சமயம் தமிழ்ச் சூழலில் ஆங்காங்கே துளிர் விடத் தொடங்கியிருந்த பெண்ணிய வெளிப்பாடுகளுக்கும் உணர்வுகளுக்கும் ஈழநிகழ்வுகள் உரம் சேர்ந்தன. 'சொல்லாத சேதிகள்' (1986) வெளிவந்த காலத்தில் ஆவலாகப் படிக்கப்பட்டது. பரவலாகப் பேசப்பட்டது. பல பெண்ணிய மேடைகளில் சிவரமணியின் கம்பீரமான, காத்திரமான கவிதைமொழி எடுத்தாளப்பட்டது. அன்று பெண்ணிய உணர்வுகளைப் பொதுவில் வைக்கத் துணிந்த பல பெண்களுக்கு. அத்தொகுதி புதிய மொழியொன்றை ஈன்றளித்தது. அவர்கள் தங்களுக்குரியதாக உணர்ந்த சொற்களை வல்லமையுடன் ஆளும் துணிவை வழங்கியது.

ஆனால், 'சொல்லாத சேதிகள்' காட்டிய புதிய கற்பனையும் கவித்துவமும் தமிழ்நாட்டில் அன்று கவிதைகள் எழுதிக் கொண்டிருந்த பெண்களின் எழுத்துக்களை பாதித்ததாகக் கொள்ள முடியாது. ஈழ நிகழ்வுகளின் வரலாற்று கனத்தைப் பக்குவமாக உணர்ந்து அவற்றைத் தமது சூழலுக்குரிய வகையில் பொருள்படுத்திக் கொள்ள யாரும் முனைந்ததாகத் தெரியவில்லை. அத்தகையதொரு முயற்சியை தேவையானதாகக் கவிஞர்கள் உணர்ந்ததாகவும் அறியமுடியவில்லை. அன்றும் சரி, இன்றும் சரி தமிழ் நாட்டுப் பெண் கவிஞர்களின் படைப்புகளில் துலங்கும் சுயமும், இருப்பும் அவற்றை விரட்டும் அல்லது அமைதி கொள்ளச் செய்யும் தேடல்களம் வரலாறுபாற்பட்டவையாக இருப்பதில்லை. அதிகபட்சமாக,புறவுலகமானது அகவுலக அகழ்வாராய்ச்சிக்கான களமாக, பின்னணியாக மட்டுமே விளங்குகிறது. கவிதை படைக்கும் சுயமும், அச்சுயம் காண விழையும் பெண்ணிய வெளிப்பாடுகளும் பெண்ணுடல், மனம், அவற்றின் அனுபவங்கள் அவ்வுடல் சுவைக்கும் அல்லது வெறுப்புற்று ஒதுக்கும் கிளர்ச்சிகள், மனம் விரும்பும் அல்லது ஒதுக்கும் உணர்வுகள் ஆகியவற்றை



மையமிட்ட கற்பனையையே நமக்குக் காட்டுகின்றன. இந்த கற்பனையை பிடித்து நிறுத்தி வரலாற்றுக்கும் பொது வாழ்வுக்கும் அதனை முகங்கொடுக்கச் செய்யவல்ல பெண்ணிய தர்க்க நியாயங்கள் இங்கு ஆரவார அரசியலாகக் கருதப்படுவதாலும் அத்தகைய நியாயங்களைப் பேசும் பெண்ணிய அமைப்புகள் தமிழ்க் கவிதையுலகை தமது அக்கறைகளுக்கு அந்நியமானவையாக உணர்வதாலும் தமிழ்நாட்டுப் பெண் கவிஞர்களின் படைப்புகள் தன்வயப்பட்ட வெளிப்பாடுகளாக எஞ்சிவிடுகின்றன.

■ ■ ■

ஈழ வரலாற்று அனுபவங்கள்பாற்பட்டு விளைந்துள்ள கவிதைகள் வேறுவகையானவை. தனிமனித ஆசை, மோகம், ஏக்கம், பரிதவிப்பு ஆகியன இக்கவிதைகளில் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ள போதிலும், அவற்றை பேசும் தன்னிலையானது அகவுலகத்துள் தன்னை இழக்க முற்படுவதில்லை. வெளியுலகத்துடனான தனது உறவை மீண்டும் மீண்டும் சோதித்துப் பார்க்கிறது. ஆராய்கிறது. தனது இருப்புக்குரிய வரலாற்று அடையாளத்தை, கற்பனைக்குரிய சமுதாய உள்ளீட்டை திரும்பவும் திரும்பவும் அறிய முயற்சி செய்கிறது. *சொல்லாத சேதிகள்* இத்தகைய தேடலைத் தொடங்கி வைத்ததுடன் வருங்கால கவிஞர்களுக்கு ஆதர்சமாயும் விளங்கியது. இத்தொகுப்பில் இடம் பெற்ற கவிதைகள் காலத்தின் குறியீடுகளாக மட்டுமின்றி ஈழப் பெண் கவிஞர்களுக்குரிய முதுசமாகவும் இன்று உள்ளது.

அந்த முதுசமானது ஈழப்பெண் கவிஞர்களுக்குரிய தாய்வழி சீதனமாக மட்டும் இருக்கவில்லை. தமிழ்ப் பேசும் உலகில் வழங்கும் கவிதைமரபு அறியாத புதியதொரு யாப்பையும் அது தாங்கி வருகிறது. காதலும், கற்பும், உடலழகும் தாம்பத்தியமும், வீட்டுழைப்பும், தாய்மையும் பெண்ணுக் குரித்தான பிரத்யேக அனுபவங்களாகக் கருதப்பட்ட ஒரு பண்பாட்டில், காலம் ஏற்படுத்திய உடைப்புகளை *சொல்லாத சேதிகள்* படம்பிடித்துக் காட்டியது. ஈழ விடுதலைப் போராட்ட காலமும் வெளியும் ஈழப் பெண்களின் இருப்பைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டிருந்த கதையைச் சொன்னதுடன், அக்கதைக்கு புதிய திருப்பங்களை வழங்கி, எதிர்பாராத திசைமார்க்கங்களில் அதை கொண்டு சென்றது. இத்தொகுப்பு சொன்ன கதையில் வெளிப்பட்ட மெய்மை, பெண்மை என்பதற்கான இலக்கணத்தை ஊடறுத்து வெளிப்பட்டது.

அந்த மெய்மையின் பிம்பங்களாக விளங்கிய பெண்களோ...

'உப்பும் புளியுமே' பிரச்சனைகளாயிருந்த வாழ்வினைத் துறந்து போரில் காணாமற் போன, மாய்ந்த பிள்ளைகளின் விதியை முன்னிறுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிதேட பல தாய்மார்கள் வீதிக்கு வந்தார்கள், போராடினார்கள். சரிகை சேலைக்கும், கண்ணிறைந்த காதலர்க்கும் காத்திருந்த காலத்தை வெட்கம் கெட்டதென உணர்ந்த இளம் பெண்கள், புதிய சுதந்திரமான வாழ்வைப் பற்றிக் கனவு காண முற்பட்டார்கள். காதலித்தாலும் கூட அக்காதலில் சமத்துவத்தையும் பொறுப்பையும் அறிய விழைந்த பெண்கள் பறவைகள் போலவும் பூக்களைப் போலவும் இயல்பாய் மனிதர் இருக்கும் நாளில் மட்டுமே நெஞ்சில் நிறைந்த காதலர் தம்மை அணுகலாம் என முழங்கினார்கள். கற்பு எனும் சொல்லால் பழிக்கப்பட்டு, சுயம் மறுக்கப்பட்ட பெண்கள் அக்கற்பினைக் களவாடியதாக நினைத்து ஆணவத்துடன் திரிந்த அந்நிய இராணுவத்தானை மட்டும் ஏசவில்லை; பெண்களை மதித்தறியாத தம் இனத்தானையும் சாடினார்கள். அத்தகைய சாடலினூடாக தமது இருப்பை நிலைநிறுத்திக் கொண்டார்கள்.

*எனக்குப் புரியவில்லை*
*அந்நியன் ஆத்திரத்தில்*
*அடக்குமுறையின் வடிவில் நடந்து கொண்டான்*
*ஆனால்.... இவனோ...*
*காமனாய்... கயவனாய்...*
*இவனை என்ன செய்யலாம்?*

*கற்புக்காய் கண்ணீர் வடிக்க*
*நான் ஒன்றும் கண்ணகியல்ல*
*மானத்தை நினைத்து நிற்க*
*நான் ஒன்றும் இழக்கவில்லை*
*தற்கொலையில் உயிரைமாய்க்க*
*நான் ஒன்றும் கோழையில்லை*

கோபமும் ஆவேசமும் மட்டும் ஈழப் பெண்களுக்கு விட்டுவைக்கப்படவில்லை. போர்க்காலம் தந்த நெருக்கடியில் பறிபோன இடங்கள், காட்சிகள், நினைவுகள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் அவலக் கடமையை ஏற்ற கவிஞர்கள் 'காலைச் செம்மையை ரசிப்பதை' 'மறந்து நேற்று வரையும் அமைதியான காலைப் பொழுது' என்ற கோர உண்மையை உலகுக்கு அறிவிக்க வேண்டியவரானார்கள். பறிபோன காலத்துக்கு சாட்சி சொல்ல நேர்ந்த அவர்களுக்கு, வேறொரு பணியும் காத்திருந்தது. போர் தொலைத்த, பாதித்த, காத்திருக்கச் செய்த உறவுகளின் உன்னதத்தை மட்டுமின்றி அவற்றின் நிலையற்ற தன்மையையும் இவர்கள் எழுத வந்தனர். பிரிவை அற்புதமாகப் பாடும் இவ்வரிகள்.



*உனக்காக நான்*
*தனிமையில் தோய்ந்தவளாய்*
*இங்கே காத்திருக்கிறேன்*
*பழைய பஞ்சாங்கங்களில்*
*புதிதாக*
*நம்பிக்கைத் தருவதாய்*
*ஒரு சொல்லைத் தேடிப்பார்த்தபடி*

*எப்பொழுது என்னால்*
*நீ வசிக்கின்ற அந்த*
*திறந்த வெளிக்கு வரமுடியும்?*
*உன் இருப்பிடம் இங்கிருந்து வெகு தொலைவோ?*
*இரண்டு சிட்டுக் குருவிகளை*
*இங்கே அனுப்பேன்*
*அல்லது*
*இரண்டு வண்ணத்துப் பூச்சிகளையாவது*

ஆற்றாமையால் துயருற்றப் போதிலும், காதலித்த அந்த நாட்களை இன்ப நினைவுகளாக மட்டுமின்றி தற்கால சுயயெழுச்சியின் தேவையை உணர்த்தும் கசப்பான கேள்விகளாகவும் பெண் கவிஞர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அன்று பேசப்பட்ட பேச்சு தன்னுடையதாக இருக்கவில்லை. தனது மௌனத்தையும் தனது காதலன் அவனது பேச்சால் மறைத்திருந்தான். பிறகு, அவன் மௌனம்காத்து மேற்கொண்ட நிராகரிப்பும் அவனையே வெற்றியடையச் செய்தன என்பதை சோகமும் விரக்தியும் மேலிட எழுதிய எழுத்தில் புது சுயவுணர்வையும் ஓர்மையையும் கவிஞர்கள் உணர்ந்தனர். கனல் வாய்ப்பிளந்து புழுதி பறக்கின்ற மைதான வெளி முழுதும் தீ மிதித்து நடக்க வேண்டிய போதிலும் அவ்விதியைப் பாடும் பாங்கையும் கம்பீரத்தையும் பெண்களால் கைக்கொள்ள முடிந்தது.

சித்ரலேகா மௌனகுரு *சொல்லாத சேதிகள்* தொகுப்புக்கு எழுதிய முன்னுரையில் தெரிவித்தது போல, இந்தக் காலக்கட்டத்தில் தமது அந்தஸ்து, சமூகம், தம்மை நோக்கும் முறைமை, பெண் உடலியல் அம்சம் ஒன்றினால் தமது வாழ்க்கை விதி நிர்ணயிக்கப்படுவது ஆகியவற்றைப் பற்றி விமர்சிக்கப் பெண்கள் தலைப்பட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களின் இறுதி ஆண்டுகளிலும் 1990க்குப் பிறகும் நிலைமை வேறுமாதிரியானது. இந்திய இராணுவம் அமைதிகாப்பதன் பெயரில் ஈழ மக்களை, குறிப்பாக பெண்களை, சொல்லொணா துயரத்தில் ஆழ்த்தியது. இலங்கை அரசு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அங்கீகரிக்க மறுத்ததை அடுத்து மேலும் பலர் பேராளிகளாயினர். ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் ஆயுதம் தரிக்க முன்வந்தனர். பெண்கள் புலிப்போராளிகளானார்கள். உப்புக் காற்றின் ஈரத்தில் கண்ணீர்த் துளிகள் மோதிச் செல்ல தணல் பூத்துக் கிடக்கும் மயான வெளிப்பரப்பில் குடியிருக்கச் சபிக்கப்பட்ட உயிர்களை மீட்க அவர்கள் போர் புரியவும் மரணிக்கவும் துணிந்தனர். சிங்கள இராணுவத்தைச் சாக்குழித் தோண்டிப் புதைக்க அவர்கள் சூளுரைத்தனர். உயிர் ஈனும் ஆற்றலுடையோர் சாவை அரவணித்து ஏற்றது காலத்தின் கட்டாயமாகவும் முரணாகவும் அமைந்தது.

மறுபுறமோ விடுதலைப் போராட்டத்தின் தார்மீகப் பண்பில் விரிசல்கள் ஏற்பட்டிருந்ததை யாராலும் அங்கீகரிக்காமல் இருக்க முடியவில்லை. போராளிகளுக்கிடையே சண்டைகள் மலிந்தன. மாறுபட்ட அரசியல் கருத்துடையோரைக் கொல்லவும் பலர் தயங்கவில்லை. சிவரமணி போன்றவர்கள் விடுதலை வீரர்களின் இலட்சியத்தை ஏற்கனவே விமர்சிக்கத் தொடங்கியிருந்தனர். "விலங்கொடு கூடிய விடுதலை மட்டும் வேண்டவே வேண்டாம்" என்று அவர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பிரச்சினைகள் போக, வேறு விதமான பிணக்குகளும் ஈழத்தமிழ்ச் சமுதாயத்தை அலைக்கழித்தன. தமிழ்பேசும் இஸ்லாமியர்களை விடுதலைப் புலிகள் யாழ்பகுதியிலிருந்து நாடு கடத்தியதுடன், அம்மக்கள் பள்ளிவாசலில் கூடியிருந்தபோது அவர்களை நோக்கி சுட்டதில் பலர் உயிரிழந்தனர். தமிழ் பேசும் இஸ்லாமியர் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ வேண்டியவரானார்கள். போராட்டம் உயிர்களையும் மண்ணையும் சேதாரப்படுத்த, ஈழச் சமுதாயம் நாடு கடந்து, புலம் பெயர்ந்து, வேறு வேறு கண்டங்களில் அந்நிய வானங்களின் கீழ் தன் வாழ்க்கையைத் தேடி அலைந்தது. மண்ணை விட்டு நீங்கிய சோகமும் எதிர்காலத்தை எண்ணி பயமும் மாறுபட்ட சூழலில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும் ஈழ மக்களை, குறிப்பாகப், பெண்களை, வெகுவாகவே பாதித்தன.

இந்த அனுபவங்களுக்குரிய உள்ளார்ந்த அவலத்தினூடாக புதிய கவியாளுமைகள் உருக்கொண்டன. பிரிவு, ஆற்றாமை முதலியன நித்திய நிகழ்வுகளாகிப் போன சூழலில், காத்திருப்பு எதற்கு? என்று கேட்டு உதயத்திற்கு சிறிது நேரம்தான் உண்டு என்று எச்சரித்த பெண்கள் காதலில் இணைய தமது துணைகளை அழைத்தனர். விடுதலைப் போரில் உயிர் மறித்த வீர இளைஞர்களின் விதியை அறிய தாய்மார்கள் வீதிகளில் இறங்கிய காலம் போய், இரத்தம் உறைந்துப் போன தம்மண்ணை மீட்க இனியும் புதல்வர்களை இழக்கத் தாம் தயாராக இல்லை என முழங்க வந்தனர். புதை குழியும் மணல் மேடும் என் புதல்வர்களின் சடலங்களால் நிரம்பிய பிறகு இன்னுமா தாய் நிலம் பிள்ளைகளைக் கேட்கிறது? எனச் சோர்ந்தனர். நாடு கடந்து வாழப்போன பெண்கள் மண்ணையிழந்த சோகத்தை வார்த்தைகளில் வடித்த அதே வேளையில் அம்மண்ணின் பத்தாம்பசலித்தனங்களும் ஆணாதிக்க மனநிலையும் தம்மைத் தொடர்ந்து துரத்துவதை அங்கலாய்த்தனர். பல்வேறு இழப்புகளுக்கிடையே ஆணாதிக்கம் தன்னை பத்திரப்படுத்தி வைத்திருக்கும் சூட்சமத்தை எள்ளலுடன் எதிர்கொள்ள முனைந்தனர். வரதட்சணையாகட்டும் கட்டாயக் கலியாணமாகட்டும் - இவற்றை விரக்திச் சிரிப்புடன் அணுக வந்தனர். அதே நேரம், அந்நிய சூழல் ஏற்படுத்திக் கொடுத்த புதிய சுதந்திரத்தையும் ஏற்றனர். தமக்கேற்ற காதலையும் காமத்தையும் உரிமையுடன் வரித்துக் கொண்டனர்.



ஆனாலும் எல்லா வெளிப்பாடுகளும் சோகமயமாகவோ தனி மனித அனுபவங்களாகவோ மட்டும் அறியப்படவில்லை என்பதையும் இங்கு நாம் பதிவு செய்ய வேண்டும். வரலாறு விடுத்த சவால்களுக்கு ஈடுகொடுக்கவல்ல காத்திரமான சொற்களையும் வல்லமைவாய்ந்த தொனியையும் கவிஞர்கள் கையாண்டனர். போர் சாதித்த நாசத்தை, போராட்ட அரசியல் காவு வாங்கிய உயிர்களுக்கு ஏற்பட்ட கதியை காண்போரைத் திக்குமுக்காடச் செய்யும் கவிதைக் காட்சிகளாக அவர்கள் தீட்டினர். ஈழத்தின் ரம்மியமான நீர் நிலைகளில் தவம் புரியும் கொக்குகளும் இன்ன பிற பறவைகளும் அவற்றிலும் அதிகமாக விளைந்து கிடந்த... ஊறிப்போன பிணங்களின் வாசனை முகர்ந்து, சுவை அறிந்து கொழுத்துக் கிடக்க, கபறக்கொய்யாக்களோ மனிதக் கபாலங்களை ஆளுக்கு ஐந்து ஆறாய் பங்கிட்டுக் கொண்டு... தம் நாவால் மனிதக் கட்குழிகளை நீவி கறுத்த விழிகளைத் திராட்சைகளாய் உறிஞ்சிக் கோயில் தெப்பங்களாய் மிதக்கும் கொடுங்கனவை பெண் கவிஞர்கள் தயவுதாட்சணியமின்றி பதிவு செய்தனர்.

வன்மமே வாழ்வாகிவிட்ட சூழலில் மானுட அடையாளத்தைச் சுமையென உணர்ந்தவர் 'மரம், மண், கல்' என சமைந்து போவதை ஏற்றனர். தமக்குப் படிப்பிக்கப்பட்ட இறைவரிகளும், சைவம் போற்றி வந்த இறை அனுபவங்களும் இரக்கமற்ற தற்காலச் சூழலில் பொருள்படாமற் போனதைக் குறிப்பிட்டனர். புல்லாய் புழுவாய் நாய் நரியென எல்லா மாதிரியும் மாறிமாறிப் போனாலும் அருளற்ற வாழ்வே கதியாகிவிட்டதைச் சுட்டினர். பல வேடங்கள் தரித்தாலும் ஒவ்வொரு சங்காரத்தின் முடிவிலும்... அவர்கள், வெல்லும் அநியாயத்தையும் தாங்கள் கைவிடப்பட்டவர்களாய் ஆனதையும் பாடினர். இத்தகைய பாடல் வரிகளில் மரபும் யாப்பும் தருவிக்கப்பட்டன. ஆனால் அவற்றின் போதாமையே பொருளானது. மரபு என்ன செய்யும் காலம் காட்டிய விபரீதங்களுக்கு முன்னால் என்று பெருமூச்செறிந்தே பெண்கள் எழுதினர். கோலமிடுவது அம்மா வழியாய் வந்த பழக்கம். ஆனாலும் இதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவாக கைக்கொள்ள முடியாதபடிக்கு கோலமிட வேண்டிய முற்றத்தில் புற்று புரையோடிக் கிடப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. அதை அகற்றினாலும் காலம் வேறு கோலங்களுக்கே மண்ணைப் பண்படுத்தியிருந்ததுதான் உண்மையாக ஒளிர்ந்தது- கோலம் போட நினைத்தவளின் குருதியே கோலமாகிப்போக, மரபு பிறழ்ந்த நிகழ்வே சாத்தியப்பட்டது.

பொதுவாகவே, பெண்களுடைய கவிதைகள் தமக்குரிய யாப்பை நோக்கிய தேடல்களாகவே இருந்துள்ளன. இக்கூற்று ஈழக்கவிஞர்களுக்கு மட்டுமின்றி பெண்கவிஞர்கள் அனைவருக்குமே பொருந்தக்கூடியதுதான். ஆனால் ஈழப் பெண் கவிஞர்களைப் பொருத்தவரை, அவர்களுக்கு வாய்த்துள்ள பாரம்பரிய யாப்பின் ஆணாதிக்க பண்புகளைப் புறந்தள்ளுவதென்பது ஒரு புறமிருக்க, அவர்கள் தேடிய புதிய யாப்புக்கு ஆதாரமாய் விளங்கவல்ல உறவு நிலைகளையும் பண்பாட்டு வாழ்வையும் மிகவும் இக்கட்டான சூழல்களில் அவர்கள் அமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

*சொல்லாத சேதிகள்* தொகுப்பிலே தொடங்கிய இந்தப் புது வாழ்வை நோக்கிய பயணம், தமிழ்ச் சமுதாயத்தில் காதலுக்கும் பெண்மைக்கும் கூறப்பட்டுள்ள வியாக்கியானங்களை மறுத்தும் மாற்றியும் எழுதிச் சென்றுள்ளது. சொல்லாத செய்திகளின் தளம் இன்று விரிந்துள்ளது. தீரா மோகத்தையும், மோகம் தீர்ந்து களைத்த உறவில் எஞ்சியுள்ள இடைவெளியையும் பாடி அதே நேரத்தில் அரசியல், வரலாறு, உலக நிகழ்வுகள் முதலியவற்றையும் தமக்குரிய அக்கறைகளாக, தமது பாலின அடையாளத்துடன் பிரத்யேக உறவு கொண்டவையாக பெண்கள் உணர்ந்து வருகின்றனர். புற உலகில் மன்னம்பேரிகளுக்கும் கோணேஸ்வரிகளுக்கும் நிகழ்ந்த கொடூரம் ஒவ்வொரு பெண்ணுடலின் மீதும் ஆழத்திணிக்கப்படும் அன்றாட நிகழ்வாக உள்ளதை எடுத்துரைக்க முற்பட்டுள்ளனர். பெண்மையை வரையறுக்கும் மாதாந்திர ரத்தப்போக்கும் வாடையும் வரலாற்றின் மீது படிந்துள்ள குருதிக்கறையை நினைவூட்டும் விபரீதத்தைக் கவிதையாக்கப் புறப்பட்டுள்ளனர்.

*மாதம் தவறாமல் இரத்தத்தைப் பார்த்து பழக்கப்பட்டிருந்தும்*
*குழந்தை விரலை அறுத்துக் கொண்டு*
*அலறி வருகையில்*
*நான் இன்னும் அதிர்ச்சியுற்றுப் பதறுகின்றேன்.*
*வன்மத்தின் இரத்த வாடை*
*வேட்டையின் இரத்த நெடி*



*வெறிபிடித்த தெருக்களில் உறையும் அதே இரத்தம்*
*கல்லறைகளில் கசிந்து காய்த்திருக்கும் அதே இரத்தம்*
*சாவின் தடயமாய்*
*என்னைப் பின்தொடர்ந்து கொண்டே இருக்கிறது.*

இவ்வாறு, அகமும் புறமும் ஒன்றை மற்றொன்று ஊடுருவியுள்ள நிலையைப் பதிவு செய்து, அரசியலுக்கு நூதன பொருள் வழங்கி வருகின்றனர். தனிமனித வாழ்க்கையை அரசியல்படுத்தியதுடன், அரசியல் முழக்கங்களிலும் சொல்லாடல்களிலும் காணாமல் போய்விடும் அன்றாட வாழ்வை, அதன் நுணுக்கங்களை, அவற்றினூடாகத் துலங்கும் அரையும்குறையுமான மானுடத்தைப் பரிவுடன் மீட்டெடுத்துள்ளனர். தொலைக்காட்சி காட்டும் ஈராக் நாட்டு கயமைகளைக் கண்டு துணுக்குறும் கண்கள் கரும் பிணம் மிதக்கும் சிறு குட்டைகளாய் கலங்க, மேசை மீதுள்ள கோப்பையும் பாண் துண்டு கிடந்த தட்டும் காலியாய்க் கிடக்கும் விசித்திர முரணை குறித்துப் பேசும் அவசியத்தை பெண்கள் ஏற்றுள்ளனர். இத்தகைய ஏற்றலில் சுயபச்சாதாபமும் இல்லை, இயலாமையும் இதில் தொழிற்படுவதில்லை. மாறாக, தாம் வாழ்ந்த வரலாறு பிறயிடங்களில் தொடரும் அவலத்தையும் அதைக் காண நேர்ந்த தமது கையறு நிலையையும் மிக திறம்பட வெளிப்படுத்தத் துணிந்துள்ளனர். தமது வாழ்வின் பொருளைத் தமது அனுபவங்களினூடாக மட்டுமின்றி பிற வாழ்க்கைகளிலும் அவை ஈனும் பாடங்களிலும் இவர்கள் இன்று தேடுகின்றனர்.

இவ்வாறாக பல நிலைகளில் தொடரும் ஈழப் பெண்களின் கவிதைகளை தமிழ்பேசும் பரந்த உலகத்துக்குரியதாய் ஆக்கும் இம்முயற்சி ஒரு வகையில் நன்றி கடன் செலுத்துவது போன்றதாகும். தமிழ் பேசும் மக்களின் நிதர்சனங்களை சலனப்படுத்தி, பெண்மை, பெண் ஒழுக்கம், கட்டுப்பாடு முதலியன குறித்து நமது மரபுகள் சலிக்காமல் முழங்கும் முடிவந்த முடிவுகளாகிவிட்ட செய்திகளைப் புரட்டிப் போட்டு நமது மனச்சாட்சிகளை தொடர்ந்து செயல்பட வைக்கும் ஈழ வரலாற்றுக்கும், குறிப்பாக அவ்வரலாறு கண்டுள்ள பெண்ணிய சொல்லுக்கும் வாக்கிற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

**வ.கீதா**
08.03.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் பதிக்கும் சுவடுகள்

சமீபத்தில் வெளிவந்துள்ள பெண்ணியாவின் கவிதைத் தொகுப்பிற்குப் பின்னுரை எழுதியுள்ள சக கவிஞர் அனார், "ஏன் எல்லாப் பெண்களின் குரல்களிலும் ஒரே விதமான கனமும் நெகிழ்வும் பொங்கி வருகின்றது!" என்று வியந்துள்ளார். பெண் என்ற தன்னடையாளம் பொதுமைக் கூறாக்கப்படும் காலம் இது. இக்கருத்தாடல்கள் பல கோணங்களில் இருந்து கேள்வி கேட்கப்படும் காலமும் இதுவாகும். இருந்தாலும் அழியாத கேள்வியாக 'பெண்' என்ற அடையாளம் இயங்குவதையும் மறுக்க இயலவில்லை. அதே நேரம் 'பறத்தல்ஃ அதன் சுதந்திரம்' தொகுப்பிற்கு முன்னுரை வழங்கிய வ.கீதா, "பெண்விடுதலை என்பது தனிப்பட்ட சுயத்துக்கானது மட்டுமல்ல. உலகத்துடன் புது உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும்தான்" எனக் குறிப்பிடுவார். பெண் இருப்பின் வெளிப்பாடாக, உலகத்துடன் ஏற்படும் புதுப்புது ஊடாட்டங்களைப் பதிவு செய்வதும் செழுமையான வகையில் இணையும் ரசவாதமும் கடந்த இருபது ஆண்டுகால ஈழப் பெண் கவிஞர்களின் எழுத்துக்களில் சாத்தியமாகி உள்ளது.

சொல்லாத சேதிகள் தொகுப்பை யாழ்ப்பாணப் பெண்கள் ஆய்வு வட்டம் 1986இல் வெளியிட்டபோது சித்திரலேகா மௌனகுரு பெண் கவிதைகளை இனம் கண்டார். ஆணியச் சிந்தனை, தேசிய இன அடையாளத்தை உருவாக்குவதில் தொழிற்பட்ட நெருடலான தன்மைகள், பெண் மொழி போன்ற பலகுரல்களை உள்ளடக்கிய தொகுதியாக அது வெளிவந்தது. கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில் மூன்றாம் உலகக் கவிதைகள் தொடர்பான ஈர்ப்பும் வளரத் தொடங்கியது. அந்த வகையில் நுங்கும் நுரையுமாக வருகின்ற புது வெள்ளத்தைப் பெயரிட்டு அழைத்த சித்திரலேகாவின் தீட்சண்யத்தைக் கண்டு வியக்கிறேன். அதன் தொடர்ச்சி அறுபடாமல் இன்று வரை தொடர்கிறது. அடுக்களைவாதம் தொட்டு, படுக்கையறை அரசியல் வரை உலகெங்கிலும் பரவியபோதும் தொடரும் சாதீய, பாலின அரசியலைப் பதிவு செய்யும் வகையில் தொகுப்புகள், மலர்கள் எனப் பெண்களின் குரல்கள் தொடர்கின்றன. அந்த வகையில், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மேலெழும்பும் விவாதங்களுக்கு முகம் கொடுக்கும் விதமாக, ஒரு வரலாற்று கணமாக ஈழப் பெண் கவிஞர்கள் வெளிப்பாடு உருப்பெற்று வந்துள்ளது. இலக்கியத்தில் இயக்கங்கள் எப்போதேனும் மட்டுமே தோன்றுபவை.பல நேரங்களில் உருவான படைப்புகளை ஒருசேர வைக்கும்போது வெளிப்படும் ஒத்த பண்புநலன்களின் அடிப்படையில் வரையறை செய்யப்படுபவையாகவே இலக்கிய இயக்கங்களை அணுக வேண்டியுள்ளது. அந்த வகையில் ஈழப் பெண்கவிஞர்களின் படைப்புகளை ஒரு குறிப்பிட்ட காலச் சூழலில் உருவான இலக்கிய இயக்கம் எனக் குறிப்பிடலாம். தமிழகத்தில் தொண்ணூறுகளில் வெளிவந்த, பலப் பல பெண் குரல்களின் தொகுதிக்கும், ஈழப் பெண் கவிஞர்களின் தொகுப்புக்குமான முக்கிய வேறுபாடாக இதனைக் காணலாம்.

இலக்கிய இயக்கம் என்ற தொடர் கிளப்பும் ஒரு குறிப்பிட்ட சிந்தனைப் போக்கு அல்லது வெளிப்பாட்டு முறைமை போன்றவற்றை, ஈழப்பெண் கவிஞர்களைப் பொருத்தவரை மறுவரையறை செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் இதில் தெளிவான ஒத்த தன்மைகள், உள்ளடக்க ரீதியாகவோ, உருவ ரீதியாகவோ காணமுடியாது. ஆனால் ஊடாடும் சரடுகள் இவற்றை ஒன்றிணைக்கின்றன.

"யுத்த கால இரவுகளின் நெருக்குதலில்" "வளர்ந்தவர்" ஆகிப்போகும் குழந்தைகள் குறித்த அக்கறையில் தொடங்கி, "முரட்டுத்தனமான/ கதவுத் தட்டல்", "நேற்றுவரையும் அமைதியான காலைப் பொழுது" இருந்த வாழ்வை மாற்றிய கொடுமை, "சாவும் இரகசியமானது" என்ற புரிதல், சுகமான கும்மிருட்டு இருள் சூழ இருப்பதால் விடிதல் தேவை இல்லாமல் போகும் நிலைமை, ஒரே ஒரு ஒலிபெருக்கி அறிவிப்பில் ஒரு இனம் முழுதும் 'அந்நியராகிப்' போன கொடுமை, கடலில் சமாதியடைந்த உயிருக்காக "ஏதுமற்ற கல்லறையில்/ ஒரு கடல் நீரூற்றி நிரப்பிடவோ" என்ற அங்கலாய்ப்பு ஆகியவை ஈழத்தின் இன்றைய வரலாற்றுக்கான எதிர்வினைகள். புகலிடத்தில் வாழ்வைத் தேடிச் செல்லும்போது அமுக்கு மூட்டைகளாகச் சாதியம், பெண்ணடிமைத்தனம் ஆகியவை தொடரும் அவலம், அவற்றுக்கெதிரான விமரிசனக் குரல் ஆகியவை அழுத்தமாக வெளிப்படுகின்றன. நிச்சயமற்ற நாளைகளுக்காக, இப்பொழுதே முத்தமிடு என்ற அவசரங்கள், "உன்னை நினையாதிருக்க" ஆயிரம் காரணங்கள் இருப்பதை நினைவூட்டுபவையாக மாறியுள்ளதைக் காண்கிறோம். கொட்டும் மழையில் அசையாது நிற்கும் போராளிப் பெண், தன்னைப் பெற்ற தாய்க்கும், தான் பெற்ற மகவிற்கும் தமது போராட்டச் சூழலை விளக்கும் கவிதைக் கடிதங்கள், "எழுதாத என் கவிதையை எழுதுங்களேன்" என்ற காப்டன் வானதி நினைவில் எழுதும் பல குரல்கள் என வேறொரு களம் இக்கவிதைகளில் விரிகிறது. மண்ணுக்கான போராட்டத்தில் வாழ்வைப் பணயம் வைக்கும் வாழ்க்கைப் பதிவுகள் இக் கவிதைகளில் பலவிதமான தொனிகளில் இடம்பெறுகின்றன. இயேசு கிறிஸ்துவை மீண்டும் வரச்சொல்லும் கவிதை அவரை மறக்காமல் அடையாள அட்டை எடுத்து.வரச் சொல்கிறது; "எங்கேயாவது/ எதையாவது/ புதைத்தலே இவர்களுக்குத் தெரிந்தவை" என்று வாதப் பிரதிவாதங்கள் குறித்து எள்ளலாகக் குறிப்பிடுகிறது; "காற்றோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகோர்த்து/ ஊர்க்கோலம் போகின்ற/ மகரந்தத் துகள்களிடமிருந்தாவது/ அந்நியமண்ணில்/ அடைக்கலம்தேடும்/ எங்கள்/ மூக்குகளுக்கும் கண்களுக்கும்/ விடுதலை வேண்டுமென'' இயற்கையைக் கோருகிறது. நிலக் கண்ணிவெடி அகற்றும் செஞ்சிலுவைத் தொண்டர் "வன்னிப் பெருநிலம் தடவி நச்சுக் கிழங்குகள் தோண்டுகிறான்!'' அக்குழிகளில் "நாமினி எதை நடப்போகிறோம்!'' என அங்கலாய்க்கிறது.

இரு இனங்களுக்கு இடையிலானத் துவந்த யுத்தம் ஆட்டிப் படைக்கும் சூழலில் வெளிவந்துள்ள கவிதைகளில் இரண்டு மட்டுமே சிங்களவரை நேரடியாகக் குறிக்கின்றன. கோணேசுவரிகள் கவிதை

*"சிங்கள சகோதரிகளே!*

*உங்கள் யோனிகளுக்கு*

*இப்போது வேலையில்லை''* என்று

பெண் அடையாளத்தையும், இன அடையாளத்தையும் ஒருசேர முன்னிறுத்துகிறது. முதன்முதலில் தான் வீழ்த்திய சிங்களப் படைவீரன் தனது அண்ணனைப் போலவே முதல் சம்பளம் வாங்கித் தன் சகோதரிக்குக் காற்சங்கிலி வாங்க நினைத்திருப்பானோ என்று அங்கலாய்க்கிறது பிறிதொரு குரல். இனவெறுப்பாக வெளிப்படாத இக்குரல்களில் மிஞ்சி இருப்பது தாங்கவொண்ணா பாரம் மட்டுமே.

பழகிய நிலப்பகுதிகளில் நடக்கும் கொடுமைகளுக்கு சாட்சியங்களாய் இருப்பதை அவற்றின் குரலாக வெளிப்படுத்தும் கவிதைகள் மனதை உலுக்குகின்றன. ஆழியாளின் 'சின்னப்பாலம்' நடப்பனவற்றுக்கு சாட்சியமாய் நிற்கிறது. அன்றாடம் கண்ட நபர்களின் உருக்குலைந்த உடல்களை அடையாளம் காட்ட இயலாது தவிக்கிறது. தைகிரீஸ் நதிக்கரையில் கைகளை உயர்த்தி நின்ற மெசப்பத்தேமியாவின் "சுருங்கிய வெறுங்கைகளே/ வெம்பி அல்லாடிச் சொல்லப்/ போதுமானதாய் இருந்தன/ வேண்டாம் போர்என்று'' என்கிறது ஆழியாளின் பிறிதொரு கவிதை. அவர் புலம்பெயர்ந்து வாழும் ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களான 'அபோ'க்களைப் பற்றிய அக்கறையும் குற்றவுணர்வும் ஆஸ்திரேலிய சாலைகளைக் கடக்கும்போது துளைக்கும் பார்வைகள் மன்னம்பேரி, கோணேஸ்வரிகளின் கதியை நினைவுறுத்தியபடி வீடு திரும்பியபோது "அருகே கணவன்/ மூச்சு ஆறிக்'' கிடப்பதில் அந்த 'பாஷையைப்' புரிந்து கொண்ட தன்மையும் ஆழியாளின் கவிதைகளில் இடம்பெறுகின்றன. இத்தொகுப்பில் இடம்பெறாத அவரது சில கவிதைகளில் புகலிடத்தின் முதற்பொருள், கருப்பொருள் ஆகிய அறிய முடியாத வாழ்வு பதிவாகியுள்ளது.

போரும், அவலமும் மிக்க காலத்தில் வெளிவரும் கவிதைகள் என்பதால், 'புறம்' தவிர வேறெதுவும் பேசாத கவிதைகள் அல்ல இவை. புறத்தின் அகத்தையும் அகத்தின் புறத்தையும் புரட்டிப் போடுகின்றன. சூரியா



பெண்கள் அபிவிருத்தி மையம் 1999இல் வெளியிட்ட 'உயிர்வெளி' பெண்களது காதல் கவிதைகள் தொகுப்பு. பஹிமா ஜஹான் "யாருக்கும் யாருமற்ற சாபம் பிடித்த வாழ்வைச்/ சபித்தவளாக நான் வாழ்ந்த போதும்/ எனது தேசம் எனக்கு வேண்டும்!/ நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேள்வி கேட்கிறார்; "என்னை இழந்து/ என் நாமம் கெட்டு/ சதுராடிச்/ சுழல்வேன்/ துயர் மறுப்பேன்'' என்று வேட்கையின் உச்சத்தை வெளிப்படுத்துகிறார் சங்கரி; "அவனில்லாத வாழ்வு நெடுகிலும்/ சுமந்தலைய'' தன்னிடம் உள்ள பறிக்கப்பட்ட கனவுகளையும் இசையையும் குறிப்பிடுகிறார் அனார்; "எனது அவள் தோழி மட்டுமல்ல...'' என்று அறிவிக்கிறார் நஜீபா... இப்படியாகக் காதலும் காதல் சார் படிமங்களும் சிந்தனைகளும் தீவிர விசாரணைகளுக்கு ஆட்படுத்தப்படுகின்றன.

இக்கவிதைகளில் சில, கவிதை எழுதுவது பற்றியும் பேசுகின்றன. "நான் பாடல்/ எனக்கு கவிதை முகம்'' என்று அனார் பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்; ஏன் கவிதை என்று, கும்மிருட்டை விரும்பும் ஆதிரா கேள்வி எழுப்புகிறார்; "என்னிடம்/ ஒரு துண்டுப் பிரசுரத்தைப் போல/ நம்பிக்கையும் முடிவும் சொல்லத்தக்க/ வார்த்தைகள் இல்லை'' என்பதை வலியோடு தெரிவிக்கிறார் சிவரமணி.

"இருந்தால் போல்/ கருத்தரிக்கும்/... என்னுடைய செல்லக்குழந்தை/ கவிதை'' என்று நிலா குறிப்பிடுகிறார்; மௌனங்களுக்கான "தகுதியை/ அவை கேட்கின்றன'' என்று குறிப்பிடும் ரஞ்சினி, 'கவிதை' என்று தலைப்பிட்டதன் மூலம் மௌனங்களுக்கு கவிதை என்று மறுபெயர் இடுகிறார்;

'சொல்லாத சேதிகள்' தொகுப்பு பெண்களது வாழ்வனுபவம், புதிய கேள்விகளைக் கிளப்பத் தொடங்கிய கணத்தைப் பதிவு செய்யும்விதமாகத் தோன்றியது. புலத்திலிருந்து வந்த 'மறையாத மறுபாதி' தொகுதியின் பதிப்பாசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> உண்மை எழுதப் புறப்பட்ட பலரும் தாம் யார் என்பதைப் பரம ரகசியமாக வாசகர்களிடம் விடுவதும் உண்மையைத் தேடுவோர் மத்தியில் எழுதுபவர் யார் என்ற தேடல் அநாவசியமாய் போவதும் இக் காலகட்டத்தின் முக்கிய அம்சம்.
>
> எனினும் எம்மால் முடிந்தவரையில் இவை பெண்களின் கவிதைகள்தான் என ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

அத்தொகுப்பு முன்னுரையில் லக்ஷ்மி,

> இன்றைய ஈழப் போராட்டத்தில் பெண்களின் பங்கு மிகவும் பலமானதாக இருந்தாலும்கூட இப்போராட்டம் "பெடியள்'' போராட்டமாகத்தான் கருதப்படுகிறது. இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எத்தனையோ ஆயிரக் கணக்கான பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதையோ, உண்மையைச் சொன்னால் உயிர்போகுமென்று தெரிந்த சூழலிலும் உண்மையைச் சொல்லப் புறப்பட்ட ராஜினியையோ, அன்னை பூரணியையோ, அன்னையர் முன்னணியின் போராட்டத்தையோ போராட்டம் பற்றிப் பேசுபவர்கள் கவனத்திற் கொள்வதில்லை. இவைகள் யாவுமே பெண்கள் என்பதால் வந்த உதாசீனம்தான் (1993, ப.7)

என்று குறிப்பிடுகிறார். அவருடைய கணிப்பு சரி என்பதை நிரூபிப்பது போல 2000த்தில் "இலக்கியத் தோட்டம்; ஈழத்து நவீன இலக்கியம்" என்ற தலைப்பில் குறுநூல் ஒன்றை எழுதிய செல்லையா யோகராஜா ".... என நீண்டதொரு பட்டியலைத் தரமுடியுமே தவிர இவர்கள் பலரும் தொடர்ந்து அதிகம் எழுதாமை காரணமாக இவர்களுள் குறிப்பிட்டதொரு கவிஞரை இனம் காண முடியாதுள்ளது" எனப் பெண் படைப்பாளிகள் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆனால் 2000-2005க்கு இடைப்பட்ட காலத்திய அவரது கட்டுரைகள் சற்றே மாறுபட்ட பார்வையைத் தரத் தொடங்கியுள்ளன எனலாம். 1998இல் வெளிவந்த 'இன்னுமொரு காலடி' மலரில் பின்காலனியச் சட்டகமும், சமகால ஈழத் தமிழ்க் கவிதையும் என்ற தலைப்பிலான ஆங்கிலக் கட்டுரை எழுதியுள்ள செல்வா கனகநாயகம் பெண் எழுத்து குறித்த எந்தச் சிறப்பானக் குறிப்பையும் தரவில்லை.

தமிழகத்தில் நடந்தது போல பெண் கவிஞர்களது எழுத்துக்களைக் கேவலமாக விமரிசித்த தன்மை ஈழத்தில் இல்லை என்பதைக் குறித்து ஆசுவாசப்படலாம். ஆனால் புதியதொரு அலையாகக் கிளம்பியுள்ள பெண் கவிஞர்களின் வீச்சைப் போதுமான முறையில் ஈழ/தமிழக விமரிசகர்கள் அங்கீகரிக்கத்தாக கூற முடியவில்லை.

ஆனால் எழுதியவர்கள்/எழுதிக் கொண்டிருப்பவர்கள்/ எழுத முனைந்தவர்கள், குறிப்பாகப் பெண் எழுத்தாளர்கள் இவற்றை நோக்கி எழுதுவதில்லை.

தனது கடைசி நாட்குறிப்பில், "ஓ! வாழ்க்கைதான் எத்தனை இனிமையானது" என எழுதிய தோழி பாரதி குறிப்பிடுவது போல் "நான் எனது அமைதிக்காக எழுதுகிறேன்" என்ற தன்மையே இப்பெண் கவிஞர்களில் காணக்கிடைக்கிறது. அத்தகைய கணத்தை வாசகர் மனதில் இக்கவிதைகளில் சிலவேனும் ஏற்படுத்தும். தமது இருப்பின் அடையாளமாக இக் கவிதைகளைத் தந்து, நமது இருப்பிற்கான அர்த்தத்தைத் தேடவைக்கும் எழுத்துகள் இவை.

**அ.மங்கை**

10.04.2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புலி, அருட்கவிதா, அனார்,
ஆகர்ஷியா, ஆதிரா,
ஆதிலட்சுமி சிவகுமார்,
ஆழியாள், ஆமிரபாலி,
இளந்தா,
உமையாள், உலகமங்கை,
ஊர்வசி, ஔவை,
கல்யாணி, கோ.சி.கலைக்கதிர்,
கற்பகம்- யசோதரா,
கனிமொழி, அ.காந்தா ,
கிருஷாந்தி ரட்ணராஜா, குறவஞ்சி,
கோசல்யா சொர்ணலிங்கம்,
சங்கரி, தே.சங்கீதா,
சத்தியா, சந்திரவதனா,
சந்திரா இரவீந்திரன்,
சன்மார்க்கா, சமர்விழி,
சிரஞ்சீவி, சிவரமணி,
சுகந்தினி சுதர்சன்,
சுதாமதி, கே.சுதாஜினி,
சுமதி ரூபன், சுல்பிகா,
சூரியநிலா, செந்தணல்,
செவ்வதனி, செல்வி,
தமிழவள், தயாமதி,
தயாநிதி, தர்மினி,
தாட்சாயணி, தானியா, தில்லை,
துர்க்கா, தூயவள்,
நவஜோதி, நளாயினி,
நஜீபா, நாமகள்,
நிருபா, நிரோசா, நிலா,
பர்வின் (நாச்சியார் தீவு),
பஹீமா ஜஹான்

மாற்று

பாமதி, பாமினி,
மேஜர் பாரதி,
பானுபாரதி,
பிரதீபா தில்லைநாதன்,
பிரியதர்சினி,
மசூறா. ஏ. மஜிட், மல்லிகா,
மலைமகள், மஸாஹிரா பாயிஸ்
மீரா பாலகணேசன்,
முகைசிரா முகைடீன்,
மைத்ரேயி, மைதிலி,
யாழ் ஆதிரை, யாழினி,
யூவியா,
ரங்கா, ரஞ்சினி,
ரேவதி,
லறீனா ஏ.ஹக்,
வசந்தி- ராஜா, இ.வசந்தி,
வாசுகி குணரத்தினம்,
காப்டன் வானதி,
விண்ணரசி, வித்யா, வினோதினி,
விஜயலட்சுமி சேகர்,
விஜிகலா புவனேந்திரன்,
றஞ்சனி, ஜமுனா,
சா.ஜெயந்தி,
ஜெயந்தி தளையசிங்கம்,
ஷுணுகலை ஹஸீனா புஹார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org